மேலாண்மை பொன்னுச்சாமியின்

# இனி



திருவரசு புத்தக நிலையம்

மேலாண்மை பொன்னுச்சாமியின்

# இனி...

மேலாண்மை பொன்னுச்சாமி

23, தீனதயாளு தெரு,
தியாகராய நகர், சென்னை – 600 017.

முதற் பதிப்பு : டிசம்பர், 1993
இரண்டாம் பதிப்பு : அக்டோபர், 1995
மூன்றாம் பதிப்பு (திருவரசு) : செப்டம்பர், 2008

© உரிமை: ஆசிரியருக்கு

பதிப்பாசிரியர் : வானதி திருநாவுக்கரசு

விலை : ரூ. 45-00

- Title Melanmai Ponnusamyin INI...
- Author Melanmai PONNUSAMY
- Language : Tamil
- Subject : Novel
- Edition : Third Edition, September, 2008
- Pages : viii + 164 = 172
- Published by : **THIRUVARASU PUTHAKA NILAYAM**
  23, Deenadayalu Street,
  Thyagaraya Nagar, Chennai–600017.
  ✆ 24342810 / 24310769

- PRICE **Rs. 45-00**

Laser typeset at Azhagu Systems. Chennai-17. ✆ 4212 7214
Printed at : **NOVENA OFFSET PRINTING CO.**, Chennai - 5 ✆ 28446166, 28446891

# முன்னுரை

**"உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார் மற்றெல்லாம்**
**தொழுதுண்டு பின் செல்பவர்"**

*இது வள்ளுவன் உலகுக்குத் தந்த நீதி.*

**"உழவுக்கும் தொழிலுக்கும் வந்தனை செய்வோம்**
**வீணில் உண்டு களித்திருப்போரை நிந்தனை செய்வோம்."**

*இது எட்டயபுரத்துச் சூரியன் மகாகவி பாரதி நமக்கு இட்ட கட்டளை.*

வள்ளுவ நீதியும், பாரதியின் கட்டளையும் இன்று நம் தேசத்தில் பசுமைப் புரட்சி விளைவித்திருக்கிற நிகழ்வுகளால் என்ன கதிக்கு ஆளாகியிருக்கின்றன என்ற நிஜத்தைச் சொல்வதே இந்நாவல்.

செம்மலர் மாத இதழில் தொடராக வந்தபோதே இந் நாவல், வாசக முதிர்ச்சிபெற்றோரின் பாராட்டைப் பெற்றது. சமகாலச் சமூக வாழ்வின் மிகப்புதிய நடப்புகளையும், அதன் வேர்களையும் அறிமுகப்படுத்த வந்த இந்நாவலில்... மண்ணையும் வாழ்வையும் உயிரெனநேசிக்கிற —போர்க் குணம் கொண்ட— இரண்டு ஜீவன்கள், ரத்தமும் சதையும் கொண்ட நிஜமனிதர்களாய் வார்க்கப்பட்டிருப்பதை யாரும் காணமுடியும்.

அந்தப் பிறவி உழைப்பாளிகளின் ஆன்மாக்களை கிழித் தெறிந்த சமூக நிகழ்வுகளின் நிஜம் போதிய உக்கிரத்துடன் சொல்லப்பட வேண்டும் என்ற உந்துதலால் மேலும் சில புதிய அத்தியாயங்களை எழுதி இணைத்திருக்கிறேன்.

பசுமைப் புரட்சியின் எதிர்மறை விளைவுகள் வறண்ட மண்ணில் எத்தனை கொடிய சோகங்களாய்ப் படர்ந்திருக் கின்றன என்ற நிஜத்தின் ஆழத்தை உணர்த்துவதற்காகவே இப்புதிய பகுதிகள் சேர்க்கப்பட்டு, நாவல் மேலும் அழகு படுத்தப்பட்டிருக்கிறது.

இந்நாவலில் வருகிற பல நிகழ்ச்சிகள் எனது நேரடி அனுபவங்கள் இப்படித் தோட்டங்களில் பாடுபட்ட அனுபவங்கள். எனக்கு நிறைய உண்டு வாழ்க்கையை நேசிக்கிற எவரும் இந்நாவலை வெறுத்தொதுக்க முடியாது.

நதிப்பாசனமில்லாத கிராம விவசாயத்தையும் மனித உறவுகளையும் கிழித்து நாசம்பண்ணியிருக்கிற பசுமைப் புரட்சியின் மறுமுகத்தை இலக்கியத்தில் பதிவு செய்கிற முதல் நாவலே இதுதான் என்று நினைக்கிறேன்.

இந்நாவல் சமூகக் கடலுக்குள் புதைந்து கிடக்கும் ஏதேனும் ஒரு கருத்தை எடுத்துவந்து பிரச்சாரம் செய்கிறதா? ஆம், அது அதன் இயல்பு. இலக்கியத்தின் ஒட்டுமொத்த இயல்பே, எதையேனும் பகிர்தல்தானே! அந்தப் பகிர்தலில் ஓர் ஒழுங்கு அமையவேண்டும். பிரச்சாரம், நாவலின் சுபாவமாக இருக்கலாம். ஆனால் பிரச்சாரம் மட்டுமே இலக்கியமாகிவிடாது.

ஒரு நாவலை நாவல் என்று இனங்காட்டுவதே அதன் கட்டமைப்பும், உணர்வுகளைப் பகிர்ந்து கொள்கிற கலா நேர்த்தியும்தான். கலைத்தன்மையற்ற ஒரு நாவல், அது நாவலல்ல.

இதுதான் இன்றைய முற்போக்குப் படைப்பாளிகளின் முதிர்ச்சியான இலக்கியக் கண்ணோட்டம்.

ஆகவே, இந்நாவல், சுபாவப்படி இன்றைய கிராமங்களின் புதிய முகங்களை பிரச்சாரம் செய்தபோதிலும் கலை நேர்த்தியில் ஓர் இம்மி கூட குறைந்து விடக்கூடாது என்ற பிரக்ஞையுடன் படைக்கப்பட்டிருக்கிறது.

வாழ்க்கை நிஜங்கள் படைப்பாளியின் மன உலகத்தின் அனுபவங்களாகி — உயிரில் கலந்த ரத்தமாகி — படைப்பாக வெளிப்பட்டால்... அதில் அழகியலும், கலைத்தன்மையும் நிச்சயமாக முகம் காட்டும்.

அதன்படி இந்நாவலும் என் மன உலகத்தின் அனுபவங்களின் பீறிடல்தான் என்பதால்... இதில் கலைத் தன்மை ஒளிர்வதை யாரும் காணலாம்.

இராஜபாளையம் அருகிலுள்ள சத்திரப்பட்டியில் இந்திய ஜனநாயக வாலிபர் சங்க வட்டார மாநாடு. வாழ்த்துரை வழங்க அழைக்கப்பட்டிருந்தேன்.

ஓர் எழுத்தாளன் என்ற அளவிலான எனது அனுபவங்களோடு பேசி முடித்து விட்டு இறங்கியவுடன், வாலிபர் சங்க மாவட்டச் செயலாளர் சேகர் மகிழ்வோடு கை குலுக்கிப் பாராட்டினார். பாராட்டிய வேகத்தில் ஏதோ ஒரு நம்பிக்கை. ‘உங்களை மாதிரியான எழுத்தாளர்களுக்கு இதையெல்லாம் இலக்கியமாக்கணும்னு தோணனுமே’ என்றார், ஆர்வமிகுதியுடன். தீச்சட்டிக்குக்கூட விறகில்லே. இறந்து போன கிழவர் உயிருக்குயிராய்க் காப்பாற்றிவந்த கலப்பையை ஒடைச்சாங்க. அந்தக் கலப்பை மேலே கோழி உக்காரக் கூட அந்தக் கிழவர் சம்மதிக்க மாட்டாராம். அதைப் பத்தி அங்கேயிருந்தவுக எல்லாம் ஆச்சர்யமா பேசுனாக...”

நான் உயிரில்லாமல் ‘அப்படியா’ என்றேன்.

நான் ஆழமாக யோசித்தேன்.

“ஏன் மேலாண்மை, இதைவைச்சு நீங்க ஒரு சிறுகதை எழுதலாமே” என்றார்.

நான் ஆழமாக யோசித்தேன்.

அவர் சொன்ன அந்தச் சம்பவம் கனத்த நெருப்புப் பொறியாக என்னுள் விழுந்தது. வறண்ட பிரதேசத்தில் பசுமைப் புரட்சியை எதிர்கொண்ட முழு அனுபவங்களோடு இருந்த என் நெஞ்சுக்குள், அந்தப் பொறி கனன்றது; விரிந்து. பற்றிக் கொண்டு தீயாக எரிந்தது. அதுவே... ‘இனி’ என்கிற இந்நாவல்.

அந்தப் ‘பொறி’யை வழங்கிய சேகர் அவர்களுக்கு எனது இதய நன்றிகள்.

இது எனது இரண்டாவது நாவல். ‘முற்றுகை’ கல்கியில் தொடராக வந்த காலத்திலேயே என்னை வளர்த்து ஆளாக்கிய ‘செம்மலர்’ மாத இதழில் இது தொடராக வந்தது.

நியாயமாகச் சொன்னால்... ‘இனி’ நாவலை எழுதி முடித்த அனுபவம்தான் தொடர்ந்து நாவல் எழுதும் உணர்வையே ஏற்படுத்தியது.

இந்த நாவல், என்னை மிகவும் ஆகர்ஷித்த நாவல், என் மனசின் உணர்வுகளைக் குழைத்து, என் வண்ணங்களில் ஒரு பகுதியைக் கொட்டி எழுதப்பட்டது, இந்நாவல்.

இந்நாவல் பற்றிய உங்கள் பிரதிபலிப்புகளை மிகவும் ஆவலோடு —இளம் படைப்பாளிக்குரிய பதைப்போடு — எதிர்நோக்குகிறேன். உங்கள் பாராட்டுகள், என் பேனாவில் மை ஊற்றும். விமர்சனங்கள், பேனாவை இன்னும் கூர்மைப்படுத்தும். இரண்டுமே எழுத்தாளனுக்கு சுவாசத்தைப் போல அவசியம்.

எனது படைப்புகளை நூலாக வெளியிட முன் வந்திருக்கும் புகழ்மிக்க 'திருவரசு புத்தக நிலைய'த்திற்கும்—

கிராமத்துச் சிறுவனாக இருந்த என்னை எழுத்தாள னாக வார்ப்பதில் உரிய பங்காற்றிய எஸ். ஏ. பெருமாள் அவர்கள்—

என் முதற் சிறு கதையிலேயே என்னை இனம் கண்டு போற்றி வளர்த்த கே. முத்தையா, தி. வரதராசன் அவர்கள்—

தோழர்களாகவும் விமர்சகர்களாகவும் விளங்கிய அருணன், அ. குமரேசன், மற்றும் இனிய என் சக படைப்பாளிகள் உள்ளடக்கிய தமிழ்நாடு முற்போக்கு எழுத்தாளர் சங்கம்—

இந்நூலின் அட்டை படம் வரைந்துள்ள ஓவியர் திரு ஷியாம் அவர்களுக்கும்,

தமிழில் ஆரோக்கிய இலக்கியம் மலரவேண்டுமென நம்பிக்கையோடு விரும்புகிற நமது தமிழ் வாசகர்கள்—

அனைவருக்கும் எனது நன்றிகள் உரித்தாகும்.

நன்றி!

என்றும் உங்கள்,

**மேலாண்மை. பொன்னுச்சாமி**

மேலாண்மை மறைநாடு - 626127
இராஜபாளையம் (வழி)
விருதுநகர் மாவட்டம்.

✆: 04562-271233
கைப்பேசி: 9942610700

## ஆசிரியரின் பிற நூல்கள்

**சிறுகதைத் தொகுப்பு**

1. மானுடம் வெல்லும்
2. சிபிகள்
3. பூக்காத மாலை
4. மானுடப் பிரவாகம்
5. பூச்சுமை
6. தாய்மதி
7. காகிதம்
8. கணக்கு
9. விரல்
10. உயிர்க் காற்று
11. என் கனா
12. மனப்பூ
13. ஒரு மாலை பூத்து வரும்
14. அன்பூ வாசம்
15. வெண்பூ மனம்
16. மானாவாரிப் பூ
17. ராசாத்தி
18. மின்சாரப் பூ
19. பூமனச்சுனை
20. பூ மாயன்
21. பூக்கும் மாலை

**குறுநாவல் தொகுப்பு**

1. ஈஸ்வர...
2. பாசத் தீ
3. தழும்பு
4. கோடுகள்
5. மரம்

**நாவல்**

1. முற்றுகை
2. அச்சமே நரகம்
3. ஆகாயச் சிறகுகள்
4. ஊர்மண்
5. முழுநிலா

**இலக்கியக் கட்டுரை**

1. சிறுகதைப் படைப்பின் உள்விவகாரம்

மேலாண்மை பொன்னுச்சாமியின்

# இனி...

## 1

கரிமூட்டம் வெந்து கொண்டிருந்தது. சின்னக் குன்றுபோல இருக்கிறது. அங்கே இங்கே புகை திமிறிக் கொண்டு வெளி வருகிறது. பொந்து விழுந்துவிடக் கூடாதே என்று ராமையா சுற்றிச் சுற்றி வந்தான்.

ஆவரங்கொழை போட்டு மண்ணையள்ளிப் போட்டு பூசி மெழுகிய மாதிரி இருக்கும் மூட்டத்தில் அங்காங்கே மிதித்து வைத்தான். புகை அதிகமாய்ச் சீறுகிற இடமெல்லாம் மண்ணையள்ளி இறைத்தான்.

ராமையாவையே கவனித்துக் கொண்டு குத்துக்கால் வைத்து உட்கார்ந்திருந்தான், சுப்பிரமணி. இன்னைக்குப் பள்ளிக்கூடம் லீவ்.

வெயில் கொலைகார வெயிலாக அடிக்கிறது. உச்சிச் சூரியன் அக்னியை அள்ளியெறிகிறமாதிரி தகிக்கிறது. ஒரு பொட்டு நிழல்கூட இல்லை. இந்தப் பகுதி பூராவும் சீமைக் கருவேல மரங்கள் அசோக வனமாய்க் கிடக்கும். ஒன்றுடன் ஒன்றாகப் பின்னிப்பிணைந்து அடர்த்தியாகக் கிடக்கும்.

கால்வைக்க இடமிருக்காது. முள்மரக்காடு. காலில் தைத்து விட்டால்... விஷம் மண்டைக்கு ஏறிவிடும். வலி கொன்று எடுத்துவிடும். கோழிக்குஞ்சு புண்ணைக் கொத்திக் குதறுகிற மாதிரி வலி.

பச்சைப் பசேலென்று கிடக்கிற வேலிமர அடர்த் திக்குள் இருட்டு நிரந்தரமாய் உட்கார்ந்திருக்கும். எங்கு பார்த்தாலும் ஆண்மயில்கள் சுதந்திரமாகத் திரியும்.

காலைநேரத்தில் பார்த்தால் அங்கே இங்கே உட் கார்ந்து கொண்டு நீண்ட தோகைகளைத் துவளவிட்டு, சிக் கெடுத்துக் கொண்டு வெயில் காய்வது பார்க்க அத்தனை லட்சணமாக இருக்கும்.

சுப்ரமணி அந்த மயில்களை விரட்டி விரட்டிப் பதறடிப்பதில் ரொம்ப சந்தோஷப்படுவான். பெண் மயில்கள் லட்சணமில்லாமல் அலையும். மயில் குஞ்சுகளைக் கூட்டிக்கொண்டு வீட்டுக்கோழிகளைப் போல் நிதானமாக பயமில்லாமல் திரியும்.

மூன்று வருஷமாக மேல்மழை இல்லை. புரட்டாசி, ஐப்பசிகளில் கூட மழை அத்திபூக்கும். தை மாசிகளில் மழையே பெய்யவில்லை. மலட்டு வெய்யிலும் பனியும்தான். ஆடிப்பட்ட மழையே துப்புரவாக இல்லை. ஒரு வெள்ளாமை விளைச்சல் கிடையாது. கரிசல்காடு, செவல்க்காடு பூராவும் வெம்பரப்பாகக் கிடந்தது. உழவும் இல்லை. விதைப்பும் இல்லை. ஒரு புல்பூண்டு கூட கிடையாது. தீப்பிடித்து எரிந்து முடிந்த காடாகக் கிடந்தது.

இறவைகளில் தண்ணீர் வரட்டிழுப்பாகிப் போய் விட்டது. மிளகாயில் தேன்நோய். பருத்திச் செடி பூராவும் அப்பள நோயில் முறுக்கேறி கருத்துக் கிடந்தது. ஜனங்களுக்கு கண்ணுமுழி பிதுங்கியது.

சம்சாரிகளுக்கு சம்சாரித்தனம் பண்ண வழியில்லை. மாடு கன்றுகளைக் காப்பாற்ற கதியில்லை. ஒரு வேலையு

மில்லை. மதிய நேரத்தில் கூட பெண்கள் கூரை நிழல்களில் பேன் பார்த்துக் கொண்டிருந்தார்கள்.

ஒரு வருஷம் மழையில்லை என்றால் மானாவாரிப் பூமியில் ஜீவனம் கிடையாது. மூன்று வருஷம் தொடர்ந்து மழையில்லை என்றால்—? ஒரு வேலிமரம் கூட தப்பவில்லை. சகலத்தையும் வெட்டி வெட்டி விறகாக்கி, கரிமூட்டம் போட்டாயிற்று.

இந்த மூன்று வருஷமாய் கிராமத்து ஜனங்களுக்கு இதில் தான் வயிறு நனைகிறது. ஒருமரம் கூடத் தப்ப முடிய வில்லை. சாகாவரம் பெற்று வந்த மஞ்சணத்திகளைக் கூட கண்ணில் காணவிடாமல் ஜோலியை முடித்தாகி விட்டது.

ஒரு பொட்டுப் பச்சைகூட மிஞ்சவில்லை. மயில்களுக்கு நிற்க நிழலில்லை. குடி பெயர்ந்து போய்விட்டன. இந்தப் பகுதியின் அழகையும் அள்ளிக் கொண்டு செடிகொடிகள் உள்ள இடத்துக்குப் போய்விட்டன.

மயில்கள்பாடு தேவலை, பச்சை கண்ட இடத்துக்கு நகர்ந்துவிட முடிகிறது. மனிதர்களால் அப்படிப் போய்விட முடியவில்லையே.

நிலத்தைத் தூக்கிக் கொண்டா போகமுடியும்? வீடுகளை மடித்து கட்கத்தில் இடுக்கிக் கொள்ளவா முடியும்?

மழை இப்பப் பெய்யும், நாளை பெய்துவிடாதா என்கிற நம்பிக்கையையும் தொலைத்து விடவாமுடியும்?

அந்த நம்பிக்கையில் தானே, ஜனங்களின் மொத்த வைராக்யமே தொங்கிக் கொண்டிருக்கிறது. இந்தப் பஞ்சத்தி லும் பசிபட்டினியிலும் பரிதவித்து அலைந்தாலும் போக்கிட மின்றி பொருமிக் குமைந்தாலும் விடாமல் வாழ்க்கையோடு மல்லுக்கட்டுகிற துணிச்சலைத் தருகிறது.

சுப்ரமணியின் அய்யா பொன்னையா. ஆட்டுக்காரர். செம்மறியாடுகள் வைத்திருக்கிறார். அதுதான் தொழில்.

இந்தப் பஞ்சத்தில்—தீப்பிடித்துக் கருகிப்போன இந்தப் பூமியில் — ஆடுகளை வைத்துக்கொண்டு எப்படிப் பராமரிப்பது?

மேய்வதற்குப் புல்லில்லாமல் காய்ந்த கரடுகளையும் புழுதியையும் எத்தனை நாளைக்கு நக்கிக்கொண்டு திரியும்?

அந்த வாயில்லா ஜீவன்களைப் பட்டினி போட்டுப் பார்க்க முடியுமா? அந்தப் பாதரவை எப்படித் தாங்குவது? எப்படிச் சகிப்பது?

பொன்னையா மாதிரியான ஆட்டுக்காரர்களெல்லாம் ஆடுகளைப் பற்றிக்கொண்டு மேல்காட்டுக்குப் போய் விட்டார்கள். சேத்தூர், சிவகிரி என்கிற காடுகளுக்கு. மலைப் பகுதிகளும் வயற்காடுகளும் நிறைந்த பகுதி. செழித்தபகுதி. மலைகளையொட்டிக் கண்மாய்கள். சட்டெனப் பெருகி விடும். வளமையான மண். ஏழு தலைமுறைப் பஞ்சத்துக்கும் ஈடுகொடுக்கும் பச்சைப் பசப்பு.

சுப்பிரமணிக்கு கால் பொசுக்கியது. காலை மாற்றி மாற்றி வைத்துக்கொண்டு உட்கார்ந்திருந்தான். வெக்கரித்த வெயில் தீயாய்ப் பொசுக்கியது. கண்ணை எறிந்தால்... எங்கும் அனல் வெயில். கானல் அலைஅலையாக ஓடுகிறது. பார்க்கிற கண்கள் தான் கரிக்கிறது. ஒரு பச்சைகூடக் கண்ணில் குளிர்ச்சியாகத் தடவவில்லை...

“ஏன்... சித்தப்பா, அடுத்த தடவை கரிமூட்டம் போடுறதுக்கு என்ன செய்வீக?”

“அதாண்டா, எனக்கும் யோசனை. எல்லா மரங்களை யும் காலி பண்ணியாச்சு. ஒரு குச்சி வெறகு கூட காட்டிலே கிடையாது”

“ஆத்துக்காட்லே?”

“அதானே — மொதல்லே காலியாச்சு.”

ராமையா கரிமூட்டத்தின் வடபகுதியில் கையால் தட்டிப் பார்த்தான். 'பொத் பொத்' தென்ற வேற்றுச் சத்த மாய்க் கேட்டது. காலால் அந்த இடத்தை மிதித்து அமுக்கினான்.

வெயிலில் கருத்துப்போய், கண்களைச் சுருக்கிக் கொண்டு உட்கார்ந்திருந்த சுப்பிரமணியைப் பார்த்தான்.

"ஏண்டா சுப்பு, எள்ளுதான் காயணும், காயுது. எலிப் புழுக்கையும் எதுக்குக் காயணும்?"

"என்ன சித்தப்பா சொல்லுதீக?"

"ஏலேய்... நாந்தான் வெயில்லே கிடந்து சீரழியுறேன். தலையெழுத்து, வவுத்துப்பாடு. காலக்கொடுமை, சரி, ஒனக்கு என்னாச்சு? நீயும் எதுக்கு வெயில்லே கெடந்து வேகணும். என்ன ஜோலி?"

"சும்மாதான் சித்தப்பா. ஐயாப்பா ஒன்னும் பேச மாட்டேங்குறாரு, கட்டில்லேயே கெடக்குறார். கொரட் கொரட்டுன்னு இழுத்துக்கிட்டிருக்கு. அவரையே பாக்கப் பாக்க அழுகையா வருது. அதான் இங்குட்டு வந்துட்டேன்."

"பெத்த புள்ளைக நாங்க. எங்களுக்கு இல்லாத பாசமும் பிரியமும் பேரப்பய — ஒனக்கு வந்துருச்சோ?"

"நீங்கதா ஐயாப்பா கூடப் பேசமாட்டீகளே, கோவிச்சுக் கிட்டு இருக்கீக. எங்க அய்யாவும் பேசமாட்டாரு. மொகத்தைக் கூடப் பாக்க மாட்டாரு, பாவம் ஐயாப்பா, அவருக்கு நாந்தான் தொணை."

"அவரு கெடக்காரு கெழட்டுச் சனியன். பழைய காலத்து ஆளு. பழைய நெனைப்புலேயே பேசிக்கிட்டு இருக்காரு. இப்ப இருக்கிற காலத்தைப் பத்தி அவருக்கென்ன புரியுது? எங்க தெரியுது? எங்களை எங்க வழியிலே பொழைக்கவிடாம வம்புக்கு வந்து, வழி மறிச்சுக்கிட்டு

நின்னா... எங்களுக்குக் கோவம் வராதா? எரிச்சலா வராதா?"

"உங்க வழியை அவரு ஒன்னும் மறிக்கலே, நீங்க தான் வழிதொகை புரியாம பாதை மாறி அலையுறீக?"

"ஏலேய்..." என்று சினந்து அதட்டினான் ராமையா. அந்தச் சின்னப்பயலை வெளத்துடன் பார்த்தான். நெஞ்சுக்குள் பீறிட்ட கெட்ட வார்த்தைகளை சிரமப்பட்டு கட்டுப் படுத்திக் கொண்டான். ராமையாவின் மீசைக்குள் உதடுகள் துடியாய்த் துடித்தன. பொங்கிச் சீறிய ஆத்திரத்துடன் மட்டியைக் கடித்துக் கொண்டான்.

"என்னாலே பேசுதே? சின்னா நாயி, ஒனக்கு அம்புட்டும் தெரிஞ்சு போச்சோ? சில்லாங்குச்சி கணக்கா இருந்துக்கிட்டு, பேச்சா பேசுதே? படுவா, பல்லை ஒடைச்சுப் போடுவேன்..."

சுப்பிரமணி அரண்டு போனான். ஆனாலும் அசந்து விடவில்லை. "என்னத்தைப் பேசிட்டேன்? உள்ளதைத் தானே சொன்னேன்?"

"என்னதுடா... உள்ளது? முளைச்சு மூணு எலை விடலை. அதுக்குள்ளே நீ அப்பனைக் கொறை சொல்ல ஆரம்பிச்சுட்டீயோ...? பாதை மாறி அலையுறதைக் கண்டு பிடிச்சுட்டீயோ?"

"நீங்க மட்டும் ஐயாப்பாவை கெழட்டுச் சனியன்னு சொல்லுதீக. சொல்லலாமோ?"

"எப்பச் சொல்லுதோம்? கல்யாணம் முடிச்சு புள்ளை குட்டிக ஆனப் பெறகு சொல்லுதோம். நீ இப்பவே— எதுத்துப் பேசுதீயேடா. தோலை உரிச்சுப் போடுவேன் படுவா. வயசுக்குத் தக்க வாய்பேசணும்டா..."

சுப்பிரமணி மௌனம் காத்தான். எதிர்த்து வார்த்தைகள் வருகின்றன. வரிசைமாரி பீறிடுகின்றன, ஆனாலும் தலையைக் கவிந்து கொண்டான். அவனது

மண்டை நிழல் காலடியில், அதில் ஊர்ந்து போகிற தீ யெறும்பு.

ராமையா இன்னும் கோபத்துடன் சீறிக் கொண்டிருக் கிறான்.

"எல்லாம்... அந்தக் கெழடு குடுத்த செல்லம். அவரு ஒன்னைக் கொம்பு சீவி விட்டிருக்காரு, அவரு உருவேத்திவிட்ட பாடத்துலே... நீ இப்படிப் பேசுதேடா... படிக்கிற பய நீ மரியாதை பாத்துப் பேச வேண்டாமா?"

"படிச்சா... நெசத்தைச் சொல்லக் கூடாதா? சித்தப்பாவும் அய்யாவும் தப்புசெய்தா, தப்புன்னு சொல்லக் கூடாதா?"

"சொல்றதுக்கு ஒரு தகுதி வேணும்டா, வயசு வேணும்டா, மீசை மொளைக்கணும்டா. மீசை மொளைச் சாத் தாண்டா... முழுத்த மனுசன். அப்பத்தான் சொந்தமா முடிவுக்கு வர்றபக்குவம் வரும். அப்பனை ஆத்தாவைக் கொறை சொல்ற யோக்யதை வரும்"

இந்தக் கரிமூட்டத்தைப் பிரிக்க ரெண்டு நாளாகும். கரிகளை ஒதுக்கி மூட்டையாக்கி... துட்டாக்க வேண்டும். பணம் கைவந்து சேர எப்படியும் இன்னும் பத்து நாளாகிவிடும்.

அப்புறம் என்னசெய்ய? ஒரு தும்பு தூசு கூட இல்லை. வெறகு இல்லை. மரமும் இல்லை. பிழைப்புக்கு வழி?

ச்சே! கரிமூட்டம் போடுறதே, பெரும் தொல்லை. பகல் பூராவும் விறகுகளை வெட்டி ஒதுக்கணும். வெட்டிப் போட்ட விறகுகளை நறுக்கணும். மூட்டத்தில் அடுக்கணும். ஆவாரங்கொழை அறுத்துச் சேர்க்கணும்.

கரி மூட்டம் அடுக்கித் தீமுட்டி விட்டால்... ரவ்வும் பகலும் மயானக்கரை காத்த மாதிரி காக்க வேண்டும். கண் முழிப்பாக இருந்து வேக வைக்க வேண்டும். கொஞ்சம் அசந்துவிட்டால் கூட... சாம்பலாகிப் போய்விடும். சர்வ நாசம்.

இந்தக் கேடுகெட்ட தொழிலுக்கும் இப்போது வழி யில்லாமல் போய்விட்டது. பிள்ளைக்குட்டிகளை எப்படிக் காப்பாற்ற? வயிற்றுப்பாட்டுக்கு என்ன வழி? ஒரு வேலை கூட இல்லையே...

வெள்ளாமையே இல்லாமல் போய்விட்ட நாளில், கூலி வேலை எங்கிருந்து கிடைக்கும்? எப்படிப் பிழைக்க? அடுத்து வரும் நாட்களை எப்படி எதிர்கொள்ள?

நினைக்க நினைக்க மலைப்பாக இருக்கிறது ராமையாவுக்கு. கையைக் கட்டிப்போட்ட மாதிரி இருக்கிறது. மனசில் ஈரமில்லை. எந்த யோசனையும் ஓடமாட்டேன் என்கிறது. காய்ந்து கனல் பறக்கிற மனசில்... என்ன மாற்றுவழி தோன்றப் போகிறது? அப்போதுதான்...

ஊர்த்திசையிலிருந்து ஒருத்தர் 'வேகுவேகெ'ன்று வந்தார். அவர் வருகிற வரத்தே சரியாயில்லை. ஏதோ பொல்லது நடந்துபோச்சு...

விக்கிக் கொண்ட கோழியைப் போல விதிர் விதிர்த்து ராமையா முழித்தான். வெள்ளை வெயிலில் ஓட்டமும் நடையுமாய் வருகிற அந்தக் கருத்த உருவம். ஒரு சனியன். ஒரு கெடு காலம். ஒரு பொல்லது. ஒரு கெட்ட செய்தி.

மனசுக்குள் 'திக் திக்' கென்று அடிக்க... ராமையா எதிர்கொண்டு சத்தம் கொடுத்தான்.

"என்ன ஆச்சு? ஏன் இப்படி ஓடியார்றே?"

அந்த ஆளுக்கு ஓடிவந்த களைப்பில் வாய் எழவில்லை. உதடுகள் காய்ந்து பிசின்மாதிரி ஒட்டிக் கொண்டது. உடம் பெல்லாம் வியர்வைப் பெருக்கு. முகத்தில் பதற்றம். கலவர மூட்டுகிற பதைப்பு.

"என்ன ஆச்சு? சொல்லித் தொலையேன்..."

"உங்க... ஐயா... ம்ச்ச்க்... போய்ச் சேர்ந்துட்டாரு"

மனசுக்குள் பக்கென்றது. உடலெங்கும் பரவிய அதிர்ச்சி.

"உயிர் போயிருச்சா?"

"ம்..."

"பாத்துட்டீகளா?"

"ம்..."

மூட்டத்தை கவலையோடு பார்த்தான். கண்ணு முழி பிதுங்குகிற பஞ்ச காலம். மனசு காய்ந்து வரண்டு போய்க் கிடக்கிறது.

"அடக்கொடுமையே... போற உசிரு இன்னும் நாலு நாளு கழிச்சு போய்ச் சேரக்கூடாதா? கரிமூட்டத்தைப் போட்டுட்டு எப்படிப் போக? துட்டாச்சே..."

"நா வேணும்னா மூட்டத்தை பாத்துக்கிடுதேன்..."

"நல்லா பாத்துக்க. அசந்துராதே சாம்பலாயிரும். ம்... கவனம் எச்சரிக்கை... பாத்துக்க..."

சுப்பிரமணி செய்திகேட்டு விருட்டென்று எழுந்தான். கோவென்று அழ ஆரம்பித்துவிட்டான். "ஐயய்யோ... ஐயாப்பா... ஐயாப்பா" ஒரே அழுகையாய் அழுதான்.

சுப்பிரமணிக்கு நிஜமாகவே மனம் குழைந்து போயிற்று. எந்நேரமும் தலைமாட்டிலேயே உட்கார்ந்திருப்பவன். 'ஐயாப்பா ஐயாப்பா' என்று கூப்பிட்டுக்கொண்டிருப்பவன்.

உயிர் பிரிகிற போது ஓரத்தில் இருக்காமல் போய் விட்டோமே என்று அவன் மனம் கிடந்து தவித்தது. கண்ணால் தேடியிருப்பாரே..., பேரனைக் காணத் துடித்திருப்பாரே... ஏமாற்றத்தால் தவித்திருப்பாரே. உயிருக்குயிரான பேரனைப் பார்க்காத தவிப்பில் உயிர்பிரிந்திருக்குமே...

நினைக்க நினைக்க அவனுள் குற்ற உணர்ச்சி முள்முள்ளாக உறுத்தியது. அந்த உறுத்தல் தாளமாட்டாமல் ஓங்கி ஓங்கி அழுதான். வழிகிற கண்ணீரைச் சட்டைக் கையால் துடைத்துக்கொண்டான். கண்ணீர் கண்ணுக்கடியில் இழுவிக்கிடந்தது.

ராமையா, அண்ணன் மகனின் தலையைப் பரிவோடு தடவினான். ஓங்கி ஓங்கி அழுகிற சுப்பிரமணியை ஆதரவோடு சேர்த்து அணைத்துக் கொண்டான்.

தனது அய்யாவுக்காக இந்தப் பொடியன் அழுவதில்... ராமையாவுக்குள் எங்கோ ஒரு மூலையில் ஈரக்கசிவு. ஒரு குழைவு.

புள்ளைகளுக்கும், மருமகளுக்கும் ஆகாமல் போய் விட்ட ஐயா, இந்தச் சின்னப்பயலை இவ்வளவு ஈர்த்து வசீகரித் திருக்கிறார் என்றால்.

நாம்தான் அவரது அருமையை உணராமல் இருந் திருக்கிறோமோ... என்று ஒரு சுயவிமர்சனம் ஒரு எறும்பு போல உள்ளே கடிக்கிறது.

நாம் உணராத அருமையை — அய்யாவின் சிறப்பை — சிறப்பின் உன்னதத்தை— இந்தச்சிறுவன் மனசால் உணர்ந்திருக்கிறான்.

ஐயாப்பாவுக்காக தன்னிடம் வாதாடுகிறான். எதிர்த்துப் பேசுகிறான்... வரம்புமீறி வாயாடுகிறான்.

இவன் பார்த்த அருமையை தான் பார்க்காமல் போனதேன்?

ராமையாவுக்குள் ஐயாவை நினைத்துக் கலங்கினான். சின்னவயதில் தன்னைத் தோளில் வைத்துச்சுமந்துகொண்டு அலைந்தது... முன்னால் படுக்கப்போட்டுக் கொண்டு ராத்திரிக்கு ராத்திரி கதைகள் சொன்னது... எல்லாம் அலை அலையாக நெஞ்சுக்குள் வர... முட்டிக்கொண்டு வருகிற அழுகை...

“சரி... வாடா போவமா சுப்பிரமணி!”

“ம்...”

“அழுவாதடா...”

“ம்...”

"அழுதா... ஐயாப்பா வந்துரவா போறாரு?"

"ம்..."

சுப்பிரமணி ரொம்ப அழுதான். சத்தமாய் அழுதான். வெடித்துக் கொண்டு பீறிடுகிற அழுகை

ராமையாவின் தொண்டைக்குள்ளும் ஏதோ முட்ட, வார்த்தை குழறியது. தடுமாறினான். கண்களில் ஈரக்கனம், மனசுக்குள் ஒரு மூச்சுத்திணறல்.

இருவரும் ஊர்த்திசையை நோக்கி நடந்தனர். மழை யில்லாமல் ஊரும் வாழ்க்கையும் வறண்டு வெடிப்புக்கண்டு கிடப்பதை, கரிமூட்டம் விடுகிற புகைச்சுருள் உணர்த்திக் கொண்டிருந்தது.

# 2

ராமையா யோசனையுடன் நடந்தான். பின்னால் சுப்பிரமணி. அவனது கால்களில் ஒரு பரபரப்பு. சித்தப்பாவை முந்திக் கொண்டு ஓடத்துடிக்கிற தவிப்பு.

முந்திவிட்டான்.

"சித்தப்பா நா முன்னாலே போறேன்."

"இருடா... நானும் வாரேன்லே?"

"நீங்க வாங்க: நா போறேன்."

ஓட்டம் எடுத்துவிட்டான். தாயைப் பார்த்து ஓடுகிற பசுங்கன்றின் வேகம். விடுபட்ட அம்பாக விர்ரென்று ஓடினான். ஓடுகிற ஓட்டத்தில் சட்டையின் முதுகுப் பகுதி காற்றில் உப்பிப்புடைத்தது.

ஓடுகிற சுப்பிரமணியைப் பார்த்தான் ராமையா. அவன் மனசுக்குள் இருக்கிற பாச உணர்ச்சி, ஐயாப்பாவை அவன் உள்ளூர விரும்புகிற விருப்ப அடர்த்தி...

ஐயாப்பாவோடு சேர்ந்து 'செத்துப் போ' என்றால் கூட... செத்துப் போகத்தான் செய்வான். அத்தனை பிடிப்பு. ஈர்ப்பு. வசீகரம்.

இவன் வயசில் இருக்கும் போது ராமையாகூட ஐயாவை இத்தனை பிரியமாக நேசித்ததாக ஞாபகமில்லை.

ரொம்பச் சிறுவனாக இருந்த போது ஐயா பிரியமாக இருப்பார். அது ஞாபகத்தில் இருக்கிறது. தூக்கித் தன்னை வலது தோளில் உட்கார வைப்பார். இவனது ஒருகால் அவரது நெஞ்சிலும், மறுகால் முதுகிலும் உரசிக்கிடக்கும்.

ஐயாவின் உச்சிமயிரை அழுந்தப் பிடித்துக்கொள்வான். தெருவில் இப்படித்தான் தூக்கிக் கொண்டு போவார். அவருக்கு அதில் ரொம்பப் பெருமை.

அம்மாகூட ஐயாவைக் கண்டிப்பாள். அவளது கண்டிப்பும் நிஜமாக இருக்காது. பூரிப்பில் மலர்கிற முகத்தோடுதான் கண்டிப்பாள்.

"இதென்ன... ஆம்பளைக்கு அறிவு வேண்டாம்? இப்படித்தான் தெருவுலே புள்ளையைத் தூக்கிக் கிட்டுத் திரிவாகளாக்கும்? கழைக் கூத்தாடிக் கணக்கா...?"

'ஏம்புள்ளையை நா எப்படியும் தூக்கிச் சுமப்பேன். அதைக் கேட்க இங்க யாரு இருக்காக?"

"ஆமா... நீங்கதான் அதிசயமா ஆம்பளைப் புள்ளை பெத்துருக்கீகளாக்கும்? ஒலகத்துலே இல்லாத ஆம்பளைப் புள்ளை."

'ஏ கழுதே... ஒனக்கு என்ன தெரியும், எம்புள்ளைக அருமை? பேசாம கிடையேன்... கழுதே"

அய்யா... எப்பவும் அம்மாவை 'கழுதை கழுதை'ன்னு தான் கூப்பிடுவார். அவளுக்கும் அது செல்லப் பெயர் போலிருக்கிறது. தட்டிச் சொல்லவே மாட்டாள்.

ஏன் இப்படி என்று கேட்கவே மாட்டாள்.

*ஆனால்... ராமையாவும், பொன்னையாவும் கொஞ்சம் வளர்ந்த பிறகு... பிள்ளைகளை விவசாய வேலைகளில் இறக்கி விட ஆசைப்பட்டார்.*

*மண்வெட்டியை எடுத்துத் தண்ணீர் பாய்ச்சும்படி அண்ணனைச் சொல்லுவார். அவன் மாட்டேன் என்று ஊமையாய் இருப்பான். உம்மென்று இருப்பான்.*

*சொல்லுவார். கெஞ்சுவார். அறிவுரை சொல்லுவார். அதற்குப் பிறகும் உம்மென்று முகம் சுண்டிப்போய் நிற்பான். அண்ணன்.*

*அவ்வளவுதான்!*

*ஐயாவுக்குக் கோபம் தலைக்கேறிவிடும். முகம் சிவந்து போகும், கண்கள் சுருங்கிக் கொள்ளும்.*

*'நாயே... பேயே... ஊமைக் கழுதை' என்று வாய்க்கு வந்தபடியெல்லாம் பேசிச் சீறுவார். காட்டுக் கத்தலாய் கத்துவார்.*

*"சொந்தப் புஞ்சையிலே தண்ணி பாச்சமாட்டேங் குறியே... பாடுபடப் பயந்தா... கஞ்சிக்கு எங்க போவே? போடா, நாயி! எம் மூஞ்சியிலே முழிக்காதே" என்று அனலாய் சீறுவார்.*

*கண்கலங்க அண்ணன் சிறுமைப் பட்ட மனசோடு ஓடிப் போய்விடுவான். இவனுக்கும் இதுதான் கதை. விவசாய வேலைகளில் படிய மறுக்கிற போது... தீயாய் மாறி விடுவார். ஐயா ஐயாவாய் இருக்கமாட்டார். வேற்றாளாகி விடுவார்.*

*ஒருநாள் —*

*அவனைக் கமலை இறைக்கும்படி சொன்னார். மறுத்தான். சாட்டைக் கம்பை எடுத்துக் கொண்டு அடிக்க ஓடி வந்தார். ராமையா ஓடிப்போய் விட்டான்.*

பொன்னையாவும், ராமையாவும் புஞ்சை வேலைகளில் ஒத்தாசை பண்ண மறுப்பதை ஐயாவால் சகித்துக் கொள்ளவே முடியாது.

வாய்க்கும் கைக்கும் இதே பேச்சுத்தான்

"சோம்பேறிப் பயக... உழைக்குறதுக்கு மேல் வலிச்ச பயக... சோறுதர்ற மண்ணுலே குனிஞ்சு வேலை செய்ய வெக்கப்பட்டா... இவங்க வெளங்குவாங்களா? இவங்களை வைச்சிருக்கிற வீடுதான் உருப்படுமா?"

அம்மாவுக்கும் அய்யாவின் அபிப்ராயம்தான். அவர் சொல்வதற்கு முகம் சுளித்துக்கொண்டு மௌன சாட்சியாய் இருப்பாள்.

தனிமையில் ஒவ்வொரு நேரம் புலம்பவாள்.

"நம்ம வவுத்துலே நல்ல புள்ளைக பெறக்கலை. ரவ்வுன்னும் பாராம, பகலும்னும் பாராம காடு காடு என்று உசுரைக் குடுக்குற மனுசரோட ரத்தத்துலே பெறந்த புள்ளைக இந்த லட்சணத்துலேயா இருக்கும்? இது நம்ம வாங்கி வந்த விதி. இதுக்குப் புள்ளைகளைக் கரிச்சுக்கொட்டி என்ன செய்ய?"

அய்யா ஆசைப்பட்டார். தன் பிள்ளைகள் தன்னைப் போல் உழைக்க வேண்டும். கணக்கு வழக்குப் பார்க்காமல் பாடுபடவேண்டும். மண்ணை நேசிக்க வேண்டும். புஞ்சையை அழகு படுத்த வேண்டும். வியர்வையில் அழகு படுத்த வேண்டும்.

அவரது பிள்ளைகள் அவருக்கு வாரிசுகளாக இருக்க வேண்டும். எல்லா விஷயங்களிலும். புஞ்சையை நேசிப்பதிலும், சம்சாரித்தனத்திலும் அவரது தொடர்ச்சியாக இருக்கவேண்டும்.

ஓர் உழைப்பாளித் தகப்பனுக்குரிய நியாயமான ஆசை, விருப்பம். கனவு. தன்னைத் தன் பிள்ளைகளிடம் தரிசிக்க விரும்புகிற ஆர்வம். தன் சாயலை—குணத்தை —இயல்பை—

சுபாவத்தை சுவீகரித்துக் கொண்ட வடிவங்களாகப் பிள்ளைகள் இருக்கவேண்டும்.

ஐயாவின் அடையாளம் எதுவும் இவர்களிடம் இல்லை என்பதைக்காணப் பெரும் ஏமாற்றம். ஒரு தகப்பனாருக்குரிய ஏமாற்றம். உள்மனத்தை மூளிப்படுத்திவிடுகிற அந்தரங்க ஏமாற்றம்.

அந்த ஏமாற்றம் கோபமாகவே வெளிப்பட... பிள்ளைகள் மேலும் மேலும் அந்நியப்பட்டனர். அய்யாவை வெறுத்தனர். அதுமட்டுமல்ல...

இவர்களுக்கு விபரம் தெரிகிற வயதில்... விவசாய அனுபவம் கசப்பாக இருந்தது.

விளைந்த வற்றல் முழுவதையும் குவிண்டால் நூற்றிப் பத்து என்று அள்ளிக் கொண்டுபோய் விடுகிறார்கள் வியாபாரிகள். ரெண்டாவது மாசமே வற்றல் விலை எழுநூறு ரூபாய். இந்த அனுபவத்தில் மறுவருஷம் வற்றலை இருப்பு வைக்க... நாளாகியும் விலை ஏறவேயில்லை. வற்றல் கருத்துப் போயிற்று. ஒசியாய்த் தூக்கிவிட்ட மாதிரி குவிண்டால் எழுபத்தேழுக்கு விற்றுத்தொலைத்தார்கள்.

சொஸைட்டிக்காரர்கள் எண்ணூறு ரூபாய் கடன் தந்தார்கள். மூன்றாவது வருஷம் நாலாயிரத்து முந்நூறு என்று பேரேட்டைக் காட்டுகிறார்கள். "என்னய்யா" என்றால், "வட்டியும், தவணை கடந்த வட்டியும் சேர்ந்து இந்தத் தொகை" என்கிறார்கள்.

சூட்டும் சட்டையும் போட்டுக் கொண்டு ஜீப்பில் வந்து இறங்கி ஏகத் தடபுடல் பண்ணினார்கள். மொத்தக் கிராமமே காடுகளுக்கு ஒடித் தலைமறைவாயிற்று. கண்ணில் தென்பட்ட ஒரிருவர் வீடுகள் ஜப்தியாயிற்று.

வீடுகளில் உள்ள பண்ட பாத்திரங்களைப் பொறுக் கினர். காளை மாடுகளை அவிழ்த்துக் கொண்டு போய் ஊர் நடுவே ஆலமரத்தில் கட்டிப் போட்டனர்:

சம்சாரிகளை ரொம்ப ஏளனமாகப் பேசினர். பேசிய பேச்சுகள் ஒவ்வொன்றும் இங்கிட்டு குத்தி அங்குட்டு வாங்கியதைப் போலிருந்தது.

அப்படி ஜப்தி செய்யப்பட்டு அசிங்கப்படுத்தப்பட்ட வீடுகளில் ஒன்று... ராமையா வீடும்.

அப்போது ராமையாவுக்கு எட்டு வயசிருக்கும். வீடு முழுக்க அழுகையும் கண்ணீருமாய்க் கிடந்தது. அவமானம் தாங்காமல் துடித்தார்கள்.

அப்போதே அவனுக்கு சம்சாரித்தனத்தின் மீது பயமும் வெறுப்பும் ஏற்பட்டுவிட்டது.

'ச்சே— மண்ணைக்கட்டி மாரடிக்கிறதைவிட மானங் கெட்ட காரியம் ஒன்னுமில்லை' என்று மனசு கிடந்து காறித் துப்பியது.

ஆயிற்று. அய்யாவுக்கு வயசாகி— தளர்ந்து ஒரு வேலையும் செய்ய முடியாத போது, அண்ணன் செம்மறி யாடு மேய்க்கிறவனாக இருந்தான். ராமையா சைக்கிளை வைத்துக்கொண்டு சில்லறை வியாபாரம் செய்து கொண்டிருந்தான்.

புஞ்சை ஒரு சுமையாக இருந்தது. அனாவசியமான விரையமாக சும்மா கிடந்தது.

செலவுக்கும் சிக்கலாக இருந்தது. ஐயாயிர ரூபாய்க் கடன் உடனடித் தொல்லையாக இருந்தது.

ஆக சும்மா கிடத்த புஞ்சையை யாருக்காவது ஒத்தி வைத்து விடலாம் என்ற யோசனை சொன்னதில் ராமையா மேல் அய்யாவுக்கு ஏகக்கோபம்.

"அந்தப்பய ஆவியே ஆகாது" என்று முகம் முறித்துப் பேசிவிட்டார். போதாக்குறைக்கு ஒத்தி வைத்துக் கிடைத்த பணம் 20,000 ரூபாயை எப்படிப் பிரிப்பது என்ற சர்ச்சையில் ராமையா எட்டாப் பகையாகிப் போனான்.

பொன்னையா வீட்டில்தான் சாப்பிட்டார். அதுவும் சுப்பிரமணிக்காக. சுப்பிரமணி என்றால் அவருக்குத் தனிப் பிரியம். உள்வாஞ்சை. அந்தரங்கப் பிணைப்பு.

சுப்பிரமணிக்கும் அப்படித்தான்.

வாய்த்த மருமகளைப் போலவே... பேரன் பேத்திகளும் ஐயாப்பா என்றால் வேம்பாக நினைக்கும். தங்களது இந்த வறுமை நிலைக்கே அவர்தான் காரணம் என்று நினைத்தன.

ஆனால் சுப்பிரமணி மட்டும் ஐயாப்பா என்றால் இழைவான். அவருடைய குளிர்ந்த பார்வையை அங்கீகரிப் பான். எதிர்த்து குளிர்ந்த சிரிப்பைச் சிந்துவான்.

பொன்னையாவும் ஆறுமாசமாய்ப் பேசமாட்டான்.

# 3

அன்றைக்குக் கிடை எங்கும் போடவில்லை. செம்மறி யாடுகளை வீட்டுத்தொழுவத்திலேயே அமர்த்தியிருந்தான் பொன்னையா.

காலையில் ஆடுகளை மேய்ச்சலுக்குப் பத்தும் போது... காயடிக்காத கிடாயைக் கட்டிப்போட்டு விட்டுப்போக நினைத்தான். அது மேய்ச்சல் தளத்துக்கு வந்தால், மற்ற ஆடுகளை மேயவிடாது. காமக் கனைப்புக் கனைத்துக் கொண்டு ஆடுகளை விரட்டிக் கொண்டே திரியும்.

அந்தத் தொல்லைக்காக... அதைக் கட்டிப்போட விரும்பினான். ஆடுகளைக் கிளப்பிவிட்ட பிறகு, இது ஞாபகத்துக்கு வந்ததால், அவசரத்தில் கிடாயைத் தொழுவில் கிடந்த பழைய கலப்பையில் கட்டிப் போட்டு விட்டு, ஆடுகளுக்குப் பின்னால் ஓட்டமாய் ஓடினான், பொன்னையா. அவனோடு சேர்ந்து கம்பும் ஓடியது.

விவசாய தளவாடச் சாமான்கள் எல்லாம் எப்பவோ காணாமல் போய்விட்டன. விற்றது பாதி, உடைத்து விறகாக எரிபட்டது பாதி. மிச்சமாய்க் கிடந்தது இந்த ஏர்க் கலப்பைதான். இதில் கைவைக்க விடாமல் அய்யா மறித்துக் கொண்டார்.

“இது என்னோட உசுரு” என்றார்.

முடிந்துபோன சம்சாரித்தனத்தின் கடைசி எச்சம் இந்தக் கலப்பை; மிஞ்சியிருக்கிற அடையாளம். முதல் வேலையாக காலையில் எழுந்து வந்து கலப்பையைப் பார்ப்பார். படுக்கும் முன்பும் ஒரு தடவை பார்த்துவிட்டுத்தான் படுப்பார். அதன்மேல் அவருக்கு அப்படியோர் அன்பு. பக்தி.

காட்டில் ஆடுகளை மேய்த்துக் கொண்டிருக்கும் போது... கிடாயின் கனைப்புக் கதறல் கேட்டது. பொன்னையா திகைத்துப் போனான்.

“என்னடா இழவு... இது எப்படி வந்துச்சு?”

மோப்பம் பிடித்து மேய்ச்சல் தளத்துக்கே வந்து சேர்ந்துவிட்ட கிடாயை எரிச்சலுடன் பார்த்தான்.

என்ன செய்ய முடியும்? மறுபடியும் பிடித்துக் கொண்டு வீட்டுக்கா கொண்டு போக முடியும்? செம்மறியாடுகளை என்ன செய்வது? வெள்ளாமைகளில் விழுந்து விட்டால்... யார் அபராதம் கட்டுவது? கேவலமாகிவிடுமே...

அன்றைக்குப் பூராவும் கிடாயின் ஆட்டம் இவ்வளவு தான் என்றில்லை. எல்லைமீறிப் போக... அவன் உள்ளுக்குள் ரொம்பக் கொதித்துப் போனான்.

சாயங்காலம் வீட்டுக்கு வந்தவுடன் அந்தக் கொதிப்பை யெல்லாம் கொட்டினான். கண்ட மேனிக்கு வைதுவிட்டு...

“கிடாயை அவுத்துவிட்டது யாரு?” என்று வீடே அலறும்படி கத்தினான்.

வீடு முழுக்க மௌனம் கால் நீட்டிப்படுத்துக் கிடந்தது. பயத்தில் விளைந்த மௌனம்.

ஐயாதான் வாயைத் திறந்தார்.

"நாந்தா."

பொன்னையாவுக்குக் கோபம் என்றால் கோபம், அப்படிக் கோபம். வெளத்தோடு சீறினான்.

"எதுக்கு?"

"கலப்பையிலே எந்தப் பய கட்டுனது?"

"கலப்பையிலேதானே கட்டுனேன்? ஒம்ம கழுத் துலேயா கட்டுனேன்?

அவமானத்தில் அந்த முகம் கறுத்தது. மரியாதையற்ற அந்தச் சீறல். அந்தக் கிழத் தகப்பனை காயப்படுத்தி விட்டது. இமை சுருங்கிப் படபடக்க... முகத்தின் சுருக்கங்கள் கூடின.

"ஏங்கழுத்தைவிட... கலப்பை ஒசத்தி. நாஞ்செத்தா... மண்ணுக்குள்ளே ஏங்கழுத்தும் கிடக்கும். அப்பவும் இந்தக் கலப்பை இந்த வீட்டிலே இருக்கும். குத்துவிளக்கு மாதிரி."

"இது குத்து விளக்கா? எங்களைக் குத்திக் குதறி சுட்டெரிச்சுச் சாம்பலாக்குன விளக்கு..."

'ஏலேய்... ஆடுமேய்ச்ச பயலுக்கு கலப்பையோட அருமை என்னடா தெரியும்?"

இப்படியே வார்த்தைகள் முற்றிக்கொண்டே போயிற்று. சுப்பிரமணி பதறிப்போனான். வார்த்தைகளின் உரசல்கள்... அதன் உணர்ச்சி உக்கிரம்... அதன் அனல் வீசும் தன்மை... ஏறுகிற ஸ்தாபி...

சுப்பிரமணி பதறிப் போனான். 'ஐயாப்பாவை ஐயா அடித்து விடுவாரோ...'

ஐயாப்பா கையைப் பிடித்து இழுத்துக் கொண்டு சுப்பிரமணி வெளியே போய்விட்டான். இழுத்த இழுப்புக்கு வர மறுத்த கிழடு, பேரனின் அழுகையைப் பார்த்த பிறகு கரைந்தார். கலைந்தார். பேரனின் பின்னால் வெளியே வந்தார்.

அன்றிலிருந்து—

இதோ சாகிற வரைக்கும் ஐயா, அண்ணனோடு பேச வில்லை. சாகும்போது கூட ஐயா முகத்தைப் பார்க்க அண்ணனுக்குக்கொடுத்து வைக்கவில்லை.

பாவம், மேல்காட்டில் ஆடுகளைப் பத்திக்கொண்டு பஞ்சம் பிழைக்கப் போயிருக்கிறான்.

ஆயிற்று. இதோ இறந்துவிட்டார். பிள்ளைகள் மேலுள்ள பகை உணர்ச்சியை விலக்காமலேயே இறந்துவிட்டார். சம்சாரித்தனத்தின் மீதுள்ள அவரது பிரியம். சம்சாரித்தனம் செய்ய விரும்பாத மகன்கள் மீதான வெறுப்பாக விழுந்தது...

அந்த வெறுப்பு இறுகிப் போன உணர்வாகி... முறுக்கேறிப் போன மனசோடு செத்தே போய்விட்டார்.

ராமையாவுக்குள் ஒரு மெல்லிய அச்சம். நடுக்கமூட்டிய அச்சம். வெக்காடும் பகையோடும் பிரிந்திருக்கிற ஐயாவின் ஆவி சாந்தியடையுமா? அற்றலையுமா? தங்கள் குடும்பத்தைப் பிடித்து ஆட்டுமோ? பீடையாக வந்து அலைக்கழிக்குமோ...

ராமையா நிஜமாகவே இப்போது வருந்தினான். உள்ளூரக் கலங்கினான்.

இல்லே. அய்யாவை நாங்க இப்படி ஒதுக்கியிருக்கக் கூடாது. அலட்சியமா விட்டுருக்கக்கூடாது. பெத்த தகப்பன். பேணி வளர்த்தவர். கனாக் கண்டவர். எங்களை எப்படி யெல்லாமோ ஆக்குறதுக்கு ஆசைப்பட்டவர். அவரை... நாங்க இம்புட்டு உதாசீனப்படுத்தியிருக்கக் கூடாது. இன்னிக்கு, நாங்க எங்க ஐயாவை இப்படி நடத்துனா... இதைப் பார்க்குற எங்க பிள்ளைகளும் எங்களை இப்படித்தானே நடத்தும்?...

ராமையா கலங்கக் கலங்க — மனசுக்குள் கனத்தது. ஐயாவை நினைத்து அழ விரும்பினான். எப்படியோ ஐம்புலிங்க நாடாரின் சகாப்தம் முடிந்தது.

பொன்னையாவுடன் போட்ட சண்டைதான், ஐம்பு லிங்க நாடாரை விரைவாகச் சுருட்டிவிட்டது. ஆட்டுக்கம்பை ஓங்கிக்கொண்டு பொன்னையா பாய்ந்து வந்த அந்தவேகம்—

மட்டியைக் கடித்துக் கொண்டு கண்ணை உருட்டி முழித்த அந்த ஆவேசத் தோற்றம்...

அந்தக் காட்சிதான் மறுபடி மறுபடி அவர் மனசுக்குள் வந்தது. ஓங்குவது வேறு, அடிப்பது வேறா? எல்லாம் ஒன்று தான்.

ஓங்கிய கம்பு அவர் உடம்பில் அடியாக விழவில்லை. நிஜம்தான் ஆனால், மனசில்...?

அடி விழுந்துவிட்டதே! அந்த அடியின் ரணம், அடி மனசுவரை துடித்தலறிப் பரவுகிறதே...

பெற்ற பிள்ளையே தகப்பனை அடிப்பது. அதுவும் நிதமும் கனவுகளையும் கற்பனைகளையும் உற்பத்தி செய்த தலைப்பிள்ளையே—நெஞ்சின் பாசம் முழுவதையும் கொட்டிக் கொடுத்து கொஞ்சி வளர்த்த தலைப்பிள்ளையே தகப்பனை அடிப்பது?

ஆத்தாடி! இது சாதாரண கேவலமா? ஏழு தலை முறைக்கும் போதுமே!

யாருக்கு இந்த இழிவு? யாருக்கு இந்த அவமானம்? ஜம்புலிங்க நாடாருக்கா? அடக்கொடுமையே... மண்ணும் பொறுக்குமா... இந்த பாதரவை?

ரொம்ப ஒ்டுங்கிப் போனார். உள்ளுக்குள் உடைந்து நொறுங்கிப் போனார். யாரையும் ஏறிட்டுப் பார்க்க நடுங்கினார். மனசு கூசியது.

மூணு வருஷமாய் மழையே பெய்யவில்லை. ஊர் கிடந்து காய்கிறது. காய்ந்து வெடிக்கிறது. வெடித்து நொறுங்கு கிறது. வெள்ளாமை விளைச்சல் கிடையாது. சம்சாரித்தனம் அற்றுப்போயிற்று. வெள்ளை வெயிலும், பனிக்காற்றும் ஜனங்களை வாட்டிவதைக்கிறது.

எப்படி மழை பெய்யும்? அப்பனை அடிக்கிற பிள்ளைகள் தலையெடுத்துவிட்ட தறுதலைப் பூமியில்

தர்மம் இருக்குமா? நியாயம் இருக்குமா? மழை என்னமா பெய்யும்?

கொதித்துப்போன மனசில் கொந்தளிக்கிற நினைவுகள், தளதளத்துக் குதிக்கிற கொதிப்பானைச் சோற்றுப் பருக்கைகளாய்... சாப நினைவுகள்...

ஐம்புலிங்கம் நாடார் திண்ணையில் உட்கார்ந்திருக் கிறார். வறண்ட வெயிலையும் கானல் அலையையும் வெறிக்கிறார். வெறிக்கிற கண்கள் கரிக்கின்றன.

நல்ல வயசாளி. அறுபதுக்கு மேல் வயசு. அனுபவத் தடங்களைச் சுமந்த சுருக்கங்கள், உடம்பெல்லாம் நெருக்கமாய் விழுந்து, தேக நிறத்தையே சுருட்டியிருந்தது.

இடுங்கிப் போன கண்கள், பொடிக்கண்கள். முகத்தி லும், புஜங்களிலும், நெஞ்சுக்குழியிலும், நரைத்த ரோமங்கள். தலை சுத்தமாகியிருந்தது. பின் மண்டையில் மட்டும் அரை வட்டமாய் அஞ்சாறு வெள்ளை ரோமங்கள்.

இடுப்பில் அழுக்கான நாலுமுழ வேட்டி அதையும் கொத்தலும் குதறலுமாய் அள்ளிச் சொருகியிருந்தார். புஜங் களை மறைத்துக் கொண்டு ஒரு கதர்த் துண்டு. கபில நிறத் துண்டு.

இந்த ஊரிலேயே இவர் ஜனம் பெருத்த ஆள். ரெண்டு ஆண் பிள்ளைகள். ஒரு பெண். எல்லாருக்கும் உள்ளூருக்குள்ளேயே கொடுக்கல் வாங்கல். பேரப்பிள்ளைகள் பதிமூன்று பேர். மகன்களின் சம்பந்தக்காரர்கள், மகளைக் கொடுத்த வீடு என்று ஊர் முழுக்க இவரது உறவுப் பட்டாளம்.

“ஒமக்கென்னயா... ராசா, உள்ளூரு ஜனம் பூராவும் ஒம்ம ஜனம், படை பட்டாளம் பெருத்த ஆளு. துட்டுச் செல்வாக்கு கிடைச்சாலும், ஆள் செல்வாக்கு கிடைக்குமா? ஒமக்குக் கிடைச்சிருக்கே!

என்று தூரத்துச் சொந்தக்காரர்கள் நமட்டுக் கேலியாக சிரித்துக் கொண்டே சொல்லுவார்கள். அப்போதெல்லாம் தூரத்து வெளியைப் பார்த்தவாறு தலையசைப்பார். அவர்கள் கேலியை—மகிழ்ச்சியை—உள்வாங்கிக்கொள்ள முடியாது. முடிகிற மாதிரி மனநிலையில்லை.

வெளியே பார்த்தால் தாழம் பூக்கொண்டை, உள்ளே வகிந்துபார்த்தால் ஈரும் பேனும்.

இந்தக் கூத்தை யாரிடம் சொல்ல? எப்படிச் சொல்ல? சுயகௌரவம் என்று ஒன்று வந்து வாயடைக்கிறதே...

இத்தனை உறவுக்காரர்கள் சுற்றியிருந்தாலும்... நாதி யற்றுப் போன மாதிரி ஒரு உணர்வு நாடாருக்கு. அத்துவானக் காட்டில் ஒத்தையாளாய் தனித்துக் கிடப்பதாக ஒரு பிரமை.

## 4

**அ**வருடைய 'கெழடி' செத்த நாளிலிருந்தே அவருக்கு இந்தப் பரிதவிப்புதான். அனாதையாகி விட்டோமே என்கிற பதைபதைப்புதான்.

ஓயாமல் வருத்தப் பெருமூச்சுதான்.

எத்தனை ஆளுக இருந்து என்ன செய்ய? உத்தவுக உரியவுக சுத்தியிருந்து என்ன செய்ய? கொண்டவளாகுமா? அவளாயிருந்தாள்னா, முகம் பார்த்துக் காரியம் செய்வாளே. பசியை உணர்றதுக்கு முந்தியே சோத்தோடவந்து நிப்பாளே.

உதடு காய்ஞ்சி கிடந்தா—தண்ணி கொண்ணாந்து குடுப்பாளே...எள்ளுன்னுநெனைக்குறத்துக்குள்ளே எண்ணெய் யாய் வந்து நிப்பாளே... அவ என்ன லேசுப்பட்டவளா? எம் மனசறிஞ்சவா, உடம்பறிஞ்சவா, பாந்தமுள்ளவா, பக்கபலமா நின்னு, மனசு படர்றதுக்கு வழிதர்றவா அவளாகுமா... இவுக? அவளோட கால்த் தூசிக்குக்கூட

சமமாகுமா, இவுக? தண்ணிதவிக்குதுன்னு வாய் தொறந்து கேட்டாக்கூட. இப்பக்கெடைக்கா? யார் தருவா? ஈரம் இல்லாத மனசுகள்..'

என்று பெரும் புலப்பமாய் புலம்புகிறது, அவரது மனம். கெழடி இழப்பை இன்னும் உணர்கிறார். இழப்பின் வேதனையைக் கூடுதலாய் உணர்கிறார். அவள் இருந்த நாளில் தெரியாத அருமையெல்லாம் இப்போது தான், அவருக்குள் உறைக்கிறது.

"நெழலோட அருமை, வெயில்லேதா தெரியும்" மனம் விட்டு வாய்விட்டு முணுமுணுக்கிறார். ஐம்புலிங்கம். புதிதாய் எதையோ புரிந்து கொண்டவரைப் போலத் தலையை ஆட்டிக் கொண்டிருக்கிறார்.

வெட்டவெளியையே பார்த்துக் கொண்டிருந்த நாடார் ரொம்ப நேரம் கழித்து இமைதட்டி முழித்தார். இமைகளில் ஈரப்பதம். கண்விளிம்புச் சுருக்கங்களில் ஈரக்கசிவு.

வெட்ட வெளியிலும் அவர் மனசு கெழடியைத்தான் பார்த்துக் கொண்டிருந்ததை அந்த நீர்க்கசிவு சொல்கிறது.

கெழடி நினைப்பு இப்ப ரொம்ப வருகிறது. அதிலும் பொன்னையா கூட வாய்ச்சண்டை போட்ட பிறகு—நாதி யற்ற உணர்வு மனசைப் பிடித்துக் கொண்ட பின்னால்—ரொம்ப.

ஆறிவந்த கால்விரல்ப் புண்ணில் கல் எற்றிய மாதிரி ரத்தம் கசிகிறது. விடாமல் வழிகிறது. கொப்பளித்து கொப்பளித்து வருகிறது. நரம்புகளில் பரவுகிற வலி.

ஆடிமாசக்காற்று மாதிரி சுழன்று சுழன்று வந்து மோதி அடிக்கிறது. இந்த நினைப்பு. ஆளைச் சுழற்றி சுழற்றி எங்கோ சுருட்டித் தள்ளுகிறது.

உச்சி வெயில் உக்ரமாய் நெருப்பைக் கொட்டுகிறது. தூள் மேகங்கள் கூட இல்லை. வழித்துப் போட்ட வட்டிலைப் போல... வெறுமையாய்க் கிடக்கும் ஆகாயம்.

எல்லாரும் சாப்பிட்டாகிவிட்டது. மணி ஒன்னரை இருக்கும். இன்னும் நாடாருக்கு கஞ்சி வரவில்லை. எப்ப வரும்? காத்துக்கிடக்க வேண்டியிருக்கிறது, வயிற்றுக் கஞ்சிக்கு, நாய் மாதிரி.

இனிமேல் வேண்டா வெறுப்பாய் மருமகள் கொண்டு வந்து தருவாள். வந்து வட்டிலை வைக்கிற அதிர்விலேயே., மனசுக்குள் ஒரு முள் சொருகுகிற மாதிரி இருக்கும்.

'ணங்' கென்று வைப்பாள். வைத்துவிட்டு, ஒரு பார்வை பார்ப்பாளே... பார்க்கணும்! பார்வையில் அப்படியோர் அலட்சியம். 'சனியனே... இன்னும் நீ கெடக்கணுமா, எங்க கழுத்தையறுக்க' என்று சொல்கிற மாதிரியான ஒரு தீப்பார்வை.

அப்படியே... செத்துப் போகலாம் போலிருக்கும். உள்ளுக்குள் சப்பென்று செருப்படிவிழுகிற மாதிரியிருக்கும்.

கெழடி இருந்தால்... இப்படியா இருக்கும்? ராச மரியாதையாக இருக்குமே...? 'பாதகத்தி, என்னை இந்தப் பாலைவனத்துலே வுட்டுட்டு போய்ட்டீயே... நாதியத்துப் போய் நாய் மாதிரி நா கிடக்கணுமா?'

அவர் மனசுகிடந்து புலம்பிச் சிணுங்கியது. வந்த கஞ்சியை அரை மனசோடு குடித்தார். தண்ணீரைக் குடித்தார். கதர்த் துண்டால் துடைத்துக் கொண்டார்.

உச்சிப் பொழுதைப் பார்த்தார்.

மணி ரெண்டை நெருங்கும். வெள்ளை வெயில் நிறம் மாறுகிறது. மாரி மூலைக்காற்று உழன்று உழன்று வீசுகிறது.

மழைக்கு இந்தக் காற்று பகை. எட்டியே பார்க்காது. உப்பாங்காற்று வரணும். அந்தக் காற்றுதான் மேகங்களைக் கூட்டிவரும். அடைகாக்க வைக்கும். மேகம் குஞ்சு பொறிக்கும்.

இந்த மாரிமூலைக்காற்று மாரியை விரட்டும்.

சோம்பேறி ஈயாகச் சுற்றுகிற நினைவுகளை உதறி யெறிந்தார். பெருமூச்சோடு எழுந்தார். ரெண்டு பத்து செய்தி கேட்கணும். தெற்குத் திசை ஆகாது. திரும்புவதில்லை. வடக்கில் டெய்லரிடம் வானொலி இருக்கிறது. செய்தி வைப்பார்.

செய்தி கேட்கிற எண்ணத்தில் வடக்கு நோக்கி நடந்தார். செய்தி கேட்டுவிட்டுக் கொஞ்ச நேரம் பேசிக் கொண்டிருந்தால் போதும். இலங்கைச் செய்தி அப்புறம். ஆறரைச் செய்தி கேட்டுவிட்டு வந்தால்... சாப்பிடச் சரியாக இருக்கும்.

ஏழேகால்ச் செய்தி? கேட்க முடியாது.

நாளைக்குப் பேப்பரில் பார்த்துக் கொள்ளலாம். ஜம்புலிங்கநாடார் டெய்லர் கடை நோக்கி நடந்தார். கெழடி இருக்கும்போதும்... இதுதான் பழக்கம்

ஜம்புலிங்க நாடாருக்கு கெழடி என்றால் உயிர். அவள் வெறும் பெண்டாட்டியாக மட்டும் இருக்கவில்லை. மந்திரி மாதிரி யோசனை சொல்வாள். அன்பு காட்டுகிற தாராளத்தில் அம்மா மாதிரி, கண்டிக்கிற நேரத்தில் லகான் போட்டு முறைப்படுத்துவதில்... அய்யா மாதிரி.

அவளுக்குப் பெயர் மகாலட்சுமி. அந்தப் பெயரை அவரது உதடுகள் ரொம்பக் காலமாக உச்சரித்ததேயில்லை கல்யாணம் முடிந்த புதிதில் ரெண்டொரு வருஷம் லட்சுமி என்று கூப்பிட்டதாக ஞாபகம்.

தலைப் பிள்ளையாக பொன்னையா பிறந்து, அவர் களுக்குள் சகலமும் புரிந்து போனபிறகு—ஒருவருக்கொருவர் சரிபாதி என்று அத்துபடியான பிறகு பெயர் சொல்லி உச்சரிப்பது, அன்புக்கு மரியாதைக் குறைவு என்று கருதினாரோ... என்னவோ... பெயரைச் சுத்தமாக மறந்து விட்டார்.

அந்நியம் இருந்தால்தானே பெயர் வேண்டும்? அவள் வேறு, இவர் வேறு என்கிற உணர்வு இருந்தாலல்லவா, வேறு பாட்டைக் குறிக்கிற பெயர் தேவை?

அது இல்லை என்றானவுடன், அவருக்கு அவள் 'கழுதை'யாகி விட்டாள். வாய்க்குவாய் கழுதைதான், அன்பிலும் கழுதைதான், கோபத்திலும் அதுதான்.

"ஏ... கழுதை... ஏ... கழுதே" என்றுதான் எப்பவும் கூப்பிடுவார். செல்லமாய்ச் சிணுங்கி அரை இருட்டில் மனசே குழைந்து உளற... கூடிக் கலந்து முயங்குகிற அந்தப் போதை வேளையிலும் 'கழுதை' தான்.

ஆத்திரம் தாங்காமல்... வார்த்தை வராமல் உதடுகள் துடிக்க சினந்து வெடிக்கிற போதிலும் அதே செல்லக் 'கழுதை'தான்.

"இந்தா... கழுதே, நா போய் வாய்க்காவரப்பை செதுக்கி தண்ணிபாய்ச்சுதேன். நீ நாத்தைப் பிடுங்கிட்டு வந்து சேரு"

"ம்... சொல்லுறது கேக்கா?"

"ம்"

'ஏய்கழுத...' 'ம்...ம்' னா எப்படி? வாரேன். வல்லைன்னு சொல்ல வேண்டியதுதானே?"

"வந்து தொலைக்கேன்"

"இதை மெல்லச் சொல்ல வேண்டியது தானே...? எதுக்கு இப்படிக் கத்துறே, கழுதே"

இப்படி வீட்டில் அவர்களுக்குள் மட்டுமல்ல, வராத விருந்தாளி அதிசயமாக வீட்டிற்கு வருகிறார் என்றாலும் அவர் முன்னிலையிலும் 'கழுதே' தான்.

"ஏய் கழுதே... இங்க வந்து பாரு, யாரு வந்துருக்கா கன்னு?" என்று மகிழ்ச்சி கலந்த வியப்போடு கூவல்க்காடு போடுவார்.

அந்நியர் முன்னிலையில் இப்படிப் பேசலாமா என்று யோசிக்கவே மாட்டார்.

வருகிறவர் தானே அந்நியர். வந்து 'வாய்த்தவள்' அந்நியமில்லையே...! தங்களுக்குள் இருக்கும் அந்நியோன் யத்தை அந்நியர் முன்னிலையில் மறைக்க வேண்டிய தில்லையே...

அவளும் 'கழுதே' என்று கூப்பிடுவதை நினைத்து விசும்பியதுமில்லை. வெகுண்டதுமில்லை. அதை ஒரு செல்லப் பெயராக நினைத்து—ரொம்ப ரொம்ப இயல்பாக ஏற்றுக்கொண்டாள். அந்த உச்சரிப்பு. பிரியத்தில் நனைந்து, ஊறி, கனிந்திருப்பதை அவளது உள் மனசு உணர்ந்து கொண்டது.

ஒரு நாள்—

வாளி குடத்துடன் வெள்ளோடை கிணற்றுக்கு தண்ணீர் எடுக்கப் போகிறபோது.—

ஒற்றையடிப் பாதையில் பின்னால் வந்த பக்கத்து வீட்டுக்காரி இளக்காரமாய்க் கேட்டாள்.

"என்ன லட்சுமி, உங்க வீட்டுக்காரர் 'கழுதே, கழுதே'ன்னு கூப்பிடுதாரே, நீ ஒன்னும் சொல்லமாட்டீயா?"

"என்னத்தைச் சொல்ல?"

"இது நல்லாவாயிருக்கு? வாய்க்கு வாய் கழுதேங் கிறது."

"கழுதைன்னா என்ன, குருதைன்னா என்ன... பேர்லே என்ன இருக்கு? பிரியத்துலே வந்தா... சரி"

"அப்பவும்... இது அசிங்கமாயிருக்கு. பாக்குற மத்துவுக என்ன நெனைப்பாக?"

"மத்தவுகளுக்காகவா, நாம? நமக்குள்ளே கள்ள மில்லாம இருந்தாப் போதும்"

அதற்குப்பிறகு அவளிடம் பேச ஒன்றுமில்லை. நெருப்பு இருந்தால்தானே, கிளறிவிட்டால் புகையப்போகிறது? கிளறிக் கிளறி விட்டாலும் சாம்பல்தான் எழும் என்று தெரிந்து போனால்... யார் கிளறப் போகிறார்கள்?

மூத்தவனுக்குப் பெண் பார்ப்பது என்று யோசிக்கிற காலத்தில் — அது பற்றிய பேச்சு கிளம்பி விட்டபோது—

ஐம்புலிங்கம் எப்படியோ 'கழுதை'யை விட்டுவிட்டார். விட்டுத் தொலைக்க வேண்டும் என்று நினைத்து விடவில்லை. மறந்து போன மாதிரியாகி விட்டது. கழுதையே அவர் நாவை விட்டு ஒதுங்கிப் போய்விட்ட மாதிரி... காணாமல் போய் விட்டது.

அப்புறம் 'கெழடி' தான். வாய்க்கு வாய் கெழடிதான்.

"இந்தா... கெழடி, இங்க வா. மருமவளுக்கு என்ன வேணும், கேட்டுவை"

"ஐயய்யோ. அய்ய... ஓம் பேரப்புள்ளை வேட்டியை நனைச்சிட்டான் பாரு, தூக்கிகிட்டுப்போ கெழடி"

"ஏய் கெழடி, என்ன நெனைச்சுக் கிட்டிருக்கே ஓம் மனசுலே? கடிச்சிக்கிட இல்லாம கஞ்சி குடுத்து விட்ருக்கீயே. மனுசன் எப்படி குடிக்கிறது? ரொம்பத் திமிரா?"

நொடிக்கொரு கெழடிதான், வாயைத் திறந்தால்... கெழடிதான். கழுதையை மாதிரி இதை அவள் ஏற்றுக் கொள்ளவில்லை. மனசுக்குள் ஒரு எதிர்ப்பு திமிறியது.

எந்த மனிதருக்குமே முதுமையைக் கண்டால்... ஒரு பயம், ஒரு வெறுப்பு. தவிர்க்கமுடியாத இருட்டாக அது வந்து அமுக்குகிற போதுகூட... மனசு கிடந்து அலைபாயும். நட்சத்திர வெளிச்சத்திலாவது இளமையைக் காணும்.

முதுமை வந்தபின்னும் கூட அதை ஒப்புக்கொள்வதில் ஏகப்பட்ட சங்கடங்கள் உண்டு. வனப்போடு வாலிபமும் சேர்ந்த வடிவத்திலேயே முழுநிறை கொள்கிற பெண்

ணுக்கோ... முதுமையை ஒப்புக்கொள்வது ரொம்ப ரொம்பக் கடினம். மலையைத் தூக்கி தோளில் வைக்கிற மாதிரி. முடியாத காரியம்.

இவரோ சொல்லுக்குச் சொல் 'கெழடி கெழடி' என்று பிடுங்குகிறார்.

ஒரு நாள் சீறியே விட்டாள்

"என்ன இது, கிறுக்குத்தனம்? மூச்சுக்கு முன்னூறு தடவை கெழடி, கெழடின்னுக்கிட்டு? இப்பத்தான் ஒங்களுக்கு அரும்பு எறங்குதுன்னு நெனைப்போ? மனசுலே என்ன நெனைச்சுக்கிட்டுருக்கீக? வாலிபம் திரும்புதுன்னா...?"

கோபத்தில் சீறிச்சினந்து, அவள் கையை நீட்டி ஆட்டி ஆட்டிப் பேசுவதைப் பார்த்த ஜம்புலிங்கம். 'கபா, கபா' வென்று சிரித்துவிட்டார்.

அவள் கோபத்தால் அவர் கொஞ்சம் கூட சீண்டப் படவேயில்லை. கோபத்தை ரசிக்கிறவர் மாதிரி விழுந்து விழுந்து சிரித்தார்.

அவரது விகல்பமற்ற சிரிப்பாணிச் சத்தத்தில் அவள் வெலவெலத்துப் போனாள். தனது கோபமே அர்த்த மற்றதோ என்று திகைத்து விட்டாள்.

ஆனாலும் திகைப்பைச் சமாளித்து மறைத்துக் கொண்டாள். கோபத்தைக் காப்பாற்றிக்கொண்டு எரிந்து விழுந்தாள்.

"என்ன இளிப்பு வேண்டிக் கெடக்கு? சிரிப்பாணி அள்ளிக்கிட்டு வருதோ...? என்னங்கிறேன்?"

அவர் சிரித்துச் சிரித்தே சிரிப்பாணியைக் கடந்தார். அவளைப் பார்த்து கையை நீட்டி இளக்காரமாகச் சொன்னார்.

"அடி... கோட்டிக்காரி!"

அவளுக்கு எரிச்சலான எரிச்சல்... இம்புட்டு அம்புட்டு என்றில்லை. திகிடு முகிடான எரிச்சல்,

"என்ன கோட்டியை கண்டுட்டீரு?"

'பொம்பளைங்கிற கொணத்தைக் காட்டிட்டீயே... எம்புட்டு வயசானாலும், கெழடிங்கிறதை தாங்க முடியலியே ஒன்னாலே? நாந்தான் கேக்கேன், பேரன் வந்த பெறகும் நீ, கொமரியா?"

"நீரு மட்டும் கொமரனாக்கும்?"

'அடக்கிறுக்கச்சி! ஒன்னைக் கெழடின்னு சொன்னாலே, நா கெழடன்னு ஒத்துக்கிட்டதாகத் தானே அர்த்தம்? கெழடிக்குப் புருஷன் கொமரனாவா இருப்பான்?"

அப்போதுதான்... அவரது சிரிப்பாணியின் அர்த்தமே பிடிபட்டது. 'அப்படியா சங்கதி?' என்று மனச் சமாதானம் அடைந்தாள். தன் அறியாமையை எண்ணி வெட்கப் பட்டவளாகச் சிரித்தாள்.

'நா என்னத்தைக் கண்டேன்... இந்த சூச்சுமத்தை' என்று வெட்கத்தோடு முணங்கினாள். சிரிப்பையும், முணு முணுத்துச் சமாளிக்கிற லட்சணத்தையும் கண்டு சத்த மில்லாமல் சிரித்தார், ஜம்புலிங்கம்

அவ்வளவுதான். அப்புறம் பூராவும் கெழடிதான். சாகிற வரைக்கும் கெழடிதான். செத்த பிறகும் கெழடிதான்.

அவர்களுக்குள் அழுத்தமான காதல் இருந்தது. ஈர்ப்பு இருந்தது. ஒருவருக்கொருவர் பலமாய் இருந்தார்கள். ஒருவருக்கு ஒருவர் தேவையாக இருந்தது. அத்யாவசியம் இருந்தது. அன்பு இருந்தது. அந்த அன்பு அவர்களைப் பிணைத்தது. இறுக்கியது. அழுத்தியது. அவர்களை ஒன்றாக்கியது. ஒரு உருவாக்கியது. ஒரு மனமாக்கியது. இந்த வலிமை மிகுந்த அன்பு, அவர்களுக்குள் ஒரு புதிய சக்தியைப் படைத்தது—படைப்புச் சக்தியைப் படைத்தது.

இதை அவர்கள் எப்போதும் உணர்ந்ததாகத் தெரியவில்லை. வார்த்தைப் படுத்திக் கொள்ளவில்லை. அதற்கான வார்த்தைகளும் அவர்களிடம் இல்லை.

இந்த அன்பும் வார்த்தைகளுக்கு வசப்படாத ஆழத்திலும் உயரத்திலும் செயல்பட்டது.

காதலிப்பதை உணராமலேயே காதலிப்பது என்கிற உன்னதக் காதலினால் அவர்கள் காதலிக்கப்பட்டிருந்தார்கள்.

அந்தக்காதலை சாத்தியமாக்கியது எது? இந்தக் காதல் வரத்தை அவர்களுக்கு சித்திக்கச் செய்தது. எது?

அது ஒரு பெரீ...ய்ய விஷயம் நீ... ளமான கதை.

# 5

அவர்களைப் பிணைத்தது உழைப்பு. உழைப்பின் மீதிருக்கிற ஆர்வம். பிடிப்பு. தீவிரம். சாகசம். உழைப்பின் மீதிருக்கிற காதல்தான், இனம் புரியாத உணர்வுச் சரடுகளால் அவர்களுள் முடிச்சுப் போட்டது. இறுக்கியது. ஒரே உணர்வுச் சரடாயிற்று.

அப்போது... ஜம்பு நல்ல இளவட்டம். வாட்டசாட்டமாயிருப்பான். இடுப்பில் நாலு முழ வேட்டிதான். மடித்துக் கட்டியிருப்பதே... தனி அழகு. ஒரு பிசிறில்லாமல் அம்சமாய் மடித்துக் கட்டியிருப்பான். மேலே ஒரு கட்டம் போட்ட துண்டுதான். பனியன் சட்டையெல்லாம் பிறப்பே கிடையாது.

நல்ல திரேகக் கட்டு. புஜமும் தோளும் உருண்டு திரண்டிருக்கும். நிமிர்ந்து நிற்பான். நல்ல சதுரத் தோற்றம்

அது... மார்கழி மாசம். கண்மாய்ப் பாசனங்களில் வயல்க்காடு. நெல் கதிரறுப்பு துவங்கிவிடும். சிறு நிலம்படைத்த சம்சாரி வீட்டுப்பிள்ளைகள் கூட கூலிக்காரனாக அறுப்புக்கு வந்துவிடும்.

மற்ற வேலைகளை விட அறுப்பு என்றால் நல்ல கூலி விழும். மார்கழி, தை இரண்டு மாதங்களுக்குள் நாலுமூடை சேர்ந்துவிடும்.

அதனால்... ஜம்புவும் வருவான். அவன்தான் கொத்தன். அவன் தலைமையில் பனிரண்டு ஆட்கள். அறுப்புக் கூலி பேசுகிறவன் அவன்தான்.

அறுத்து, கட்டி, சுமந்து, அடித்து, தூற்றிக் கொடுத்துவிட வேண்டும். கோட்டைக்கு இவ்வளவு என்று கூலி. அதில் வருகிற நெல்லை 14 பங்கு வைப்பார்கள். கொத்தன் கூலி ஒன்று. உழைப்புக்கு ஒன்று, ஆக ஜம்புவுக்கு இரண்டு பங்கு.

ஜம்பு வேலையில் கெட்டி. அவனை மிஞ்ச ஆளே கிடையாது. அறுப்பு என்று குனிந்துவிட்டால்... நிமிரவே மாட்டான். மின்னலாய் அறுப்பான். மளமளவென்று அறுபட்டு நிலம் சாயும்.

அவனோடு யாரும் அறுப்பில் போட்டி போடவே நினைக்க மாட்டார்கள். அவன்தான் முந்துவான். அவனிடம் தோற்பதை யாரும் கௌரவக் குறைச்சலாக நினைக்க மாட்டார்கள்.

அன்றைக்கும் அப்படித்தான்

அதிகாலைப் பொழுது. இன்னும் சரியாக விடிய வில்லை. கருக்கிருட்டு உடைந்து விட்டாலும், இன்னும் உதிர்ந்து விலகவில்லை.

ஒருத்தர் முகம் ஒருத்தருக்குத் தெரியாத அளவுக்கு இருட்டு மிச்சமிருந்தது. அந்நேரம் அறுப்பு துவங்கிவிட்டது. ஜம்பு வரப்போரம் நிரைபிடித்துக் குனிந்தான். அவனையாரும் முந்துவதில்லை. முந்தவும் முடியாது.

அன்றைக்கு... யாரோ ஒருத்தி பக்கத்தில் முந்திக் கொண்டிருந்தாள். சரக்சரக்கென்று அறுக்கிற சத்தமும் சலசலக்கிற நெல்தாள் சத்தமும் மட்டும்தான்.

ஜம்புவுக்கு வலதுபக்கம் நிரைபிடித்தவள் முந்திக் கொண்டு போனாள். அவளது பாதம் தெரிகிறது. பாவாடை தெரிகிறது. சேலை தெரிகிறது.

ஜம்புவுக்குள் ரகசிய ரௌத்ரம். "ஒரு பொட்டச்சியா நம்ம கிட்டே போட்டி போடுறது?"

கை வேகத்தைக் கூட்டினான். கதிர்த்தாளை இடது கை கூட்டிப் பிடிக்க, வலதுகை அரிவாள் சரக்கென்று அறுக்க... தீவிரமானான்.

பாவாடை தெரியவில்லை. பாதம் தெரியவில்லை. இவன் முந்திவிட்டான். குனிந்த நிலையிலேயே வலது பக்கம் பார்த்தான்.

அவளது கைவளையல் சத்தம். கண்ணாடி வளையலின் கலகலப்பு. அந்தக் கலகலப்பு இன்னும் கொஞ்சம் சுருதி கூடுகிறது. ஸ்தாயி உயர்கிறது.

அவள் இவனை முந்திவிட்டாள், மறுபடியும்.

அவனுக்குள் சுருசுருவென்று கோபம். அவன் கிரீடத்தை யாரோ பறிக்கிறார்கள். அவனை மிஞ்ச ஆள் கிடையாது என்ற வரம்பை யாரோ உடைக்கிறார்கள். வேலையில் அவன் கெட்டி என்ற பட்டயத்தை யாரோ உருவுகிறார்கள். கீழே போட்டு மிதிக்கிறார்கள்.

அதுவும் யாரோ இல்லை, ஒரு பொட்டச்சி. ஒரு பொம்பளை. ச்சீ... ரொம்பக் கேவலமாய்ப் போயிருமே...

அவனுக்குள் ஒரு உள்தீவிரம். உள் பலம் முழுவதும் மிச்சமில்லாமல் பீறிட... வழிந்த வியர்வையைக்கூட துடைக்காமல் புயல் வேகத்தில் அறுத்தான். சற்று முந்தினான்.

அப்பாடா என்று திருப்தியடைவதற்குள்... நெருங்கி விடுகிற அவள். முந்துகிற அவள்.

நிரை முடிகிறபோது—அவள்தான் முதலில் நிமிர்ந்தாள். இவனுக்கு இன்னும் நாலுகை கிடக்கிறது. அறுத்து முடித்து

விட்டு நிமிர்ந்தால்... பக்கத்தில் அவள், 'கேஸ், புஸ்' என்று மூச்சிரைத்தாள்.

நிமிர்ந்த அவனை, அவளது வெற்றிப் பார்வை எதிர் கொண்டது. மோதியது. இவனுக்கும் மூச்சிரைத்தது. நெஞ்சு விம்மிக் கொண்டு அடைத்தது.

நல்லவேளை... இந்தப் போட்டியை யாரும் பார்க்க வில்லை. கவனிக்கவில்லை. ஜம்புவுக்கு அது ஒன்றுதான் ஆறுதல்.

உள்ளுக்குள் ஒரு நமைச்சல். 'ஒரு பொட்டச்சி நம்மை ஜெயித்துவிட்டாளே' என்கிற லஜ்ஜை.

அவமானத்தில் பிணைந்த மனசோடு நிமிர்ந்து அவளைப் பார்த்தான். யாரிது?

வைகறை வெளிச்சத்தில் அவளது முகவியர்வை தெரிகிறது. முகத்தில் சரிகிற மயிர்க்கற்றையை இடது கையால் ஒதுக்குவது தெரிகிறது.

யாரிவள்?

அட... மகாலெட்சுமி.

"நீயா...?" என்றான் அதிர்ச்சி கலந்த வியப்பு.

"ம்"

"நல்லா அறுக்கீயே..."

"ம்"

"என்னை முந்தணும்னுதான் நினைச்சீயா?"

மறுப்பது போல ரெண்டு 'ம்' போட்டாள்.

"அப்ப...?"

'நினைச்சு முந்தலே. எப்படியோ அறுத்து முந்திட் டேன்—

"சரி—அடுத்த நெரையிலே போட்டி போடுவமா?"

அவள் தயங்கினாள்.

"எதுக்கு...? வேண்டாம்" என்றாள்.

நிரைபிடித்தனர். அறிவிக்காவிட்டாலும் போட்டி நடந்தது. போட்டிக்கு வராமல் அவள் தயங்கினாலும், உழைப்பில் போட்டி போட்டாள்.

இவனும் பலம் முழுக்க செலவழித்தான். ஒரு பெண் பிள்ளையிடம் பின் வாங்கிவிடக்கூடாது என்று பரபரத்தான். சக்தி முழுவதையும் வலதுகையில் திரட்டிக்குவித்தான்.

ஆனாலும் அதே கதைதான். இவனுக்கு இன்னும் ஆறுகை அறுப்பு இருக்கும்போதே... அவள் முடித்து நிமிர்ந்து விட்டாள்.

இவனும் அறுத்து முடித்துவிட்டு நிமிர்ந்தான். குறுக்கு வலிக்கிறது. இடுப்பைச் சுற்றி வலி, புஜத்தில் உளைச்சல். உள்ளங்கைகளுக்குள் நெறு நெறுக்கிற வேதனை.

ஆனாலும்... கலகலவென்று சிரித்தான், ஜம்பு. பாராட்டுச் சிரிப்பு.

'பரவாயில்லையே...' என்று பெருந்தன்மையாகச் சொன்னான்.

அவனுக்குள் அவள் வேர்விட்டாள். அந்த அறுப்புக் களத்தில்தான் அவர்களுக்குள் நடுவை நடந்தது.

அந்தப் போட்டி சுமப்பதிலும் நடந்தது. மகாலட்சுமி தளரவில்லை. காலடியளவு வரப்பில் கால்பதித்து சுமையோடு லொக்லொக்கென்று ஓட வேண்டும். ஓடினாள். ஜம்பு, எத்தனை பெரிய கட்டாகக் கட்டினாலும் அசராமல் சுமந்தாள்.

அவளைக் கண்டு அவன் வியந்தான். பிரமித்தான். உள்ளுக்குள் சபாஷ் போட்டான்.

இப்போது—அவள் பொட்டச்சியாகத் தோன்றவில்லை. பூவாகத் தோன்றினாள். பார்த்தவுடன் மனசுக்குள் மயக்க மூட்டும் மல்லிகையாகத் தோன்றினாள். மணந்தாள்.

அந்த மணம், அவனது ஆத்மாவில் நிறைந்தது. பரவியது. ததும்பியது. உறைந்து போனது. ஆத்மாவுக்குள் ஆத்மாவாய் கரைந்தே போனது.

அறுப்பு நடந்த அந்த இரண்டு மாதங்களுக்குள் அவர்கள் ஜோடி சேர்ந்துவிட்டார்கள். மற்ற கூலியாட்கள் பார்த்து நமட்டுச் சிரிப்பு சிரிக்கிற அளவுக்கு நெருங்கி விட்டார்கள்.

அந்த இருவரைப் பற்றி கிசுகிசுப் பேச்சு நடந்தது. அவர் களுக்குப் பின்னால் களுக்கென்று சிரிக்கிற நையாண்டிச் சிரிப்பு.

இந்தச் சிரிப்புகளும், பேச்சுகளும் அவர்களை கலங் கடித்துவிடவில்லை. ஒருவரை ஒருவர் இனம் பார்த்துக் கொள்ள உதவியது. நெருங்கிக் கலக்க உதவியது.

அன்றைக்கு—

அறுப்பு முடிந்த பிறகுதான் காலைச் சாப்பாடு. ஒரு வேலி மரத்துக்கடியில் சாப்பாடு. தூக்குச்சட்டிகள் எல்லாம் அங்குதான் இருந்தன.

அறுப்பு முடிய ஒன்பது மணியாகிவிட்டது. ஏறு வெயில் இதமாக இருந்தது. முதலில் அறுப்பை முடித்துவிட்டு கொத்தன் முதலில் வந்தான். வந்து அவன் தூக்குச்சட்டியைத் திறந்தான்.

சூடு ஆறாமல் உள்ளே போட்டு மூடிவைத்ததால்... சோறு புழுங்கிவிட்டது. தொட்டால், துறுதுறுவென்று நைந்து கொண்டு போனது. சாப்பிட ஆகாது. ஜம்புவுக்கு என்ன செய்வதென்று தெரியவில்லை. பசிவேறு கிள்ளுகிறது. பாடுபடுகிறவனால் பசி பொறுக்க முடியாது. வேலை முடிய எப்படியும் ராத்திரி எட்டுமணியாகிவிடும். அது வரைக்கும் சாப்பிடாமல் இருப்பதா? சமாளிக்க முடியுமா?

கஷ்டம்தான்.

ஆனால் என்ன செய்ய முடியும்? சோற்றை யாரும் பார்க்காத வண்ணம் மறைவாகத் தட்டினான். மூடிவைத்து விட்டு, வயிறு நிறைய தண்ணீரைக் குடித்துவிட்டு, வந்தான்.

அவன்... நஞ்சைக்குள் வருகிறபோதுதான்... எல்லோரும் கேலியும் கிண்டலுமாய்ப் பேசிக்கொண்டு புறப்பட்டனர்.

"என்ன... கொத்தன் அதுக்குள்ளே சாப்பிட்டாச்சா?"

"சாப்டாச்சு"

"அதுக்குள்ளேயா? போன மாயம் தெரியலே. அதுக் குள்ளேயா, சாப்டாச்சு?"

"ம்"

"கொத்தன் அப்படித்தானப்பா... வேலைன்னாலும் சரி, சோறுன்னாலும் சரி... ரெண்டுலேயும் புயல்தான்."

குப்பென்று ஒரு சிரிப்பலை. கடைசியாக பொழியில் நடந்த மகாலட்சுமி அவன் முகத்தைப் பார்த்தாள். வயிறைப் பார்த்தாள். கண்ணைப் பார்த்தாள்.

அந்தக் கண்ணுக்குள் ஆழத்தில் கிடந்த அந்த விஷயத்தை அவள் உணர்ந்து கொண்டாள். அவள் மனம் சங்கடப்பட்டது. பெண்ணுக்குரிய தாய்மைப் பண்பு. பசித்த முகம் கண்டு மனம் இளகிக் கரைகிற பண்பு.

கூட்டத்தோடு கூட்டமாய்ப் போய் மகாலட்சுமியும் சாப்பிட்டாள். மனசெல்லாம் ஜம்பு. ஜம்புவின் கண்கள். பசியின் வேதனையை மூடி மறைத்துக் கொண்டிருந்த கண்கள்.

அவனது சோற்றுச் சட்டியைப் பார்த்தாள். காலியாக இருந்தது. சாப்பிட்டிருந்தால்... மதியத்திற்கான சோறு மிச்சமாக இருந்திருக்கும்.

மிச்சமில்லை. அப்படியென்றால் மொத்தச் சோறே கெட்டுவிட்டதா? புரிந்து கொள்ள மகாலட்சுமிக்கு ரொம்ப நேரமாகவில்லை.

தனது சட்டியில் இருந்த சோற்றில் பாதியை அள்ளி அவனது சட்டிக்குள்வைத்து, கடிச்சிக்கிடையும் வைத்து, மூடி வைத்தாள். அப்புறம் தான் அவள் மனசு நிலை கொண்டது. அலைபாய்ச்சல் நின்றது. ஒரு நிம்மதியாய்ச் சாப்பிட்டாள். அவளைச் சுற்றிலும் குத்துக் கால் வைத்து உட்கார்ந்து சாப்பிடுகிறவர்களெல்லாம்... கேலியும் பேச்சுமாக ரொம்ப களைகட்டிக் கொண்டிருந்தது.

ஆளுக்கு முந்தி சாப்பிட்டு விட்டு, முதல் ஆளாய் கிளம்பினாள். மகாலட்சுமி, ஜம்புவின் காலடியில் அறுத்துக் கிடந்த தாள்களை அரிக்கிற சாக்கில் குனிந்து கொண்டே சொன்னாள்.

"போய்ச் சாப்பிடுங்க."

"நா சாப்ட்டுட்டேன்."

"தெரியும். போய்ச் சாப்பிடுங்க."

"இல்லே..."

"உங்க தூக்குச்சட்டியிலே சோறு இருக்கு போங்க."

"முடியாது."

"அப்ப... நா நாளைக்கு வேலைக்கு வர மாட்டேன்."

அவன் அவளைப்பார்த்தான். நிமிர்ந்து ஒரு பார்வை பார்த்துவிட்டு மறுபடியும் குனிந்து கொண்டாள்.

"நா சொன்னா... சொன்னது தான். நீங்க இப்ப போய் சாப்பிடலேன்னா... நா வேலைக்கு வரமாட்டேன்..."

அவன் அவளைப் புதிராகப் பார்த்தான்.

வேலைக்கு வரமாட்டேன் என்பதை ஏன் இத்தனை மிரட்டலாய்ச் சொல்கிறாள்? இதில் மிரள்வதற்கு என்ன இருக்கிறது? பூடகமாகச் சொல்கிறாள்? எதையாவது பொத்தி வைத்துப் பேசுகிறாளா?

உறவை அறுத்துக் கொள்வேன் என்ற அர்த்தத்தில் சொல்கிறாளா? அந்த அர்த்தத்திற்கு உறைபோட்டு இப்படிச் சொல்கிறாளா?

இந்த மிரட்டல். அவனது நெஞ்சுக்குள் ஆழத்தில் பாய்ந்தது. பாசத்தைக் காட்டுவதில் இப்படியொரு வெறியா? அதற்கு இப்படியோர் தொனியா? எத்தனை நுட்பமாய் நடப்பைப் புரிந்து கொண்டாள்? எத்தனை சாமர்த்தியமாய் அதைச் சமாளிக்கிறாள்? நான் சாப்பிடாவிட்டால் இவளுக்கு என்ன வந்தது? ஏன் இவளுக்குப் பொறுக்கவில்லை? ஏன் வற்புறுத்துகிறாள், சாப்பிடும்படி? அதிலும் எத்தனை அந்யோன்யம்? பாந்தம்... பரிவு... தாய்மைக் கனிவு.

அவனுக்குள் என்னவோ ரசாயனக்கலவை மாற்றம். நெஞ்சுகிடந்து தவித்தது. அடித்துக்கொண்டது. கண்ணுக்குள் ஈர முள்ளின் உறுத்தல்.

அப்படியே அவள் மடியில் விழுந்து முகம் புதைத்து அழுது கதற வேண்டும் போல் ஒரு வெறி; உன்மத்தம்.

"என்ன போகலியா?" அவள்தான், அதே மிரட்டல். அன்பு மிரட்டல்.

அவனுக்குள் திகைப்பு

"எங்க."

"சாப்ட."

மாட்டேன் என்று சொல்ல வாய்வரவில்லை. போகவும் தயக்கம். போனால் மற்றவர்கள் என்ன நினைப்பார்கள் மறு சாப்பாடா என்று கிண்டல் செய்வார்களே? காதல்ச் சோறா என்று கேலி செய்ய மாட்டார்களா?

"என்ன..." மறுபடியும் அவள்.

"ஒன்னுமில்லே."

"ஒன்னுமில்லேன்னா?"

"நம்மாளுக கேலி பண்ணுவாக..."

"அவுக சொல்லுக்குப் பயப்படுவீக. ஏஞ் சொல்லுக்கு பயப்படமாட்டீக. அப்படித்தானே...?"

"அப்படியில்லே..."

"அப்பச் சரி."

"அப்பச்சரின்னா..."

"நா வேலைக்கு வரல்லை...?"

"சரி... நாசாப்பிடுதேன்..."

அவள் நிமிர்ந்தாள். அவள் உதட்டில் வந்து உட்கார்ந்த சிரிப்பு. உள்ளிருந்து வந்து பூத்தமாதிரியான சிரிப்பு. கண்ணின் ஓரத்தில் ஈரத்துளிர்ப்பு.

சிரிப்பும், கண்ணீருமாய் அவள் தவித்திருக்கிறாள். சாப்பிட மறுத்து விடுவேனோ என்று உள்ளுக்குள் கலங்கி யிருக்கிறாள். பலவாறாய் எண்ணி மாய்ந்திருக்கிறாள். அந்தக் கலக்கத்தின் மொழியாய் அந்த நீர்த்துளி.

சம்மதித்துவிட்டதற்கான மனநிறைவில் பூத்த அந்தச் சிரிப்பு...

அடப்பாதகத்தி...! என்னுள் வந்து உனக்கு இப்படி யொரு பின்னலா ? பிணைப்பா... என்னுள் மயங்கி, என்னையும் மயக்கி... என்னுள் பின்னி என்னையும் அந்தப் பின்னலில் மாட்டி....

என் வயிற்றுக்கும் மனசுக்கும் சோறாகி... நீராகி... மனநிலாவாகி.. என் மனசையே அள்ளிக் கொண்டாயே... அடி சிறுக்கி!

மனசுக்குள் என்னென்னவோ நினைவுக் குழைவு. போய்ச் சாப்பிட்டான்.

சோறா அது? இல்லை. தாய்மையில் ஊறிய பெண்மை. அதன் காதல். எல்லையில்லா அன்பு. உன் உயிர் வாட என் உயிர் வாழாது என்று சொல்கிற உயிர்ப்பாசம். உயிர்ப் பிணைப்பு.

இந்த இழையை எவன் அறுக்க முடியுமா? யார் அறுக்க முடியும்?

அவன் மனசு கிடந்து படபடத்தது. இப்படியோர் நெகிழ்ச்சிமிக்க அனுபவம் ஏற்பட்டதே கிடையாது. ஜென்மத்தி லும் இல்லை. இவன் அம்மாவைப் பார்த்ததில்லை.

அம்மா இருந்திருந்தால்... இப்படித்தான் இருந்திருக் குமோ... இப்படியோர் பாசத்தை உணர்ந்திருப்பானோ.

அவன் கண்களில் பிசுபிசுப்பு. மனசுக்குள் சிறகடிக்கிற பரவசம். ரொம்பக் கனத்தது. அந்தக் கணத்தில் சோறு கூட இறங்க மறுத்தது. அடிக்கடி விக்கியது. விக்கலில் இவன் தலைமட்டும் எம்பி எம்பிக் குதிப்பதை... அதோ அங்கிருந்து அவள் பார்க்கிறாள்.

அவள் பார்க்கிறாள் என்பதைப் பார்த்த பிறகுதான், அவன் அவசரமாய்த் தண்ணீர் குடித்தான். விக்கலுக்காக அல்ல... அங்கே அவள் மனசு விக்கித் துடிக்குமே என்ற பதைப்பில்.

இந்த மாதிரி ஒவ்வொரு மார்கழி தையிலும், அறுப்புச் சமயத்தில்—சில கிராமத்து இளம் மனசுகள் ஜோடி சேரும். கூடிப்பேசும். சிரிக்கும். களிக்கும், மனசு ததும்பும். மற்றவர் பார்வையில் உறுத்தவும் செய்யும். சுற்றியுள்ளவர்களைப் பேசவைக்கும். கேலி செய்து சிரிக்கவைக்கும். ஊருக்குள் செய்தியாகப் பரப்பச் செய்யும்.

அப்படிச் சேர்கிற ஜோடிகளில் சிலது வாழ்விலும் மாலை பூத்து கைகோர்த்து விடுவதுண்டு. ஊரின் வறண்டு காய்ந்த, வெக்கை மனசுகளால் கடித்துக் குதறப்பட்டு, நார் நாராய் கிழிபட்டு நைந்த மனசுடன் பாதைமாறிய திசையில் அரை உயிராய்ச் சிறகு விரிக்கிற ஜோடிகளும் உண்டு.

இதுதான் காதல்—இதுதான் காதல் தோல்வி என்றெல்லாம் யாரும் பெயர் வைத்துக் கொண்டு பேசுவதுமில்லை. அதே ஜோலியாய் அலைவதுமில்லை.

நீண்டு வளைந்து முடிவில்லாமல் செல்கிற கரடு முரடான இந்த வாழ்க்கைப் பாதையில் இதுவும் ஒரு இனிய இளைப்பாறல். இனிய பசுமை. குளிர்ச்சியான கதகதப்பு.

அந்த இளைப்பாறல் ஒரு பாதையின் துவக்கமாக அமைந்து நீள்வதுமுண்டு. ஒரு துண்டு நிழலாக முடிந்து விடுவதுமுண்டு.

ஜம்புலிங்கம் — மகாலட்சுமி ஜோடிக்கு மாலை பூத்து விட்டது. அடுத்த சித்திரையிலேயே கல்யாணம் முடிந்து விட்டது.

கல்யாணமும் சுலபத்தில் முடியவில்லை. ஏகப்பட்ட இடைஞ்சல். கலாட்டா. கரைச்சல். மகாலட்சுமியும், அவளது விதவைத் தாயாரும்தான். எந்தச் சொத்து பத்தும் கிடையாது. ஒரு நகையோ நட்டோ கிடையாது. கம்மல் மூக்குத்திதான் உண்டு.

ஜம்புலிங்கத்தின் அய்யா ஆகாயத்துக்கும் பூமிக்குமாய் தங்கு புங்கென்று குதித்தார்.

"நகை நட்டு இல்லாம கல்யாணமா? இதென்னடா... எழவெடுத்த பேச்சு?" என்று முதலிலேயே கட்டை போட்டார். மறித்து நின்றார்.

"நாடாக்கமார் வீடுகள்லே நகை இல்லாம கல்யாணம் நடக்குமா" நொண்டிப்பய மாப்பிள்ளையா இருந்தாலும். அவனுக்கும் ஆறு பவுன் நகையோட பொண்ணு கெடைக்கும். எம்மகன் ஜம்புலிங்கம்... எப்பேர்ப்பட்ட பய? அவனை மாதிரியான பாட்டாளியை சுத்துப்பட்டி பத்து ஊர்லேயும் பாக்கமுடியுமா? காடு கரையுமா... வீடும் ஆளுமா இருக்கிற இந்தப் பாட்டாளிக்கு பதுனஞ்சு பவுன் நகையோட

பொண்ணுக வரிசையிலே வந்து நிக்காதா? எதுக்கு இந்த வெறும் சிறுக்கியை கட்டணும்?" என்று தாட்டு பூட்டென்று கத்தினார். ஜம்பு பதறிப்போய் விட்டான். மகாலட்சுமி கிடைக்காமல் போய்விடுவாளோ என்று பதைத்தான்.

ஐயாவை மீறிக்கொண்டு காரியம் செய்யத் தெரியாமல் இல்லை. ஆனால், அது அத்தனை மரியாதையா? வரப் போகிற பந்தத்திற்காக, பிறந்த பந்தத்தை அறுப்பதா? ஒருத்தியின் நம்பிக்கையைக் காப்பாற்றுவதற்காக... பெற்று வளர்த்தவரின் நெஞ்சை உடைப்பதா? ஒன்றுக்கு ஒன்று ஈடாகாதே...

தாயில்லாமல் தனிமையில் வளர்த்த அய்யா; தனது வாழ்வைப் பொசுக்கிக் கொண்டு தளிரைக் காப்பாற்றி வளர்த்தவர். தாரச்சுகத்தை தாரை வார்த்துவிட்டு, தலை மகனை நெஞ்சில் சுமந்து போற்றியவர்.

அப்பேற்பட்ட ஐயாவை தவிக்க விட்டு விட்டு— கொதிக்க வைத்து விட்டு... இவன் இவனது ஆசையின் பாதையில் செல்வது சுயநலமல்லவா!

ஆனால்...மகாலட்சுமி? அவளில்லாமல் ஒரு வாழ்வா?

பெரும் சிக்கலாய் வந்து சேர்ந்தது. கரைசேர முடியாத பெரு வெள்ளமாய் வந்தது. நல்ல வேளை—

நாட்டாண்மை பொன்னையா நாடாரிடம் போய் முறையிட்டான் ஜம்பு. அவர் தலையிட்டுத்தான்... ஜம்புவின் ஐயாவை பேசிச் சரிக்கட்டினார்.

"பொம்பளை கொண்டு வந்த நகையை நம்பி வாழற பயலை ஆம்பளைன்னே சொல்லக் கூடாதுடா. அதுலேயும் நீ பெரிய உழைப்பாளி. ஜம்புவும் கடும் உழைப்பாளி. லட்சுமி உங்களையெல்லாம் தூக்கிச்சாப்பிடுகிறபயங்கர உழைப்பாளி. உழைப்பாளிக்கு உழைப்பாளி ஜோடிசேந்தாங்கன்னா...

அவங்களை ஜெயிக்க ஆளே இருக்காது. அமோகமா வாழ் வாங்க.'

பொன்னையா நாடார்தான் முழுக்க தலையிட்டு 'நானாச்சு' என்று பொறுப்பேற்று கல்யாணத்தை முடித்து வைத்தார். மகாலட்சுமியின் அம்மா சீட்டு போட்டு சேர்த்து வைத்திருந்தாள். சிறு தொகை. முந்நூறு ரூபாய். குருவி சேர்த்த மாதிரி சேர்த்தது.

அந்த ரூபாய்க்கு ஒரு குறுக்கம் புஞ்சை வாங்க முடிந்தது. ஜம்பு புஞ்சையின் பக்கத்துப் பொழி. அதையும் நாட்டாண்மையே இருந்து பேசி வாங்கிக் கொடுத்தார். அந்த நிலம் தான் மகாலட்சுமியின் சீதனம்.

நிலம் கிடைத்தவுடன் ஜம்புவின் அய்யாவுக்கு ரொம்பச் சந்தோஷம். சம்சாரிக்கு நிலத்தைவிட அருமையானது, உலகத்தில் வேறு எது இருக்க முடியும்?

மகாலட்சுமி மணமகளாய் இந்த வீட்டிற்குள் நுழைந்த பிறகுதான் அவளது அருமையை உணர்ந்தார், ஜம்புவின் அய்யா.

உழைப்பதில் படு கெட்டி. நாட்டாண்மை சொன்னது மிகையில்லை. ஜம்புவையெல்லாம் தூக்கி விழுங்குகிற அசுர உழைப்பாளி.

மண்ணை நேசிப்பதிலும்—வியர்வையை கொட்டிக் கொட்டி புஞ்சையை அலங்கரிப்பதிலும் மருமகள் மகனுக்குப் பெரும் போட்டியாக இருந்தாள்.

'நாமுந்தி நீ முந்தி' என்று ரெண்டுபேரும் ஓடியாடிப் பாடுபட்டனர். அவர்கள் படுகிற பாடுகளுக்குப் பலனில்லா மல் போகவில்லை.

மொத்த ஊரே அவர்களைப் பார்த்து அசந்து போய் மூக்கில் விரலை வைத்து வியந்துபோய் நின்றது.

# 6

ஜம்புலிங்கத்தைப் போலவே மகாலட்சுமிக்கு விவசாயம் என்றால் ஒரு லயிப்பு. புஞ்சை வேலை என்றால் வெயிலும் தெரியாது. உஷ்ணமும் உறைக்காது. நிலா வெளிச்சத்தில் வேலை செய்கிற சுகத்தோடு... மதிய வெயிலில் கொதி புழுதியில் நிற்பாள்.

ஜம்புலிங்கத்துக்கு... என்ன காரணமோ... விவசாயம் என்றால் அப்படியோர் பிடிப்பு. ஈர்ப்பு. கவர்ச்சி.

பள்ளிப்படிப்பு கூடவேண்டாம் என்று சொல்லி விட்டான். 'ஒன்னாப்பு' வாத்தியார் வைத்திருக்கிற பிரம்பைப் பார்த்து பயந்தானோ... என்ன இழவோ... மழைக்குக்கூட பள்ளியில் ஒதுங்க மறுத்துவிட்டான்.

ஐயா கீரைப்பாத்தி கால்குறுக்கம் போட்டிருந்தார். சின்னக்கிணறு. மிஞ்சிப் போனால் நாலு கஜம்தான் ஆழ மிருக்கும். தலா போட்டிருப்பார். தலா இறவைதான்.

நன்றாக விடிவதற்குள் தலாவைப் பிடித்துவிடுவார். பெரிய—அகலமான—கல்தூணில் தலா மாட்டியிருக்கும். நீளமான மூங்கில் வரிச்சி. அதன் அடி நுனியில் டின் கோர்க்கப்பட்டிருக்கும். மேல் நுனி தலாவில் கோர்த்தி யிருக்கும். கிணற்றுச் சுவரில் உள்பக்கமாய் நீட்டிக் கொண்டு நிற்கும் கல்லில் நின்று கொண்டுதான் ஐயா தலா இறைப்பார். இருட்டு விலகாத அந்த விடியல் பொழுதில் ஜம்புவும் கூடவே வந்துவிடுவான். சளப், சளப்பென்று சப்தத்துடன் விழுகிற தலாத் தண்ணீரையே பார்த்துக் கொண்டிருப்பான். நுரைகளோடு வந்து விழுகிற அந்த நீர், வாய்க்கால் மணலில் மோதிச் சிதறி, நொறுங்கி... பாம்பாக வாய்க்காலில் ஊர்ந்து நகரும். ரொம்பச் சின்னவனாக இருந்த ஜம்பு வாய்க்கால்த் தண்ணீரில் மகிழ்ச்சியுடன் விளையாடுவான்.

ஈரத்தில் நனைந்து கனிந்து போன புஞ்சை மண்ணில் மிதிப்பதும், கால்புதைவதும்...ஒரு காலை உருவி

னால் மறுகால் புதைந்து கொள்வதும்... அது ஒரு தனிச் சுகம். தண்ணீருக்குள்ளேயே ஓடியாடி விளையாடிக் கொண்டிருப்பான். கொஞ்ச நேரம் கழித்து முருங்கை மரத்தடியில் உட்கார்வான். உள்ளங் காலைப் பார்ப்பான். கால், பால் கோதிப் போன சோளம் மாதிரி, 'வெளேர்' என்று இருக்கும். கால் விரல்களின் அடிப்பாகத்தில் ஒரு கோடு விழுந்து கிடக்கும்.

இதைப் பார்ப்பதில் ஜம்புவுக்கு தனியாக ஒரு குஷி. 'ஐயா, எங் கால்லே ஓடை ஓடையா ஓடுதுயா' என்பான். தலாச் சத்தத்தில் அவர் காதில் எதுவும் விழாது, மகனின் உற்சாகமும், உல்லாசமும் மட்டும்தான் தெரியும். 'அப்படியா' என்று மூச்சிரைப்புக்கு மத்தியில் சொல்லி வைப்பார்.

"ஏலேய்— பாத்தியிலே தண்ணி பாய்ஞ்சிருச்சான்னு பாரு" என்பார். அவன் ஏதோ ஒரு பெரிய கடமையைச் செய்கிற பொறுப்பு வந்துவிட்ட சந்தோஷத்தில் வாய்க்கால் வழியாக ஓடுவான். பார்ப்பான்.

"பாய்ஞ்சிருச்சிய்யா" என்பான்.

"அடுத்த பாத்திக்கு பாய்ச்சிரட்டா?" என்று ஆவலாய்க் கேட்பான்.

"ஒன்னாலே முடியாது. இந்தா வாரேன்."

"இல்லே ஐயா... என்னாலே முடியும்யா."

'முடியாதுடா...'

'முடியும்யா.'

— என்று சொல்லிக்கொண்டே வாய்மடையை பிஞ்சு விரல்களால் கிளறுவான். ஈரத்தில் நனைந்து நைய்ந்த மண், அல்வாத் துண்டு போல கிளறக்கிளற வரும். கையாலேயே வாய்மடையை விலக்கி விடுவான்.

அவருக்குச் சந்தோஷம் தாங்காது. ஏழு வயதுச் சிறுவன். அவன் மனசில் மண்ணேயம் பதிந்திருப்பதும் நீர் பாய்ச்சி விடுகிற சித்திரமும்...

மகனின் பெருமையை வாயினிக்கச் சொல்வார். ஊர் மெய்க்க, பார்த்த ஆளிடம் எல்லாம் மகனைப் பற்றித் தம் பட்டம் அடிப்பார்.

'கெட்டிக்காரப்பய' என்று பெருமிதப் பூரிப்புடன் சொல்வார்.

ஜம்புலிங்கம் இளவட்டமாகி, கல்யாணமும் முடித்த பிறகு—

ஊருக்குள் கமலை, கூனை வந்துவிட்டது. நாளா வட்டத்தில்... மாறி மாறி வந்த வறட்சிக்கு ஈடுகொடுத்து, கிணறு வெட்டி வெட்டி, ஆழப்படுத்தி... தலா இறைக்க முடியாத ஆழத்துக்குப் போய்விட்டது. தலா இறைக்க வழியில்லை. கமலை, கூனை கட்டாயமாகிவிட்டது.

கமலை கூனை என்றால்... அதுமட்டுமா? ஏகப்பட்ட தளவாடச் சாமான்கள் வேண்டும். கமலைக்கல் வேண்டும். கமலை வேண்டும். கூனைக்கான வால் வடம், உருளை, கமலை வண்டி, கைக்கயிறு வேண்டும். வண்டி வேண்டும். மாடுகள் வேண்டும். குத்துக்கால, ஏர்க்கால், அது இது என்று. இன்னும் எது எதுவோ வேண்டும்.

இத்தனையும் தயார் பண்ணுவதைத் தவிர வேறு வழியில்லை. மகாலட்சுமி சீதனமாய் கொண்டு வந்த ஒரு குறுக்கம் புஞ்சையைச் சேர்த்து, ரெண்டரைக் குறுக்கமாகி விட்டது.

ரெண்டரைக் குறுக்கத்திற்கும் தலா வைத்து இறைக்க முடியுமா? முடியாது. எல்லா தளவாடச் சாமான்களும் தயார் பண்ணிவிட்டான் ஜம்புலிங்கம். மகாலட்சுமி மாதிரி பாடுபடுகிற பெண்சாதி கிடைத்துவிட்டால், எதைத்தான் தயார் பண்ண முடியாது?

நாள் முழுக்க தலா இறைத்தாலும், கால்குறுக்கம் கூட நனையாது. கமலை இறைவை என்றால்... ஓடுகிற ஓட்டத்தில் அரைக்குறுக்கம் பாய்ந்துவிடும். ஐந்து நாளில் ரெண்டரைக் குறுக்கமும் பாய்ந்துவிடும்.

தலா என்றால், கால்குறுக்கத்தில் மட்டும் கீரைதான் போடமுடியும். கமலை என்றால்... எல்லாப் புஞ்சையும் பயிர் செய்யமுடியும்.

ஐம்புலிங்கமும், மகாலட்சுமியும் கல்யாணமான அன்றைக்கு விடிய விடியப் பேசினார்கள்.

அய்யாவின் தடையை வென்று முடிந்த கல்யாணம். இல்லாமையும், வக்கற்ற நிலைமையையும் போதுமான அளவுக்குச் சொல்லிக் காட்டப்பட்டும் அவமானப்பட்ட பிறகு நடந்த கல்யாணம்.

விடியவிடிய என்னத்தைப் பேசினார்கள்? பட்ட அவமானத்தைத் துடைப்பது எப்படி? நின்று நிலைத்து சாதித்துக் காட்டுவது எப்படி?

அன்றைக்கு அவர்கள் விடியும் வரை பேசியதெல்லாம்... அடுத்த வருஷத்திற்குள் என்னபாடு பட்டாவது மாடுவண்டி பிடித்துவிட வேண்டும் என்றுதான்.

அந்த வருஷம், ரெண்டு பேரும் சேர்ந்து கதிரறுப் புக்குப் போனார்கள். பத்து மூடை நெல் சேர்ந்தது. வருஷச் சாப்பாட்டுக்கு சரியாய்ப் போயிற்று. வருஷம் பூராவும் ரெண்டு பேரும் கிடைத்த கூலி வேலைகளுக்குப் போனார்கள். சீட்டுகள் கட்டினார்கள். ஆடு குட்டிகளை வளர்த்து விற்றார்கள்.

வைராக்கியம் நிறைவேறி விட்டது. மாடுவண்டியோடு கமலையோடு, ரெண்டரை குறுக்கமும் விவசாயம் செய்கிற முழுச் சம்சாரியாகி விட்டான் ஐம்புலிங்கம்.

மேடேறி விட்டான். ஆயுள் முழுக்க அவனது ஐயாவால் செய்யமுடியாத சாதனை, இது. மகாலட்சுமியும் வந்து தோள் கொடுத்து, கூட்டுச் சபதம் எடுத்து, மாடாக உழைத்த உழைப்புக்கு கைமேல் கண்ட பலன்.

ஜம்புலிங்கத்துக்குள் ததும்புகிற சந்தோஷம். பெருமிதம். தெருவில் நிற்கிற மாட்டுவண்டியின் சட்டத்தில் வந்து உட்கார்ந்து கொள்வான்.

இங்கே உட்கார்ந்தால்... வீட்டின் இடதுபுறமுள்ள தொழுவத்தில் கட்டிக் கிடக்கிற காளை மாடுகளையும் பார்த்துக் கொள்ளலாம். நடையில் உட்கார்ந்து சோளத்தைப் புடைக்கிற மனைவியையும் பார்த்துக் கொள்ளலாம்.

காளை மாடுகள் கூளத்தை மடக்கிப் பிடித்து விழுங்குகிறது. அதுகளுக்கு ஏகச்சந்தோஷம். கழுத்து பட்டறை வாரில் மாட்டியிருக்கிற மணிகள், அதன் அசைவுகளுக்கேற்ப குலுங்கி அதிர்ந்து, இசை முழக்கம் செய்கின்றது.

ரெண்டும் நல்ல மயிலை நிறம். சைசான கொம்பு வரிசை. சூட்டிகையான மாடுகள். கைபட முடியாது. பட்டு விட்டால் துள்ளிச் செண்டிக்கும். உழவா, வண்டிப் பாரமா, கமலையா எந்த வேலையாயிருந்தாலும் துணிச்சலாகக் கழுத்தைக் கொடுக்கும். மனம் தளராமல் இழுக்கும்

"என்ன... மாட்டையே பாக்குறீக?"

"சும்மாதான்."

"என்ன சும்மாதான்?"

"மாடுகளும் நல்ல மாடுகளா அமைஞ்சிருச்சு, உன்னைப் போல்."

"நானும் மாடும் ஒன்னா?"

"நீ வந்து பாடுபட்டதாலேதான் மாடுக வந்தது. மாடு களை வைச்சு இந்த வருஷம் நம்ம பாடுகளைப் பார்த்ததோட வாடகைக்கும் போய்... ரெண்டு சில்லறை கெடச்சது... நீயும், மாடுகளும் ஒன்னுதான். வீட்டுக்கு வந்த மகாலட்சுமிங்க..."

"ரொம்பவும் பீத்தாதீங்க..."

அவளுக்குள் பெருமிதமும் நாணமும் குறுஞ்சிரிப்பாக சிரித்தாள். ஓரக்கண்ணால் அவனைப் பார்த்தாள்.

இப்போது.. ரொம்ப அழகாக இருக்கிறாள். அதிலும் இந்த ரெண்டு மாதமாக அவள் முகத்தில் ஒரு கனிவு. கன்ன மேடுகளில் ஒரு ஒளிர்வு. கண்களின் ஆழத்தில் ஒரு மிருது. புதிய உயிரை படைத்து வழங்கப் போகிற பெருமித மிருது.

அவள் — குளியாமல் இருக்கிறாள்.

நேற்றுக்கூட ராத்திரியில் வாழை இலை போன்ற வழவழத்த வயிற்றை மயிலிறகால் வருடுகிற மிருதுவுடன் தடவினான். சேலைக்கட்டை தளர்த்தி விட்டு அடி வயிற்றையும் தடவினான். அவள் கூச்சமும் நாணமுமாய் நெளிந்தாள்.

" 'ச்சேய்' கையை எடுங்க" என்றாள்.

"இங்கதான் எங்க அம்மா இருக்கா."

"அம்மாவா?"

"நா பாக்காத எங்க அம்மா."

"அம்மா இல்லே."

"ம்?"

"ராசா."

"ராசாவா?"

"ம்..."

"எப்படித் தெரியும்?"

"வேணும்னாலும் பாருங்களே."

"அப்படியா?"

"ம்..."

"சரி பாப்பமே..."

வண்டிச் சட்டத்தில் உட்கார்ந்திருக்கிற புருஷன். ஒரு காலை கீழே தொங்க விட்டு, ஒருகாலை சட்டத்தில் குத்துக் காலாக வைத்துக் கொண்டு தன்னையே பார்க்கிற புருஷன். அவன் கண்களில் ஒரு வெளிச்சம். ஒரு மின்னல். உதட்டின் நுனியில் மனசின் உணர்வு.

“சரி, கேப்பைத்தாளை அறுத்தமே... அந்தத் தார்லே என்ன போட?”

“பொடிப்பருத்தியைத் தான் போடனும்”

“இப்போ— என்னமோ புதுசா பருத்தி ஒன்னு வந்திருக்காமே அதைப் போட்டுப் பாத்தா— என்ன?”

“எது? அமெரிக்கன் பருத்தியா?”

“ஆங்... அதான். பெரிய பெரிய சுளையா இருக்கு மாம்லே? வெள்ளாமையும் கூடுதலா வருமாம்லே?”

“ஆமா... பொடிப்பருத்தி ஓரியா வளர்ந்து, பொடிப் பொடிசா காய்கட்டும். அமெரிக்கன் பருத்தி கப்பும் கிளையுமா வளர்ந்து நிறைய காய்கட்டும். காயும் பருவட்டாக இருக்கும்...”

“அதைப் போட்டுப்பார்க்கலாமே...”

“ம்...”

“வெதை எங்க கிடைக்கும்?”

“நம்ம ஊரு சுப்பையா நாயக்கரு வாங்கிட்டு வந்துருக் காரு. அவருகிட்ட வேணும்னா கேட்டுப் பாப்பம்.”

அந்த வருஷம் நல்ல வெள்ளாமை. கம்பு, கேப்பை, சோளம். பருத்தி, மிளகாய் என்று ரெண்டரைக் குறுக்கத்தை யும் ஐந்து தார்களாகப் பிரித்து, ஒவ்வொன்றிலும் ஒவ்வொரு வெள்ளாமை.

ஒரு செலவில்லை, அரைச்சல்லி செலவு கிடையாது. ரெண்டு பேரும் பேய் மாதிரி பாடுபட்டார்கள். ஏவி விடப் பட்ட வேதாளங்கள் மாதிரி.

சூரியன் உதிப்பதை வீட்டு முற்றத்தில் நின்று ஜம்பு லிங்கம் ஒரு நாளும் பார்த்ததில்லை. அதற்கும் முன்பே புஞ்சைக்குப் போய்விடுவான். வாய்க்கால் மண்ணைக் கொண்டே பல்லை விளக்கிக் கொண்டு காலைக்கஞ்சி, புஞ்சையில் தான்.

காலைக்கஞ்சியோடு போகிற மகாலட்சுமி பொழுதுக்கும் காட்டில்தான் வேலை. சாயங்காலம்தான் வீடு வருவாள். சோளமோ, கம்போ எடுத்து, உரலில் போட்டு, உலக்கையால் இடித்து கஞ்சி காய்ச்ச வேண்டுமே...

பொழுது அடைவதையும் புஞ்சையிலிருந்துதான் பார்ப்பான். இருட்டிய பிறகுதான் வீடு. வீட்டிலும் சும்மாயிருக்கமாட்டான். கூளப்படப்பில் — மாட்டுத் தொழுவில் ஏதாச்சும் நோண்டிக்கொண்டிருப்பான். ஒரு வேலையும் இல்லையென்றால் நனைய வைத்துக் காயப்போட்ட புளிச்ச நாரை எடுத்து கயிறு திரிக்க ஆரம்பித்துவிடுவான்.

கண்மாய் மண் அடித்துச் சேர்ப்பான். அதுதான் புஞ்சைக்கு அடி உரம். அதோடு வீட்டுக்குப்பை. மேல் உரமாக ஆட்டுச் சாணி. பயிர்களில் நோய் தென்பட்டால்... அடுப்புச் சாம்பல் தான் மருந்து.

வருஷாவருஷம் நல்ல வெள்ளாமைதான். அரைசல்லிக் கூட செலவில்லை. ஆகவே கட்டுபடியாகவில்லை என்ற பேச்சுக்கே இடமில்லை.

அவர்களுக்குள் உழைப்பும் அப்படித்தான். ஆண்பெண் பேதமேயில்லை. அவள் ஆம்பளை மாதிரி கமலையும் இறைப்பாள். அவனும் களை வெட்டவும் செய்வான்.

ஓரளவுக்கு நல்ல கைத்துட்டு. பொன்னையா பிறந்த வருஷம் கரிசல் காட்டில் நாலு ஏக்கர் விலைக்கு வாங்கினான். நல்ல இடம், மழைத்தண்ணீர் நின்று தேங்குகிற பள்ளப்பகுதி. ஒரே சதுரம். நாலு குறுக்கத்திலும் என்ன போட்டாலும் விளையும்.

கூட்டுறவு சொஸைட்டி தெருத் தெருவாக அலைந்து உறுப்பினர் சேர்த்தது. ஒரணா மெம்பர். லோன் தருவதாகச் சொன்னார்கள்.

"எந்தவித ஈடுமில்லாம நாங்க கடன்தருவோம்... மெம்பராகிக்கோங்க..."

"எங்களுக்கு கடன் எதுக்கு?" என்றான் ஜம்புலிங்கம்.

"வீட்டுக்குப்பை இருக்கு. சும்மா மண்ணு இருக்கு. கம்மாத்தண்ணி இருக்கு. கையிலே உழைப்பிருக்கு. இனிமே எதுக்குக் கடன்? எங்களுக்கு என்ன செலவு இருக்கு?"

தொழுவில் ஒரு பசுமாடு. ஒரு எருமை மாடு. விழுகிற சாணம் குப்பையாகிப் போகும். புஞ்சைப் பயிர்களுக்கு ஊடு பயிராக ஏராளம். அகத்தி மாடுகளுக்கும். ஆமணக்கு வீட்டுக்குத் தேவையான எண்ணெய்க்குச் சரியாக வரும். புளிச்ச நார்ச்செடிகள் கயிறுத் தேவையை ஈடுகட்டும்.

புஞ்சை வேலை போக மற்ற நேரங்களில் வாடகைக்கு உழப்போவான். குப்பையடிக்க, மண்ணடிக்கப் போவான்.

வீடு நிறைய நவதான்யம். விதை வித்துக்கள் வண்டிக்கான தளவாடச் சாமான்கள். ஏர்க்கலப்பைக்கான சாதனங்கள்...

ராமையாவை பெற்றெடுக்கிற வருஷம், வீட்டில் நல்ல ஏறுகால். ஊரெல்லாம் பேச்சு, இவர்களைப் பற்றித்தான்.

'பத்துப்பவுனு பதினைந்து பவுன்னு கழுத்து நிறைய, காது நிறைய போட்டுக்கிட்டு சீதனத்தோட வந்த கழுதைகளெல்லாம் மூளியா நிக்குது. வெறுமனே வந்தாள்... மகராசி! காலெடுத்து வெச்ச நேரம், நல்லநேரம். வீட்டுலே லட்சுமி நின்னு சிரிக்கா..."

"அதுக... ரெண்டும் பாடுபடுதுக, அப்படி."

"இங்க... யாருதா பாடுபடலை? ஊஞ்சல்லே யாரு ஆடிக்கிட்டிருக்காக? எல்லோரும் பாடுபடத்தான் செய்தாக. அவுக கிட்டே லட்சுமி நிக்கலியே..."

"பாடு பட்டு என்ன செய்ய? ஒன்னு மேட்டுக்கு இழுத்தா... ஒன்னு பள்ளத்துக்கு இழுக்கும். வீட்லே ஒத்துமை இல்லேன்னா... வண்டிபள்ளத்துலேதான். அதுக அப்படியா? ஒரு சண்டை சத்தமில்லாம... ஒத்துமையா.. வைராக்யமா..."

"அதான் விஷயம்! நகையில்லாம மூளியாக வந்த சமயம்... அதுக்கு எம்புட்டு அவமானமாக இருந்துருக்கும்? அதுலே வந்த வைராக்யம், ஒரு வீறாப்பு... அதான் இந்த ஏறுகால்.

ஊரில் மூலை மூலைக்கு இதுதான் பேச்சு. நாட்டாண்மை பொன்னையா நாடாருக்கு ரொம்பப் பெருமை. மீசையைத் திருகிவிட்டுக் கொள்வார்.

"நா சேத்து வைச்ச ஜோடியாக்கும் இது!" என்று பெருமிதப்பட்டுக் கொள்வார்.

"தலைப்புள்ளைக்கு எம்பேரைத் தானே வச்சிருக்கான்?" என்று சந்தோஷமாய் சொல்லிக் கொள்வார்.

அது நிஜம் தான். தலைப் பிள்ளையாக ஆண் பிள்ளை தான் பிறந்தது. மூன்று குலவைகள் கேட்டது. முற்றத்தில் புழுவாய்த் துடித்து நின்ற ஜம்புவுக்கு அப்போதுதான் உயிர் வந்தது.

குலவைச் சத்தங்களுக்கிடையே புதிய ஜீவனின் முதல் குரல். அழுகைக் குரல்.

ஆவலோடு உள்ளே எட்டிப் பார்த்தான்.

"வரலாமா?" என்று கேட்டான். பிரசவத்துக்குக் கூடமாட ஒத்தாசையாக நின்ற தெருப் பெண்கள் குறுஞ் சிரிப்போடு விலகினர். ஒரு கிழவிதான் குறுக்கிட்டாள்.

"பொண்டாட்டியை பாக்காம... பொறுக்க முடியலியோ? வந்துட்டான் பய. பாரப்பா... சீமையாள்றதுக்கு ராசா பொறந்துருக்கான்."

சுற்றிலும் பெண்களின் சிரிப்புச் சத்தம். பெண்களின் வெள்ளையான சிரிப்பு. வெட்கிப் போன ஒரு மகிழ்ச்சியில் அவன்.

மகாலட்சுமி சொன்ன மாதிரியே... ராசாதான். மறு நாள்... அவள்தான் கேட்டாள்.

"உங்க புள்ளைக்கு என்ன பேரு வைக்க?"

"ஓம் மனசுலே எதுவும் இருக்கா?"

"இல்லே."

"இல்லாம எப்படி இருக்கும்?"

அவள் தாய்மைப் பொலிவோடு சிரித்தாள். அவளைச் சுற்றிக் கிடந்த துணியிலெல்லாம், மஞ்சள். வீட்டுக்குள் ஒரு புது நெடியே வீசியது.

"சொல்லு..."

"உங்க ஐயா பேரு வைக்கலாமா?"

"அடுத்த புள்ளைக்கு வைச்சிக்கிருவோம்."

"அப்ப இதுக்கு?"

"நாட்டாமை பொன்னையா மாமா இல்லேன்னா... நம்ம கல்யாணமே நடந்திருக்காது. அவரு பொறுப்பேத்து நடத்தி வைச்சதாலேதான்... இந்த ராசாவே பொறந்துருக்கான்."

"அப்ப... அவரு பேரையே வைச்சிருவம்."

"ஒனக்குச் சம்மதம் தானே."

"ம். பொன்னையா. நல்ல பேரு. அவன் பொழப்பும் பொன்னா இருக்கட்டும்."

பேசுகிற பேச்சிலே மனசைப் புரிந்து கொள்கிற சாமர்த்தியம், இந்தக் கழுதைக்கு ஜாஸ்தி. மனசைப்புரிந்து கொண்டு, புருஷன் எண்ணத்தைத் தன் சொல்லாக வெளியிடுகிற நேர்த்தியே தனி.

மகாலட்சுமி சொன்ன மாதிரியே... ரெண்டாவது பிள்ளைக்கு இவனது அய்யா பேர்தான் — ராமையா.

அப்போதுதான்—

ஊருக்குள் கரண்ட் வந்து சேர்ந்தது. கோவில்பட்டி எலெக்ட்ரிகல் கடைக்காரர் மோட்டார்பைக் தடதடக்க

ஊருக்கு வந்தார். அவருக்கு நம்பிக்கையான பெரிய சம்சாரி இங்கு ஒருவர்.

“1000 ரூபாய் தந்தால் போதும். மோட்டார். என்ஜின் எல்லாச் சாமான்களும் தந்துவிடுகிறோம். மிச்சத் தொகையை அடுத்த வருஷ வெள்ளாமையில் தந்து விடுங்கள்” என்றார் எலெக்ட்ரிகல்.

அப்புறமென்ன... ஊரெல்லாம் ‘நான், நீ’ என்று பரபரத்து அலைந்தது. ஒவ்வொரு கிணற்றின் பக்கத்திலும் பூமி புடைத்துக் கொண்ட மாதிரி... பம்ப்ஷெட் ரூம். மின்கம்பத் தூண்கள். இழுப்புக் கம்பிகள். சம்சாரிகளை பிடிக்க விரித்த வலைப்பின்னலாக அந்தரத்தில் குறுக்கும் நெடுக்குமாய் ஒயர்கள்.

ஜம்புலிங்கம் கிணற்றிலும் ஆள் உயரத்திற்கு பம்ப்ஷெட் ரூம். மின் கம்பம். இணைப்புக் குழாய். புஞ்சைக்கே தனி அழகு வந்துவிட்ட மாதிரி இருந்தது.

கூடை மண்வெட்டிகளையெல்லாம் இனி சுமந்து சாக வேண்டியதில்லை. ஷெட்டிலேயே போட்டுக் கொள்ளலாம். மதிய கஞ்சி வெயிலில் காய்ந்து குடிக்க வேண்டியதில்லை. ஷெட் நிழலில் உட்காரலாம்.

ஜம்புலிங்கத்துக்கு ரொம்பச் சந்தோஷம். மெயினை எடுத்து விட்டு, ஏர் வாய்ஸை திறந்துவிட்டு, பச்சைப் பட்டனை அழுத்தினால் போதும்... ‘டட்ர்ர்ரூ’ என்று ஒரு உறுமல், ஒரு சீறல்.

சதசதவென்று தண்ணீர் தொட்டியில் பாயும், வெள்ளிக் கற்றையாக நீர் பாயும். தலையை நீட்டினால் பஞ்சுபஞ்சாக ஆக்கிவிடும். அத்தனை வேகம், அடர்த்தி, அழுத்தம்

நிமிஷ நேரத்தில் கிணற்று நீரை அள்ளி ஊற்றிவிடும் மோட்டார்.

பார்த்துக் கொண்டேயிருக்கிற ஜம்புலிங்கத்துக்கு ஏகப் பிரமிப்பு ‘என்னடா இது, அதிசயம்’ என்று மனசுகிடந்து மலைத்துப்போகும்.

ராமையா நாடார் தலா இறைத்து ஊற்றிய தண்ணீர் பலவீனமாய் வாய்க்காலில் நகர்ந்ததை சிறு பிள்ளையாய் இருந்து பார்த்திருக்கிறான்.

மாடுகளும் மனிதரும் முன்னுக்கும் பின்னுக்குமாய் ஓடி நடந்து... 'கீச், மூச்' சென்ற சப்த சங்கீதத்துடன் கமலை இறைக்கிற போது... 'சளப் சளப்' பென்று கூனை ஊற்றிய தண்ணீர்.

இப்போது மோட்டார் அள்ளி ஊற்றுகிற தண்ணீர் வாய்க்கால் கொள்ளாமல் ததும்பத் ததும்ப நிறைந்து போகிற திமிர். அடடா...

'சே... மனுசன் கண்டுபிடிப்பே... ஒரு தினுசுதானப்பா. மனுச வேலையே சுளுவாயிருச்சே.'

பொருளாதார முன்னேற்றத்திலும் சௌகரிய பெருக் கத்திலும் மோட்டார் தண்ணீராய் மனசுக்குள் ததும்பிக் கிடந்தான். ஐம்புலிங்கம்.

அவன் எதைப் பார்த்து மகிழ்கிறானோ... அதுவே ஒரு சனியனாக வந்திருக்கும் நிஜத்தை... அவன் மட்டுமல்ல, எந்தச் சம்சாரியும் அப்போது உணரவில்லை.

# 7

அன்றைக்கு மகாலட்சுமிக்கு விடிந்ததிலிருந்தே அடி வயிற்றில் நறுக் நறுக்கென்று வலித்துக் கொண்டிருந்தது. விட்டுவிட்டு வருகிற வலி. சுரீரென்று வலி பரவுகிற பொழு தெல்லாம்... நிமிரவிடாது குன்றப்பிடிக்கும்.

'இதென்னடா...? இப்படி வலி குத்துது' என்று முனங்கிக் கொண்டே, வேலைகளைப் பார்த்தாள். கஞ்சியை எடுத்துக்கொண்டு புஞ்சைக்குப் போனாள். வலது கையில் கரண்டி.

புஞ்சையில் வடக்குமூலைத் தார் உழுது கிடந்தது. கோடை உழவு. உழவுக்கட்டியை அடித்து நொறுக்கி ஜம்பு லிங்கம் பாத்தி கட்டிக்கொண்டிருந்தான். மண்வெட்டி தூரிகை போல அவன் கையில் இயங்க... சதுர சதுரக் கட்டமாக பாத்திகள் அமைந்து வந்தன.

மண்வெட்டிக்கு தட்டுப்பட்ட காய்ந்த சாணியை யெல்லாம் அடித்து நொறுக்கினான். கண்மாய் வண்டல் மண், புஞ்சை மண்ணை மாற்றியிருந்தது. ஈரல் மாதிரி இருந்தது.

மகாலட்சுமி வந்து சேர்ந்தாள்.

"என்ன... இம்புட்டு நேரம்?"

"புள்ளைக பள்ளிக் கூடம் போகணும்லே?"

"ஏய் கழுதே, இங்க யாரு வேலை பாக்குறது? களை வெட்டணும்லே?"

"அதான்... வந்துட்டேன் லே?"

இருவரும் பம்ப் ஷெட் நிழலில் உட்கார்ந்தனர். காலை வெயிலில் நிழல் மேற்கு வரை நீண்டு கிடந்தது. சாப்பிட்டான். சாப்பிடுகிற வரைக்கும் பக்கத்தில் உட்கார்ந் திருந்த மகாலட்சுமி, அப்புறம் போய் களை வெட்டினாள். முடியவில்லை. வயிற்றுவலி. ஊசிக்குத்தலாய் சுருக்கிடுகிற வேதனை. ரொம்பக் குனிந்து, இடது முழங்கையை தொடையில் ஊன்றிக் கொண்டு, ஒற்றைக் கையால் களை வெட்டினாள்.

அவளையே பார்த்துக் கொண்டிருந்தான் ஜம்புலிங்கம். முகம் சுளித்தான். வெறுப்பாக இருந்தது. இப்படி அரை மனசோடு களை வெட்டுவதை அவனால் சகிக்க முடியாது.

"என்ன... ஏனோ தானோன்னு இழுத்துக்கிட்டி ருக்கே?"

"சும்மாதான்."

"சும்மான்னா...? வேலை பாத்தா... ரசிச்சுப் பார்க்கணும். இல்லேன்னா சும்மாயிருக்கணும்?"

"ரசிச்சுப் பாக்குறதுக்கு... இது என்ன கூத்தா?"

"செய்ற வேலையும் ஒரு கூத்து தானே? ரசிச்சுப் பார்க்கணும். முழு மனசை பதிச்சு ஒழைக்கணும். அப்பத் தான்... அது வேலை. இல்லேன்னா... மாரடிப்பு தான்."

"மாரடிப்பா?"

"ம். வெறும் மாரடிப்பு? ஒட்டுல்லாத மாரடிப்பு."

வேதனையோடு சிரித்தாள். உதடு பிரிய மறுத்தது. கண்ணுக்குள் அந்த வேதனையின் கரிய நிழல். வாடிக்கிடந்த முகம். சிரிப்பு ஒட்டாமல் நின்றது.

"என்ன கழுதே... ஒடம்புக்கு ஏதாச்சுமா?"

"ம்ச்சூ!"

"கேக்கேன்லே?"

"அடிவயித்துலே நறுக் நறுக்குன்னு வலிக்கு"

"ஒரே வலியா வலிக்கா? விட்டுவிட்டு வலிக்கா?"

"விட்டு விட்டு."

"நேத்துச் சாயங்காலம் குளிச்சியா?"

"இல்லே. வேலை தீரலை."

"ஏய் கழுதை... மாடு கணக்கா வெயில்லே வேலை பாத்துட்டு, குளிக்காம படுத்தா... எப்படி? சூடு பிடிக்காது?"

"என்ன செய்ய?"

கட்டறுத்துக் கொண்ட காளையாக புறப்பட்டான்.

திடும்மென்று அவன் பேச்சை கத்தரித்துக் கொண்டு புறப்படவும் திகைத்துப் போனாள். ஊரை நோக்கிய நடை. வேகு வேகென்று நடை.

கோடை வெயிலில் அவன் சிறுத்துக் கொண்டே போகிறான்.

கொஞ்ச நேரத்தில் வந்து விட்டான்.

"வா நெழலுக்கு."

"எதுக்கு?"

"வா கழுதே."

"இந்த நெரையை வெட்டிட்டு வாரேன்."

"ஏய்! வான்னா வாயேன். வெட்டுறாளாம், பெரிய வெட்டு. செத்த பய வெட்டு!"

"எதுக்கு இப்படி 'சள்ளு, சள்'ளுன்று வுழுதீக? இந்தா வாரேன்."

"உக்காரு."

புருஷனை ஒரு மாதிரியாகப் பார்த்தாள். திகைப்பான பார்வை. அவன் முகத்தில் கோப வெக்கை. அனல். பார்வையின் உக்கிரத்தில் கண்கள் சுருங்கின.

"எதுக்கு?"

"உக்காருன்னா, உக்காரு கழுதே?"

அவள் சிரித்துக் கொண்டே உட்கார்ந்தாள்.

"எதுக்கு இப்படி இன்னிக்கு சாமி யாடுதீரு?" என்று முணங்கினாள்.

அவளது பாதத்தை எடுத்துத் தன் மடியில் வைத்தான். சுண்ணாம்பு எடுத்து வந்திருந்தான். கால் விரல்களின் நகங் களில் சுண்ணாம்பு தடவினான். உள்ளங்கால் மையத்திலும் வட்டமாய் இழுவினான்.

"பேசாம நெழல்லே இரு..."

"களை வெட்டு?"

"நா வெட்டிக்கிடுதேன்..."

"பாத்தி..?"

"இன்னிக்கு நெலாதானே. ராத்திரி நெலா வெளிச்சத் துலே பாத்தி கட்டிருதேன்..."

"ராத்திரியிலா...?"

"ஆமா. குளுந்த நேரத்துலே வேலை மளமளன்னு சாயும். வெயில் வெக்கையும் இராது. சொகம்மா இருக்கும்."

"அப்ப... நானும் வாரேன்."

"பாத்திகட்டவா? ஆம்பளைக வேலையில்லே?'

"பொம்பளை செய்ய முடியாதா? ஆம்பளைக்கு என்ன கொம்பா இருக்கு?"

"சரி வா... வர்றது சரி. வந்து செத்தபய வேலை செய்யக் கூடாது. உசுரோட செய்யனும். ரசிச்சுச் செய்யனும்." அவள் சிரித்தாள். குறும்புச் சிரிப்பில் சொல்லாத கேலி புதைந்திருந்தது. அப்போது அவள் ரொம்ப அழகாகக் கனிந் திருந்தாள். உதட்டில் ஈரமின்னல். குழைவான மினுமினுப்பு.

"என்ன" என்பது போல மௌனமாய் முகமசைத்துக் கேட்டான்.

"அறுப்புக்கு வர்ரீகளா...? கதிரறுப்புக்கு!"

கிசு கிசுப்பது போல துள்ளலாய்க் கேட்டாள்.

அவனுக்குள் குப்பென்று பழைய நினைவுகள். சாகசமான பழைய எண்ணங்கள். நிழலில் விழுந்த ஒளித் துளிகளாய் அந்தக் காட்சிகள். சோற்றுப் பரிமாறல், அன்பு ஒளி வீசிய பாசமிக்க நினைவுகள்.

சட்டென்று அவன் முகம் கனிவு பெற்றது. குழைந்தது. கண் ஓரத்தில் நீர்த்துளி.

"என்ன?" பதைத்துப் போய் அவள்.

"ஒன்றுமில்லே கழுதை" என்று கண்ணைத் துடைத்தான். "நீ... எனக்குப் பொண்டாட்டியில்லே. அம்மா" என்றான்.

அவன் குரலில் ஒரு தழைவு. கரகரப்பு. அப்புறம்... அங்கே ஒரு ராத்திரி வந்து போயிற்று.

# 8

செய்கிற தொழிலே தெய்வமாகக் கருதி மனம் ஒன்றிப் பாடுபடுவதைச் சுபாவமாகக் கொண்ட ஜம்புலிங்கத்திற்கு விவசாயம் ஏறு முகமாகவேயிருந்தது. கமலை, கூனை, வடம் எல்லாம் வேண்டாத பொருளாக்கிவிட்டது, மோட்டார்.

அவன் எதிலுமே திருத்தமாயிருப்பான். எந்த வேலை யிலும் மனம் ஒட்டி உழைப்பான். அவனிடம் இருக்கிற கலப்பை, மாடுகள் எல்லாமே அப்படித்தான். வஞ்சகமற்ற உழைப்புக்கு உறுதுணையாக இருக்கும்.

வாடகைக்கு உழப்போகிற சிறு சம்சாரிகளிடம் ரெண்டு கலப்பை இருக்கும். சொந்தப் புஞ்சையில் உழுவதற் கென்றால் புதுக்கலப்பை. வலுத்ததாக இருக்கும். அழுந்தப் பதியும். எந்த இறுக்கத்தையும் உடைத்து, ஊடுருவி, பிளந்து... பொது பொது வென்று மண்சாய்க்கும்.

அடுத்தவர் புஞ்சைக்கு —வாடகைக்கு—உழப் போவ தென்றால். அதற்கென்றொரு தனிக் கலப்பை. பழைய கலப்பை. தேய்ந்து மொட்டையான பழைய கொழு.

எத்தனை அமுக்கினாலும் நிலத்தில் கோடுதான் கீச்சும். கோலம் போடும். ஆனால், மாடுபத்துகிற சத்தம் மட்டும் ஏழு ஊருக்குக் கேட்கும்.

'த்தைய்... த்தைய்... த்தேய்ய்...' என்று வெறுஞ்சத்தமாய் போட்டு, தேய்த்துவிட்டு வந்து விடுவார்கள். அந்த மாதிரி யான அற்பக்குணம் ஜம்புலிங்கத்திடம் இருக்காது. இது மட்டுமல்ல அந்தக் குணத்தை வேம்பென வெறுப்பான்.

" 'தூ!' என்ன பய பொழைப்பு" என்று அருவருப்புடன் காறித்துப்புவான். எங்கே பாடுபட்டாலும், வஞ்சகமில்லாத உழைப்புதான். உருப்படியான ஒரே கலப்பைதான்.

ராஜபாளையம் போய்... ஒவ்வொரு மரக்கடையாக அலைந்து... நல்ல கனத்த கருந்தேக்குத்தடி வாங்கிக் கொண்டு வந்தான். ஆசாரியிடம் கொண்டு வந்து தந்தான். பக்கத்திலேயே உட்கார்ந்து வேலையைக் கவனித்தான்.

இழைப்புளி போட்டு இழைப்பதையே கவனித்தான். ஆசாரி மட்டியை கடித்துக் கொண்டு அழுந்த இழைத்தார். சுருள் சுருளான மரச்சீவல் வந்து விழுவதையே பார்த்துக் கொண்டிருந்தான்.

ஒரு முழம் நீளம் இருக்கும். அப்படியோர் இரும்புக் குழாய் கொண்டு வந்தான். அதை கலப்பையின் ஒரு நுனியில் செருகி பூண் பிடித்தான்.

செவல்பட்டி சென்று இருக்கிற கலப்பைக் குத்திகளை யெல்லாம் புரட்டிப் புரட்டிப் பார்த்து... கோணல் மாணல் இல்லாத நல்லகுத்தியை தூக்கிக்கொண்டு வந்தான். விளாத்தி குளம் பக்கம் தெளிவான நெய்க்கரிசல். ஒரு சரல் கூட பார்க்க முடியாது. அப்படிப்பட்ட நெய்க்கரிசலில் வளர்ந்த கருவேல மரங்களில் செதுக்கிய குத்தி.

அதையும் ஆசாரியிடம் தந்து... செதுக்கி இழைத்து கொழுமாட்டுவதற்கான கொண்டியை அறைந்து.

அப்படி அணு அணுவாக—நுணுகி நுணுகிக் கவனித்து செய்த ஏர்க்கலப்பைதான் அவனிடம் இருக்கும்.

ஏர்க்கலப்பை என்பது அவனுக்கு விவசாயம். விவசாயத்தின் குறியீடு. ஒரு தெய்வச்சிலையைப் பராமரிக்கிற மாதிரி கண்காணிப்பான். ஒரு கோழி ஏறி அதன் மேல் நின்றால் கூட அவனுக்குச் சகிக்காது. ஒரு வசவோடு அந்தக் கோழியை விரட்டுவான்.

மாடுகளும் அப்படித்தான். வேலையில் பழுது சொல்லவே முடியாது. எந்த வேலையில் கட்டினாலும் முறித்து இழுக்கும்.

"அருகு எடுக்கிற மாதிரியான ஓர் உழவு போட வேண்டுமா? பிடி ஜம்புலிங்கத்தை" என்று ஊரில் ஒரு வலுவான அபிப்பிராயம்.

"ஜம்புலிங்க நாடார் மாடுகள் அவரை மாதிரித்தான். வேலையில் படுகெட்டி" என்று பிறந்த பிள்ளைகளுக்குக் கூடத்தெரியும். அத்தனை பிரபல்யம்.

கள்ளத்தனமான மாடுகள் என்றால், ஜம்புலிங்கம் சகித்துக் கொள்ளவே மாட்டான். ஒருதடவை... அப்படித் தான்...

கழுகுமலை மாட்டுத்தாவணி, பங்குனிமாச மாட்டுச் சந்தை. பார்த்தால் திருவிழாக் கூட்டம் மாதிரி... ஏகமாய் மாடுகள். வண்டிகள் பலபல திசைகளிலிருந்து விற்பனைக்கு வந்திருந்தன. வாங்குவதற்கும் சம்சாரிகள் பலதிசைகளிலிருந்து வந்திருந்தனர்.

ஜம்புலிங்கமும் போயிருந்தான். சந்தை முழுவதும் மூன்று நாளாக அலைந்தான். ஒவ்வொரு மாடுகளாய்ப் பார்த்தான். சைஸ்பார்த்து, நிறம் பார்த்து, சுழி இருக்கிறதா என்று கவனித்து, கொம்புதினுசுகளை உற்றுநோக்கி, கழுத்தடியைக் கவனித்து பரம்பரைக் குணம் விசாரித்து... நடைவிட்டுப் பார்த்து கிட்டப்பார்வை, தூரப்பார்வையெல்லாம் பார்த்து ஒரு ஜோடி மாடு பிடித்தான்.

மாடுகள் நல்ல உயரம். வளர்ப்பு. எலும்பே தெரிய வில்லை. சாட்டைமுள் குத்து வாங்கிய அடையாளமே யில்லை. கழுத்தடித் தளும்பும் கனமாக இருந்தது. நல்லநிறம் எல்லாம் பிரமாதமாயிருந்தது.

புதுசாய் ஒரு மூக்கணாங்கயிறு வாங்கி மாட்டி, பட்டறைவார் கழுத்தில் கட்டி நடத்திக் கொண்டு வந்தான். 12 மைல் நடந்தேதான் வர வேண்டும்.

யார்கண்ணும் பட்டுவிடுமோ என்கிற பயம் வேறு. அதனால் கறுப்புக் கயிறு வாங்கி, சங்கு முன்னால் தெரிகிற மாதிரி மாட்டின் கொம்படியில் கட்டிக்கொண்டு நடத்தி வந்தான்.

வழி நெடுக... பார்த்த பார்வையில் அசந்து போய் விட்டனர். அப்பேர்ப்பட்ட பார்வை. கம்பீரமான மாடுகள்.

இடைவழியிலுள்ள கிராமத்துச் சம்சாரிகள் ஒரு பிரமிப்போடு மாட்டைப் பார்த்தனர். அதுகள் நடக்கிற ராஜ நடையும், குளம்புகளின் அழுத்தமான சத்தமும்...

எல்லார் கவனத்தையும் ஈர்த்தது. விசாரித்தனர் "என்ன வெலை, மாடுக?"

இவனுக்குப் பதில் சொல்லி மாளவில்லை. சகலர் விசாரிப்புகளுக்கும் பெருமிதத்துடன் பதில் சொல்லிக் கொண்டு நடந்தான். அவனுக்கு நிஜமாகவே ஒரு பெருமிதப் பூரிப்பு. ஒரு புதையல் கிடைத்த மாதிரியான சந்தோஷம். தலையில் கிரீடம் அணிந்து ராஜகளையோடு வருகிற ஒரு நினைப்பு. மனத்ததும்பல்.

"நல்ல தேகக்கட்டான மாடுகதான். வேலைக்கு ரொம்பத் தோதாக இருக்கும். குடுத்துவைச்ச புண்ணியாளன் தான் மாட்டுக்காரர்."

விசாரித்தவர்கள். எல்லோருமே இப்படித்தான் கூறிக் கொண்டனர். அது இவன் காதுகளிலும் வந்து விழுந்தன கால்களுக்கு முன்னால் பூத்தூவுகிற மாதிரியானதோர் பிரமை.

வந்து தொழுவில் கட்டினான். புதுமாடுகள் ஊருக்கு வந்திருந்தால்... எல்லாச் சம்சாரிகளும் வந்து பார்ப்பார்கள். கவனிப்பார்கள். அபிப்பிராயம் சொல்வார்கள். வந்த

சம்சாரிகளெல்லாரும் நல்ல வார்த்தைகளாகவே சொல்லி விட்டுப் போனார்கள்.

மாடுகள், புது இடம் என்று பயப்படவில்லை. வேற்று இடம் என்று வெருளவுமில்லை. நன்றாக கூளம் தின்றது. தண்ணீரும் குடித்தது.

'ரெண்டு நாளைக்கு காலாறட்டும், நடந்த களைப்பு தீரட்டும்' என்று விட்டுவிட்டான். மூன்றாம் நாள் மாடு களைப் பத்திக் கொண்டு புஞ்சைக்குப் போனான். நல்ல பச்சைப் புல்லில் மேயவிட்டான்.

உழவில் மாட்டிப்பார்த்தான். ரெண்டுசால் சுற்றி முடித்தான். மூன்றாவது சாலுக்கு கலப்பையை நகர்த்துகிற போது இடத்தை மாடு 'லபக்'கென்று படுத்துக் கொண்டது. கலப்பையின் முகக்கால் தலை கீழாய்த் தொங்கியது. வலத்தைமாடு பயத்தில் வெலவெலத்து நின்றது.

பிறவி சம்சாரியான ஜம்புலிங்கத்துக்கு திக்கென்றது. மனசின் ஆழத்தில் முள் குத்தலாய் ஒரு திகில். காலடித்தரை உருவிக்கொண்டு நழுவுகிற மாதிரியான ஒரு அதிர்ச்சி.

சிதறிப் போன மனசை இழுத்துப் பிடித்தான். தேற்றிக் கொண்டான். நழுவியோடிய நம்பிக்கையை சிரமப்பட்டு இழுத்துப் பிடித்தான். மறுநாள் வண்டியில் மாட்டிப் பார்த்தான். மனசுக்குள் திக்.. திக்.. திக்...

ஊரைக் கடந்தது. தடதடக்கிற வண்டிப் பைதாவின் மூர்க்கச் சத்தம் ஓடையையும் கடந்தது: சமதளமான இடத்தில் வண்டிப்பாதையில் இடத்தை மாடு 'டபக்'கென்று படுத்துக் கொண்டது. வலத்தை மாடு பதறிப்போய் மிரட்சியோடு விலகி நின்றுகொள்ள, மாடுபடுத்த வேகத்தில் வண்டிச்சட்டம் புரள, இவன் அலக்காக தூக்கியெறியப்பட்டான்.

புழுதியில் கிடந்த ஜம்புலிங்கம் பதறிப் போய் தடபுட வென்று எழுந்து கொண்டான்.

அவனுக்குள் பகீரென்றது. 'அடியாத்தே... மோசம் போய்ட்டமே..' என்று மனசு கிடந்து அடித்துக்கொண்டது. உள்ளுக்குள் தீக்கங்குகளை அள்ளியிறைத்த மாதிரியோர்... அவமான உணர்வு. ஒரு காந்தல்.

மாடு வெருண்டு போய் காதுகளை விடைத்தது. இவன் சாட்டைக் கம்பை ஓங்கியவுடன் அதன் தேகம் புல்லரித்து நடுங்கியது.

படுத்த இடத்திலேயே சாணம் கழிந்து கிடந்தது. பயத்தின் கழிச்சல். விழுந்து உருண்ட கிரீடத்தில் அந்தச் சாணம் நிரம்பிக்கிடக்கிற மாதிரி ஒரு பிரமை.

'அட. இழவே! இந்த மாடு நம்மளைக் கேவலப் படுத்திரும் போலிருக்கே! ஏழு ஊரு கேவலம் வந்து சேந்துருமே... ஒன்னுக்குமத்த பய கூட கைகொட்டி சிரிச் சிருவானே... பரம்பரை சம்சாரி மாடு பாத்து பிடிச்சுட்டு வந்துருக்கிற லட்சுணத்தைப் பாருன்னு... ஒரு விருதாப் பயல் கூட விரலை நீட்டிப் பேசிருவானே...'

மற்றவர்கள் சிரிப்பது ஒரு பக்கம் இருக்கட்டும். வேலைக்குப் பயந்து படுத்துக் கொள்கிற இந்தக் கள்ள மாட்டை வைத்துக்கொண்டு எப்படி சம்சாரித்தனம் செய்ய? எப்படி மாரடிப்பது?

வஞ்சகமில்லாத பாட்டாளியை சொல்லணும் என்றால்... மாடு கணக்கா பாடுபடுவான்னு சொல்லுவாக. இங்க என்னடா என்றால்... மாடே சோம்பேறிக் கள்ளக் கழுதையாயிருக்கே... இந்தக் கூத்தை எங்க சொல்லியழ?

அடக்கிரகசாரமே... இப்படிப்பட்ட மாடு, எனக்கா வந்து அமையணும்? இது வீட்லே இருந்தாலே... வீடு விளங்காதே! இது மூஞ்சிலேயாச்சும் முழிக்கலாமா? த்தூ!

ஜம்புலிங்கம் ரொம்பக் குலுங்கிப் போனான். அவமானத்தில் குன்றிப்போய்... அரையாளாகிப் போனான்.

மறுநாளே... மாட்டு வியாபாரிக்கு 'தாக்கல்' சொல்லி யனுப்பி வரவழைத்தான். கீரையோ கீரை என்று ஏலம் போடுகிற மாதிரி அதுகளை விற்றுத் தொலைத்த பிறகுதான் அவனுள் ஒரு நிம்மதி வந்தது. விட்டு விலகிப் போயிருந்த சீதேவிச்சிரிப்பு மறுபடியும் முகத்தில் வந்து சம்மணம் போட்டு உட்கார்ந்தது.

சம்சாரித்தனத்தையும் உழைப்பையும் அப்படி நேசித்தான். அழுத்தமாய் அடர்த்தியாய் நேசித்தான். அப்படி நேசிக்கிற மாதிரி, சம்சாரித்தனமும் சீதேவி லட்சணமாய்—லாபகரமாய்—இருந்தது.

நல்ல வெள்ளாமை, நல்ல விளைச்சல். ஒரு செல வில்லை.வந்ததெல்லாம்மிச்சம்.தொழுநிறையக்கால்நடைகள். வீடு முழுக்கப் பால்மணம். வெண்ணெய் நெடி, சம்சாரியாக இருப்பதில் அவனுக்கொரு பெருமிதம். கர்வம். உலகம் முழுமைக்கும் படியளக்கிற பிரம்மாவே சம்சாரிதான் என்று ஒரு நினைப்பு.

திருவள்ளுவர் செய்யுளை ரேடியோவில் கேட்கும் போதெல்லாம்... நிஜமாகவே அவன் திரேகமெல்லாம் புல்லரிக்கும்,

'நெசந்தானே! வள்ளுவன் வாக்கு எப்படிப் பொய் யாகும்? மனுசன் வாழ்ற வாழ்க்கையிலே அர்த்தம் இருக்கணும்.

தானும் வாழ்ந்து, சுத்தியிருக்கிறவங்க வாழ்றதுக்கும் ஒத்தாசை பண்ற வாழ்க்கைதானே மனுச வாழ்க்கை; மிருகம் மாதிரி தின்னு உறங்கி வாழ்றது வாழ்க்கையா? அது பிழைப்பு.

'அப்படிப் பார்த்தா... சம்சாரி வாழ்க்கைதான் மனுச வாழ்க்கை. தானும் வாழ்ந்து, உலகம் வாழ்றதுக்கு சோறும் தர்றானே... அதுதான். சம்சாரி யாரையும் தொண்ணாந்து கிட்டு நிக்க வேண்டியதில்லே. நிலம் இருக்கு. ஒழைக்கிற பலம்

இருக்கு, யாரையும் எதிர்பார்த்து கையேந்த வேண்டியதுல்லே. ஆனா, ஒலகம், சம்சாரிகிட்டே கையேந்தித்தானே ஆகணும்? ஐயா சோறு போடுங்கன்னு கெஞ்சித்தானே ஆகணும்?'

இதைச் சொல்கிறபோது அவனுக்குள் நிஜமாகவே பெருமிதம் ததும்பும். முகம் ஆமணக்கு இலையாக விரிந்து, பீர்க்கைப் பூக்களாக ஒளிரும்.

"மண்ணுலேயும் அழுக்குலேயும் பெரள்ற சம்சாரி, வேர்வையை வடிச்சு, வெயில்லே காய்றவன் தான். ஆனா... அவனுக்கு 'ஈக்கோலா' ஒலகத்துலே யாரு இருக்கா?"

இதைக் கேட்கிற போது ஏக கம்பீரமாய் நெஞ்சு நிமிரும். உதட்டிலும் கண்ணிலும் மிருதுவான ஒளி துள்ளும்.

இந்தக் கம்பீரமும், பெருமிதமும் அவன் கண் முன்னாலேயே நொறுங்கி, நொய்த் தவிடாகி, சம்சாரித்தனமே சீந்த நாதியற்ற தொழிலாக மாறும் என்று அப்போது ஜம்புலிங்கம் நினைத்துக் கூடப் பார்த்ததில்லை.

## 9

இன்னும் சரியாக விடியவில்லை. கோழி 'கேர், கேர்' ரென்று பயத்தோடு வெளியேற, பின்னாலேயே 'வியா—வியா' வென்று வீறிடல்களாய் கோழிக்குஞ்சுகள். கங்குல் மங்கலாய் நிற்க, அதைக் கண்ட பயத்தைப் போக்கிக் கொள்ள சிறகடித்துக் கூவிக் கொள்கிற சேவல்கள்.

நீராகாரத்தை உப்புப்போட்டு வயிறு முட்டக் குடித்துக் கொண்ட ஜம்பு, தலைப்பாகையை வரிந்து கட்டினான். கூடைநிறைய அள்ளி வைத்திருக்கிற சாம்பலைப் பார்த்தான்.

"என்ன பெறப்புட்டாச்சா?"

"ம்..."

"சாம்பலை வெதைக்கவா?"

“ஆமா, ஈரப்பதம் இருக்கிறப்பவே வெதைக்கணும்லே?”

“ரெண்டு வாட்டி வெதைச்சாச்சுலே?”

“ஆமா. அமெரிக்கன் பருத்தியிலே விழுந்த சுருட்டை நோய் மாற மாட்டேங்குல்லே?”

“இது என்ன புதுக்கொடுமையாயிருக்கு? சாம்பலுக்கும் மாறாத கொள்ளை நோயா?”

“எல்லாம்... நம்ம நேரப்பலன் தா..”

“சித்த இருங்க. காப்பியை குடிச்சுட்டுப் போயிருங்க”

“அப்ப... வெருசா காப்பியைப் போடு”

“ம்ம்...”

லட்சுமி அடுப்பில் விறகைத் தள்ளிவிட்டாள். நெருப்பின் ஜ்வாலை நீள உயர்ந்தது. நெருப்பின் செந்நிற வெளிச்சம் அவள் தேகத்தின் ஒரு பகுதியில் அப்பியிருக்க, மறுபகுதியை கருப்பாக்கி, அவளையே விநோதமாக்கியிருந்தது. ஒரு தேவதையே இறங்கி வந்துவிட்ட மாதிரி அவனுள் ஒரு மாய உணர்வு.

மயக்க நிலையில் இருந்த ஐம்புவை அவள் சத்தம் உசுப்பியது.

“மேலவீட்டு ராமசாமி மச்சான் அவரு புஞ்சையிலே என்னமோ மருந்துத் தூளைக் கரைச்சு அடிச்சாராமே, கேட்டீகளா?”

“ம். விசாரிச்சேன். தொளாயிரத்து அம்பதுன்னு ஒரு மருந்துத்தூளு... அதுலேயும் நோய் மாறலே”

“ஐயய்யோ! பெறகு?”

“ரோக்கர்னு ஒரு தண்ணி மருந்து கடுமையான வெஷம். வாடையே ஆளைக் கொன்னுடும். அதையும் தூள் மருந்தோட சேர்த்து மருந்தடிச்ச பெறகு தான் நோய் மாறி யிருக்காம்.”

“புதுத்தளிர் எடுத்துருக்கா...?”

"ம்..."

"அந்த மருந்து மாயம் எல்லாம் வாங்கனும்னா ரூவா வேணும்லே."

"ஆமா யாரும் ஓசியாவா தருவாக?"

"இதென்ன அக்குருமம்?"

"அது மட்டுமில்லே, என்னமோ உப்பு வந்துருக்காம் புதுசா. அது போட்டாத்தான் பருத்திச் செடி வளர்ந்து பூவெடுக்குமாம்..."

"உப்புன்னா... சோத்துக்குப் போடுற உப்பா?"

"நீ ஒரு கூறுகெட்ட கழுதை. இந்த உப்பு இல்லே, அது வேற உப்பு. என்னவோ... யூரியாவோ கீரியாவோன்னு சொல்லுதாக..."

"அடக்கிரகச்சாரமே! அந்த உப்பு எங்கு கிடைக்குமாம்?"

"கடன் குடுக்குற சொசைட்டியிலேதான் இருக்காம். கடன் வாங்குனாத்தான் உப்புதருவாகளாம். அப்படியொரு கண்டிஷன்"

"ஏன் ரொக்கமாக் குடுத்தா, தரமாட்டாகளா?"

"தரமாட்டாக."

காப்பிச்சட்டியை திறந்து பார்த்தாள். நுரையை விலக்கிக் கொண்டு குமிழ் குமிழாய் காப்பி கொதித்தது. கையை சுட்டுக் கொண்டு ஆவி பாய்ந்தது.

கடுங்காப்பியை ஆற்றித் தந்தாள். குடித்தான். குடித்துக் கொண்டே விழிகளை உயர்த்தி அவளைப் பார்த்தான்.

நேரத்துக்குச் சம்பந்தமில்லாமல் ஏனோ அவனுள் நேற்றைய ராத்திரி வந்து முகம் காட்டியது. அடுப்பு வேலை முடித்த கையோடு வெந்நீர் வைத்துக் குளித்திருக்கிறாள். மஞ்சள் பூசிக்குளித்த முகத்தில் மனசுக்குள் குளிரும் பச்சைத் திட்டுகள்.

பொழுதடைந்து, கருகருவென மயங்கிய பிறகு குளித்த ஈரவேட்டியோடு வந்த ஜம்புவுக்கு, ஈரக்கூந்தல் தவழத் தவழ அவள் நின்ற கோலத்தைக் கண்டவுடன் 'எப்படியோ' வந்தது. பலவீனப்பட்டுப் போய் பகீர் என்றது. லட்சுமியின் புதிய ஒளி, சுருண்டிருந்து விரிந்த வாழை இலை மாதிரி தளதளவென்றிருந்தது.

ஈரவேட்டியை கொடியில் காயப்போட்டான். காய்ந்து வெடவெடத்திருந்த மாற்று வேட்டியை உடுத்திக் கொண்டே கேட்டான்.

"ஏய் கழுதை..."

"என்ன ?"

"இங்கே வா"

"ம் ?"

தட்டானின் சிறகாய் அவள் இமைகள் படபடக்க, அவன் குறும்பாய்ச் சிரித்தான். அவன் கண்களில் ததும்பி வழிந்த ஆசைப் பெருக்கு. உலர்ந்த உதட்டில் அறுபட்ட பல்லி வாலின் மெல்லிய துடிப்பு.

"போனமாசம் சடங்கான கொமரி கணக்கா... இருக்கே கழுதை."

அவனது கிசுகிசுப்பில் கனிந்து குழைந்துபோன அவள் செல்லக் கோபச்சிரிப்போடு நெருங்கி வந்தாள்.

"ஒமக்கு... ரொம்ப மப்பு ஏறிப்போச்சு" என்ற கொஞ்சலான கண்டிப்போடு — அத்துமீறலாய் — கன்னத்தைப் பிடித்துத் திருகினாள்.

இது புதுசு. இப்படி ஒரு நாளும் அவளாகத் தீண்டுவதே இல்லை. தொட்டால் கூட சிணுங்கலும் மறுப்புமாய் திமிறி விட்டுத்தான் உடன்படுவாள். இன்றைக்கு என்னாயிற்று. என் கழுதைக்கு?

அந்த வியப்பை விழுங்கிக் கொண்டு அவனுள் ஓடிப் பரவிய பரவசம். திமிறிக்கொண்டு பாய்ந்த உன்மத்தம்.

அப்படியே இழுத்து அணைத்துக் கொண்டான். ஈரக் குளிர்ச்சியாய்—மிருதுவாய்—அவள் தேகம். வெண்ணெய்க் கட்டியைத் தொட்ட சிலிர்ப்பு,

"ச்சேய்... ஆளைப்பாரு" என்ற செல்லச் சீறலோடு பிடுங்கிக்கொண்டு ஓடிப்போனாள்.

ஊர் அடங்குகிறவரை அவர்கள் கண்களால், மெல்லிய சிரிப்பால், தேகச்சலனத்தால், பேசிக்கொண்ட பேச்சுகள். பொங்கி வழிந்த மனச்சிலிர்ப்பு. இளம் காதலர்களைப் போல.

அன்றைக்கு இன்பத்தின் உச்சத்தில் திளைத்தான். 'கழுதே கழுதே... ஏய் கழுதே... செல்லக் கழுதை' என்று அடங்காத் தாபமாய் மிழற்றிக் கிடந்தான்.

சாம்பல்க் கூடையோடு ஓடைக்குள் இறங்கினான். வேலி மர அடர்த்திக்குள் செம்போத்துப் பறவையின் ஏக்கம் நிறைந்த கூவல்ச்சத்தம். மின்கம்பியில் நின்ற வால் நீண்ட கரிச்சான் 'விச் விச்' சென்று கத்தியது. கொக்குக் கூட்டம் வரிசை தப்பாமல் பறந்து சென்றது, அறுத்தெறிந்த முத்துமாலையாய்.

வைகாசி மாசம், வண்டிப் பாதையில் புழுதி மெத் மெத்தென்று கிடந்தது. கனிந்தமிருதுவாய் பாதத்துக்குச் சுகமாயிருந்தது. சில புஞ்சையில் பருத்திச் செடி சுருட்டை நோயில் வளர்ச்சி குன்றிப் போய்க் கிடந்தது. கம்பம் பயிர் நடவுதேறி இளம்பச்சையாய் எழுந்திருந்தது. புஞ்சையின் சுற்றுப்புறத்தில் ஆமணக்குச் செடி முற்றிப்போய் அழகற்றுக் கிடந்தது. அதன் கொண்டைகளில் வான் நோக்கிய காய்க் கொத்துகள் கோபுரமாய் நின்றன.

சின்னையா நாயக்கர் நெஞ்சில் குத்துப்பெட்டியை ஏந்திக்கொண்டு பாத்தி பாத்தியாய் விரைந்தார். வலது

கையில் உப்பை அள்ளி விதைத்தார். வெள்ளையும் மஞ்சளு மான உப்பு பரவிப் பரவிச் சிதறியது.

'ஐய்யா... இதுதான் என்னமோ உப்புங்கிறாகளே... அதுவா?'

"ஆமா நாடாரே... யூரியாவும், பொட்டாஷும்." சின்னையா நாயக்கர் போன வருஷமே சாதித்துக் காட்டி விட்டார். யூரியா மூடை விதைத்து ஏக்கருக்கு எட்டுப் பொதி பருத்தி எடுத்துக்காட்டி விட்டார்.

ஊரே அவரைப் பார்த்து மூக்கில் விரலை வைத்தது. கள்ளுக்கடைகளில் — ஊர்மடத்தில் — அவர் வெள்ளாமை பற்றித்தான் பேச்சு.

பருத்திச் செடி கப்பும் கவறுமாய் ஓடி, விரிந்து, ஜில்லென்று பூ பூத்து... லட்சணம் பொருந்தியிருந்த விஷயம் தான் பேச்சு.

ஜம்பு ஒரு முடிவுக்கு வந்துவிட்டான்.

'வேறுவழியில்லே. ஊரு நடக்குற பாதையிலே நாம நடந்து போயிர வேண்டியதுதான்.'

மறுவாரம்—

மெம்பராகக்கூட மறுத்தொதுக்கிய சொஸைட்டி வாசலில் நின்றான்.

உழுது வாழ்ந்த ஜம்புலிங்க நாடார், செயலாளர் சொன்னபடியெல்லாம் யார் யார் பின்னாலேயோ ஓடிஓடி தொழுது கொண்டிருக்க வேண்டியதாயிற்று.

கூடவே... நிழலாக ஏழவயசுப் பொன்னையா.

வெளியூரில் குடியிருந்த கர்ணம் அய்யரிடம் "பத்து ஒன்று அடங்கல்" வாங்கி முடிக்கவே ஆத்தாடி யம்மாடி யென்றாகிவிட்டது. ஏழெட்டுத் தடவை நடந்து நடந்து இடுப்பெலும்பு வலியெடுத்தது.

நாலைந்து பேரேடுகளில் கையெழுத்துக் கேட்டார் சொஸைட்டி செயலாளர். உள்ளங்கை வியர்த்தது. மனம் நடுங்கியது. பேனாவை வாங்குகிறபோது அவமானமாய் உணர்ந்து நடுங்கினான்.

சம்சாரியின் கிரீடமே திருவோடாகிப் போன மாதிரி யோர் மனநமைச்சல். நடுங்கி நடுங்கி பேனாவால் பேப்பரை உழுதான். பேப்பரே கிழிந்துவிட்டது. கோணல் மாணலாய் போட்டு முடித்தான்.

800 ரூபாய் கடன். அதில் முந்நூறு ரூபாய் உரம். அதற்கு டிபாசிட், இதற்கு டிபாசிட் என்று எல்லா வகையான பிடித்தமும் போக கையில் வந்து சேர்ந்தது. இருநூறு ரூபாயும் மூன்று மூட்டை உப்பும்தான். அதுவும் கிழிந்து நைந்து போன மூட்டை, கட்டி சேர்ந்து போன உப்பு.

அரசாங்கக் கழுதை வாயில் சிக்கிய காகிதமாய் தான் கிழிந்து நைந்து சிறுமைப்பட்டதை துல்லியமாய் உணர்ந்தான்.

வாத்தியார் ராமமூர்த்தி வீட்டு வானொலியில் "வறட்சியால் பாதிக்கப்பட்ட இராமநாதபுரம் மாவட்ட விவசாயிகளுக்கு 160 கோடி கடன் வழங்கி புதுவாழ்வு அளித்ததன் மூலம், மத்திய கூட்டுறவு வங்கி பெரும் சாதனை நிகழ்த்தியுள்ளது. என்று அதன் மண்டல மேலாளர் நமது நிருபரிடம் தெரிவித்தார்" என்று கேட்டபோது. ஜம்புலிங்கம் தாங்கமுடியாத வெறுப்பில் காறித்துப்பினான்.

# 10

பொழுது புறப்படுவதற்கு முன்பு புஞ்சைப் பக்கம் போனவன். காலைக் கரண்டு நாலுமணிநேரம்தான். எப்ப கரண்டுவரும், எப்பப்போகும் என்று யாருக்கும் தெரியாது. கரண்டுத் தட்டுப்பாடு கழுத்தாம் பிடியாகப் பிடித்துக் கொண்டது.

திடீர்திடீரெனக் கரண்டு கண்ணை மூடிக்கொள்ள, மோட்டாரில் ஆயிரத்தெட்டுக் கோளாறுகள். அதைச் சரி பண்ண எலெட்ரீஷியன்கள் பின்னால் ஓடியலைய வேண்டிய அவலம்.

'அடச்சீ' என்று வருகிறது ஜம்புலிங்கத்துக்கு.

"இதென்னடா பெரிய எழவாப் போச்சு" என்று அடிக்கடி கரண்டைச் சபித்துக் கொள்வதைத்தவிர வேறு வழியில்லை.

கரண்டு வைத்த சட்டத்திற்குட்பட்டு பாடுபட வேண்டிய நிலைமை. சம்சாரியின் எல்லையற்ற உழைப்பை வரம்புக்குட்பட்ட உழைப்பாக்கி விட்டது.

ராத்திரியில் தலா இறைத்த ராமையா நாடார் கீரைப் பாத்தியும், சீனியவரைக்காயும் பயிரிட்டு, அக்ரப்பட்டி அக்ராகாரத்தில் விற்று குடும்பத்தைக் காப்பாற்றினார். கடன் இல்லை. கைத்துட்டுக் கூட இருந்தது. பதினாலு மரக்கால் குதிரைவாலி தான்யம் தந்து முக்கால் குறுக்கம் புஞ்சை கூட வாங்கினார்.

ஜம்புலிங்கம் தலைமுறையில் பாடுபட்டு, மேற் கொண்டு புஞ்சை வாங்கி கமலைமாட்டி, மாடு வண்டி வாங்கி முழுத்த சம்சாரியாக முடிந்தது. ரவ்விலும் பகலிலும் பாடுபட முடிந்தது.

இப்ப என்னடாவென்றால்... எல்லாம் நவீனவிதைகள். பெரிய பெரிய விளைச்சல். ஆனால் சம்சாரிக்கு நச்சுப் பிடுங்கலாய் ஏகப்பட்ட கடன்கள்.

கரண்டு இருக்கிற நேரத்தில்தான் வேலை. ரொம்ப முழிப்பாட்டமாக இருக்கிறது. கரண்டைக் கட்டிக்கொண்டு மாரடிக்க இனியும் முடியாது.

ஆனால், கமலைக்கும் திரும்பிப் போகமுடியாது. ஒரே நாளில் ரெண்டு குறுக்கம் தண்ணீர் பாய்ச்ச முடிகிற கரண்டு வேகத்திற்குப் பழகிப் போய்விட்ட பிறகு... முன்னுக்கும்

பின்னுக்குமாய் இழுத்துச் சாகிற கமலையை வைத்துச் சமாளிக்க முடியாது.

திரும்ப முடியாத குகையில் சிக்கிக் கொண்ட மாதிரி யிருக்கிறது, ஜம்புலிங்கத்துக்கு.

மிளகாய் வற்றல் விளையாத காலத்தில் இருக்கிறவிலை, விளைகிற காலத்தில் இருப்பதில்லை. துணி விலை ஏறிக் கொண்டே இருக்கிறது. பருத்தி விலை இறங்குமுகம் தான். ஹார்லிக்ஸ், ராகிமால்ட் விலை ஏறுமுகம். கம்பு, ராகி (கேப்பை) விலை இறங்குமுகம்.

இந்தக் கொடுமையிலிருந்து சம்சாரி எப்படி மீள? எத்தனை பாடுபட்டாலும் கொள்ளை கொள்ளையாய் அள்ளிக் கொண்டு போகிற அக்ரமத்தில் நட்டம் வராமல் எப்படித் தப்பிக்க? கடனாளியாகாமல் சம்சாரி எப்படி மானத்தோடு இருக்க? வாங்கிய கடனை எப்படிக்கட்ட? போரில் தோற்ற லங்கேஸ்வரனாய் கடன்பட்ட சம்சாரி காலம்பூராவும் அவமானத்தில் வெந்து வெந்து சாகவா? அடக்கொடுமையே...

ஆனிமாச ஏறுபொழுது. வெக்கை குறைவான வெய்யில். குற்றாலக்காற்று ஈரப்பதமாய் வந்து வெயிலின் உக்ரத்தைத் தணிக்கிறது.

ஜம்புலிங்கம் இருக்கிற கரண்டுக்கு தண்ணீரைப் பாய்ச்சி விட்டு வந்தான். ஒட்டுக்கம்பு, முழங்கால் உயரத்தில் வளர வழியில்லாமல் திகைத்து நிற்கிறது. உர உப்பு போட்டும் பிரயோஜனமில்லை.

ஜம்புலிங்கத்துக்கு திக் திக் கென்று வருகிறது. கூட்டுறவு சொஸைட்டிக்காரர்கள் வந்து தாட்டு பூட்டென்று அதட்டு கின்றனர். ஜப்தி செய்யப் போவதாக அடாவடி செய் கின்றனர்.

'வாங்கிய கடனை உடனுக்குடன் கட்டி, புதிய கடன் பெற்றுப் பயன் பெறுமாறு' வானொலி ஒவ்வொரு நாளும் தவறாமல் விவசாயிக்கு உபதேசிக்கிறது.

ஐம்புலிங்கத்துக்கு ஜீப் சத்தம் கேட்டாலே, நடுக்கம் வருகிறது. வரப்போகிற அவமானத்தை நினைத்து நினைத்து பதறுவதைப் போல கொடுமை வேறொன்றுமில்லை.

குழாய்ச்சட்டை போட்டுக் கொண்டு ஏழெட்டுப் பேர் பேரேடுகளும் கையுமாய் வந்துவிட்டார்கள், போனவாரம். முற்றத்தில் நின்ற இவனைச் சுற்றி வளைத்துக் கொண்டனர். களவு செய்து பிடிபட்டுக் கொண்ட கள்ளனைப் போல ஐம்புலிங்கம் தவியாய்த் தவித்தான்.

ஒருவர் பேரேட்டை எடுத்துத் திறந்து எதையோ தேடினார். "அக்கவுண்ட் நம்பர் 156, ராமையா நாடார்மகன் ஐம்புலிங்க நாடார், மொத்தக்கடன் நாலாயிரத்து இருநூறு ரூபாய் அறுபத்தைந்து பைசா" என்றார்.

"இதென்ன கொடுமை" என்று ஐம்பு உள்ளுக்குள் அதிர்ந்து நடுங்கிப் போனான். இரு நூறு ரூபாயும், மூன்று மூடை உப்பும் மட்டும் தானே வாங்கினேன் என்று புலம்பிக் கதறினான். ஆபிஸர்மார்கள் அவனை ஒரு புழுவாக நினைத்துப் பார்த்தனர்.

"வட்டி, தவணைகடந்த வட்டி, அனுப்புன நோட்டீஸ் செலவு எல்லாம் சேரும்லே? இந்தா இருக்கு... ஒம்ம கணக்கு தெரிஞ்சா பாத்துக்கோரும்?"

ஆள் ஆளுக்கு அரட்டினர். ரசீது போடு மாறு வற்புறுத்தினர் இவன் பூனைகளிடம் சிக்கிய எலியாகத் தவித்தான். கையறு நிலை. என்ன செய்ய?

"அடுத்த வாரம் வருவோம். கணக்கு முடிக்கலேன்னா. ஜப்திதான். சர்க்கார்னா... உங்க வீட்டுக் கிள்ளுக் கீரைன்னு நெனைச்சீரா?" என்று குண்டைத் தூக்கிப் போட்டு விட்டுப்

போய் விட்டார்கள். போகிற போக்கில் ஜப்தி ஆர்டரையும் காட்டிவிட்டுப் போனார்கள்.

பதினோரு வயசுச் சிறுவனான பொன்னையாவும், அதிலும் சின்னவனான ராமையாவும் அரண்டுகிடக்கிற அய்யாவைப் பார்த்து அழுதே விட்டனர்.

ஆறுதல் தேடி அம்மாவிடம் போனால்... அவளும் தலைவிரிகோலமாய் அழுது கொண்டிருந்தாள். போக்கிட மற்று அந்தச் சிறுவர்கள் பயத்தில் உறைந்து போய் அழுதுகொண்டேயிருந்த காட்சியை நினைக்க நினைக்க ஜம்புலிங்கத்துக்கு அவமானமாக இருக்கிறது.

"ச்சே... ஒரு மானமுள்ள... தைர்யமுள்ள... அப்பனாகக் கூட புள்ளைக முன்னாலே நிக்கமுடியலியே" என்பதை எண்ணி எண்ணி உள்ளுக்குள் ரொம்ப நைந்து போனான்.

வண்டிப் பாதையில் வந்து கொண்டிருந்த ஜம்புலிங்கத் துக்கு பசி வயிற்றைக் கிள்ளுகிறது. அதை உணர முடியாத அளவுக்கு மனசுக்குள் கிலி. மயிலைக்கண்ட நாகமாய் பதைத்துப் பதறுகிற மனசு.

சின்னக்காளை நாடார் பருத்திக்குள் உப்பு விதைக் கிறார். முத்தையாத் தேவர் புஞ்சையில் பெண்கள் மருந்தடிக் கின்றனர். ஆளுக்கொரு தூக்குவாளி. இடது கையில்...

ஆத்திச் செடிகளை வேருடன் பிடுங்கி கற்றையாகக் கட்டி அது வலது கையில். கற்றைக் கொழையை வாளி நீருக்குள் முக்கி. பருத்திச் செடியில் 'சள்சள்'ளென்று உதறு கின்றனர். ரோக்கர் வாடை கெட்ட வாடையாக வந்து வயிற்றைக் குமட்டுகிறது.

'உப்பு, மருந்து' என்று உற்பத்திச் செலவு வருஷா வருஷம் கூடிக்கொண்டே போகிறது. விளைந்த விளைச் சலுக்கு விலையில்லாமல் சர்வநாசமாகிறது. இதில் வறட்சி, கரண்டுக் கட் என்று உபாதைகள் வேறு...

சம்சாரி சக்கையாகிச் சாகவேண்டியதுதான். கடன் காரனாகி அவமானப்பட்டு நொம்பலப்பட வேண்டியது தான். வேறுவழி? வேறுபுகல்?

வாடிக் குறாவிப் போன (குறையாகிப் போன ஆவி) மனநிலையோடு வீடு வந்து சேர்ந்தான்.

"கஞ்சி ஊத்து" என்றான்.

அவள் குடித்துமுடித்துவிட்டு களை சுரண்டியோடு தயாராய் நின்றாள்.

"என்ன இம்புட்டு நேரம்?"

"நேரமாச்சுல்லே?"

"சரி கஞ்சியை குடிச்சிட்டு வீட்லே இருங்க. நா கம்புக்குள்ளே களை வெட்டிட்டு வாரேன். கோரையும் பசலியுமாய் அப்பிப்போய்க் கிடக்கு..."

"ஏன் கழுதே... நா வீட்டுலே என்ன செய்ய? ஊஞ் சல்லே ஆடவா?"

"என்ன செய்யப்போறீக?"

"நானும் களை வெட்ட வாரேன்... சொரண்டியை எடுத்துட்டுப் போ..."

"ஆமா... இந்தப் பொல்லாத சம்சாரித்தனத்துக்கு அப்படி ஓடி ஓடிப் பாடுபடணுமாக்கும்? பேசாம வீட்லே இருங்க. சாயங்காலக் கரண்டுக்கு தண்ணிபாய்ச்சுங்க. போதும்"

வறுத்த மிளகாய்வத்தலை வாய்க்குள் வைத்து, நறுக் கென்ற சப்தத்துடன் கடித்த கையோடு கும்பாவைத் தூக்கி கஞ்சியை மடக் மடக்கென்று குடித்தான். மீசையில் ஒட்டி யிருந்த கம்மங்கஞ்சி. கீழ்த்தாடையிலும் கஞ்சித் துளிகள்.

குடித்து முடித்து வாயைக் கழுவித் துடைத்த வேகத்தில் திருப்தியாய் ஒரு ஏப்பம் சப்தமாய் வந்தது. கோடை மேக முழக்கமாய், நேரங்கழித்து கஞ்சி குடித்ததால்...

'அச்சடி புச்சடி' என்று ஒரு மயக்கமாய் வந்தது. சுவரில் அப்படியே சாய்ந்த ஜம்புலிங்கம் கடுப்புடன் லட்சுமியை நிமிர்ந்து பார்த்தான். சம்சாரித்தனத்தையே அலட்சியமாய் எடுத்தெறிந்து பேசிய அவள் பேச்சில்... இவனே புறங்காலால் உதைபட்டதாய் உணர்ந்தான்.

"என்ன... அப்படிப் பிடிக்காமப் பாக்கீக?"

"கட்டுபடியாகாம நொம்பலப்படுறோம்ங்கிறதுக்காக சம்சாரித்தனத்தை கொறைச்சுப் பேசாதே, கழுதே... மண்ணுல்லாம மனுசன் இல்லை. மாத்திரையா முழுங்கி மனுசன் வாழ்ந்தாலும் மாத்திரை செய்றதுக்கு மண்ணு வேணும், தெரியுமா கழுதே? கம்பு இல்லாம ஆர்லிக்ஸ் இல்லே. கேப்பை இல்லாம ராகிமால்ட் வராது... தெரிஞ்சுக்கோ..."

"இப்பநா என்ன சொல்லிட்டேன்? உங்களுக்கு இப்படி சுள்ளுன்னு கோவம் வருது?"

"நட்டம் நட்டமா வந்தாலும் பாடுபடுறதுலே கஞ்சத்தனம் செய்யக் கூடாது கழுதே, ராக்கட்லே சுத்துறவனையும் பொதைக்குறது மண்ணுலேதா. மண்ணுலே வேர்வை சிந்துனா... இன்னிக்கில்லாட்டாலும் இனிவர்ற காலத்திலே யாச்சும் பலன் இல்லாமப் போகாது..."

"சரி சரி... ரொம்ப அளக்காதீரும், மொட்டை நாழியை வெச்சுக்கிட்டு. பாடுபட்ட ஆளு சித்தே உஸ்ஸுன்னு உக்காரட்டுமேன்னு எரக்கப்பட்டுச் சொன்னா அந்த மானிக்கா உபதேசியார் மாதிரி அள்ளிவிடுதீரே..."

ஜம்புலிங்கம் அவளது சீற்றத்தில் சமனப்பட்டு மென்னகையாக சிரிக்க...

"வாரீரா... அருவாளை எடுத்துக் கிட்டு? அறுப்புலே நின்னு பாப்பமா?"

அவ்வளவுதான். ஜம்புலிங்கம் ரொம்ப மகிழ்ந்து போய் மனம் விட்டுச் சிரித்தான். மனசுக்குள் பழைய நாட்கள். அன்பும் வலிமையும் மோதிப்பிணைந்த அந்த நாட்கள்.

நெல்தாளின் அரிப்புக்குள்ளும் மனச்சிலிர்ப்புகளோடு பரவசப் பட்ட நாட்கள்.

"சரி கழுதே... நீ வீராதி வீரன். வீரபுத்திர பேத்திதான் தெரியும், போ. பின்னாடியே வாரேன்."

"வர்ரதுன்னா... ஒன்னாவே போயிருவம்"

"அதுவும் சர்த்தான்"

சாரதியாய் சுரண்டிகளுடன் அவள்முன் நடக்க. உருளும் தேராக இவன் தொடர்ந்தான்.

## 11

**நா**லு தாட்டு நிறைய மிளகாய் •வத்தல். கடாப் பெட்டியில் லட்சுமி அள்ளி அள்ளிக் கொண்டு வந்து கொட்ட, தாட்டில் உள்ளே அமுக்கி அமுக்கி ஜம்பு இறுக்கி, சணலால் மூட்டி முடித்தான்.

நற்சதுரமாய் நின்ற நாலு தாட்டுகளும் விம்மிப் போயிருந்தது. வீடுமுழுக்க தும்மலும் இருமலும்தான். காய்ந்த மிளகாய் வற்றலின் கார நெடி நாசியைத் துளைத்து நெஞ்சுக் கூட்டைத் தாக்கியது. பொன்னையா கடையில் போய் நிறையச் சுண்ணாம்பு எடுத்து வந்தான். சுண்ணாம்பால் தாட்டில் கோடுபோட்டு அட்ரஸ் போட்டான் ஜம்பு. 'ரா. ச' என்று அட்ரஸ்.

ராத்திரியில் வண்டியில் பாரம் ஏற்றிவிடுவார்கள். நீள நீளமாய் ரெண்டுவாரி வைத்துக் கட்டிய வண்டியில் நீளமாய்த் தட்டுகளை அடுக்கி மேலே ஒரு வரிசையும் அடுக்கி, பாரக் கயிற்றைப் போட்டு இறுக்கி விடுவார்கள்.

ராத்திரியில் மாட்டைப் பூட்டினால், காலையில் சங்கரன் கோயில் கமிஷன் கடையில் போய்ச் சேரும்.

வந்த வற்றலை அட்ரஸ் வாரியாகக் குவிப்பார்கள். ஐஸ்குச்சி போன்ற மூங்கில் கீறலில் வெள்ளைத் தாளை சொருகிப் போட்டு விடுவார்கள். வெள்ளைத் தாளில்—

'ஆமர் நாடு சம்புலிங்க நாடாா.

மிளகாய் வற்றல் தாட்டு 4'

என்று குண்டுகுண்டாய் எழுதியிருப்பார்கள்.

களத்தில் மிளகாய்ப் பழத்தைக் காயப் போடுகிறபோது சின்னப் பயலாக இருக்கிற ராமையா பழத்தின் மீது குடுகுடுவென்று ஓடிவிளையாடுவான். பொட்டல் வெள்ளைத் தரையில் ரத்தப்பூச்சாய் மின்னும் மிளகாய்ப் பழவிரிவு பார்க்கப் பார்க்க ஆசையாயிருக்கும், சிறுபிள்ளைகளுக்கு.

பிள்ளைகள் ஓடிவிளையாடுவதைக்கூடச் சகிக்க மாட்டான் ஜம்பு. பிஞ்சுப் பாதத்தில் மிதிபட்டு மிளகாய்ப் பழம் 'டிப், டிப்' பென்று வெடிக்கிற சத்தத்தில் இதயமே படபடக்கும்.

"ஏலேய்... பழத்துலே ஓடாதேடா..."

கேட்கமாட்டான். மீண்டும் மீண்டும் ஓடுவான். கோபத்தில் இழுத்து வைத்து முதுகில் பளார் என்று ஒரு அறை வைத்த பிறகுதான்... ராமையா 'பே' என்று அழுது கொண்டு வீட்டைப் பார்த்து ஓடுவான்.

கமிசன் கடையில் கதையே வேறு. ரெண்டு மணிக்கு மார்க்கட் வரும். வெள்ளையும் சொள்ளையுமாய்—கேலிப் பேச்சும் சிரிப்புச் சத்தமுமாய் ஏவாரிகள் வருவார்கள்.

காய்ந்து நெறுநெறுக்கும் வற்றல் குவியலில் ஏறிக் கொண்டு எருமைமாடுகள் மாதிரி மிதிப்பார்கள். வற்றலை அள்ளி அள்ளிப் பார்ப்பார்கள். பிணையல் மாடுகளாய் ஏவாரிகள் வற்றலை மிதிக்க மிதிக்க, ஜம்புவுக்கு நெஞ்செல்லாம் கிடந்து வேகும்.

உழுதது... நாற்றங்கால் போட்டது... நட்டியது... வெயிலிலும் இரவிலும் பாடுபட்டுச் செடியை வளர்த்தது... பங்குனி மாதம் அக்கினி வெயிலில் காய்ந்து காய்ந்து பழம் பறித்தது — எல்லாம் ஞாபகத்துக்கு வரவர... இந்த எருமைகளைப் பார்த்து கத்திக்கதற வேண்டும் போலிருக்கும். ஒன்றும் செய்ய முடியாது. அடைபட்ட ஊமைப்புலியாய் உள்உறுமலாய் உறுமித்தீர வேண்டியதுதான், வேறுவழி?

அவர்கள் வைத்ததுதான் விலை. மறுபேச்சுக்கு இடமே யில்லை. சம்சாரிகளை இஷ்டம் போல வாயில் போட்டு வெற்றிலையாய் மென்று எச்சிலாய் துப்பிவிடுவார்கள்.

இதெல்லாம் ஒருபக்கம் இருக்க, சம்சாரிகளுக்கு வத்தல் விற்க வருவதென்றால்... திருவிழாவுக்கு வருகிற சந்தோஷம். 'முந்தையா நாடார் கிளப் கடைக்குத்தான் சாப்பிடப் போவார்கள். வாய்க்கு ருசியான சாப்பாடு. கறி, கீரையோடு கூடிய தொடு கறி. அந்தக் கிளப் கடையின் ரசம் ரொம்ப ருசியாயிருக்கும். ரொம்பப் பிரபல்யம்.'

ஜம்புவுக்கே அந்த ரசத்தின் மணம் ரொம்ப நாளைக்கு மனசுக்குள் கமழ்ந்து கொண்டிருக்கும்.

மார்கழி தையில் பொதிக்கு முந்நூறு ரூபாய் விற்ற வற்றல், விளைந்து களத்துக்கு வருகிற பங்குனி சித்திரையில் நூற்றியிருபது என்று 'டபக்' கென்று குறைந்து விட்டது. சம்சாரிகள் அலறித் தவித்தனர். 'வெலைவாசியை எறக்கிச் சீரழிக்கிற பாவி யாருதானோ?' என்று புலம்பிக் கிடப்பார்கள்...

வற்றலை விற்றுவிட்டு வீடுவந்து சேர்ந்தால்... ஜம்புவுக்கு அதிர்ச்சியான செய்தி காத்திருந்தது.

பம்ப்ஷெட் கரண்டை ப்யூஸைப் பிடுங்கி நிறுத்தி விட்ட தகவல். கரண்டுப்பில் கட்ட மறந்துபோனது அதற்குப் பிறகுதான் ஞாபகத்துக்கு வந்தது.

கரண்டாபீஸ் ராஜபாளையத்தில். போய்ச் சேரவழி தெரியாது. கரண்டாபீஸ் இருக்கிற இடமும் தெரியாது. யாரைப் பார்த்து என்ன பேச என்று ஒரு இழவும் தெரியாது.

ஜம்பு தவித்துப் போனான். கண்ணைக்கட்டிக் காட்டில் விட்ட மாதிரியிருந்தது. கரண்டை நம்பி கமலையையும் பிடுங்கியாகிவிட்டது.கமலைச்சாமான்களும்கண்டும்காணாம லும் கரைந்து போயிற்று. கலப்பை மட்டும்தான் மிச்சம்.

வழி?

“ச்சே... சம்சாரி காட்லே இருந்து பாடுபட விடாம... கரண்டாபீஸுக்கும் உரக்கடைக்கும் அலைய வைச்சுட் டாங்களே...” என்று புலம்பினான்.

வண்டிச் சட்டத்தில் அசந்துபோய் உட்கார்ந்து விட்டான். கொக்கு நோய் கண்ட கோழியாய் குறாவிப் போனான். அவன் முகமே களைகெட்டுப் போய்விட்டது.

லட்சுமிக்கு அவனைப் பார்க்கப் பார்க்க குலை பதறி வந்தது.

“இப்படியே உக்காந்துருந்தா... என்னாகும்? ஏதாச்சும் ஆகுற வழியைப் பாருங்க.”

“என்னத்தைப் பாக்கச் சொல்றே கழுதை? ஓம் மூஞ்சி முகரையைப் பாக்க வேண்டியது தான்...”

லட்சுமி காயப்படாமல் சிரித்தாள்.

‘எம்மூஞ்சி முகரையை ராசா பாப்பீகளா? ராணிமார்க மூஞ்சியைத் தான் பாப்பீக.”

எகத்தாளமாய் அவள் பேசி ஒரு நொடிப்பு நொடித்த வுடன் —அவள் முகக்கோணலைப் பார்த்தவுடன்— சகலத்தையும் மறந்து குபீரெனச் சிரித்து விட்டான் ஜம்பு.

சிரிப்பு... சிரிப்பு... அப்ப்ப்படிச் சிரிப்பு. அவளுக்கே சகிக்காத நீளச்சிரிப்பு.

"ஏய் இந்தா! என்ன சிரிப்பாணி வேண்டிக் கிடக்கு?"

"ஏன், சிரிக்கவும் கூடாதா?"

"அதுக்கும் ஒரு காரணகாரியம் வேண்டாம்?"

"சரி... இப்ப என்ன செய்யச் சொல்லுதே என்னை?"

"வாத்தியாரைக் கூட்டிட்டு ராசபாளையம் போய்ட்டு வாங்க... ஆக வேண்டிய காரியத்தைப் பாருங்க. மிளகாய்ச் செடிக வாடுது. உள்ளே கோடைப் பருத்தி ஊனணும். தண்ணி வேண்டாமா?"

ஜம்புலிங்கம் முகத்தில் ஒரு குழைவு. கண்ணில் ஒரு கனிவு. வண்டிச் சட்டத்திலிருந்து இறங்கி வீட்டுக்குள் வந்தான்.

நடையில் உட்கார்ந்து, ஒரு காலை நீட்டி ஒரு காலை குத்துக்கால் வைத்து சோளம் புடைத்துக் கொண்டிருந்த லட்சுமி ஒரு திகைப்போடு புருசனைப் பார்த்தாள்.

சட்டென்று மாறிய முகத்தோடு ஏன் கிட்ட வருகிறான்? எதுக்கு? அவளுள் ஒரு மருட்சி.

குத்துக் கால் வைத்திருந்த காலில் சேலை ஒதுங்கிக் கிடந்தது. முழங்காலும் அதற்குக் கீழான சதையும் பிதுங்கிப் போய்த் தெரிந்தது. பலாச்சுளையாய். அவசரமாய் சேலையை இழுத்துக் காலை மூடினாள்.

அவன் முகத்தை ஏறிட்டாள். அவன் முகத்தில் வேறு விதமான குழைவு. நெஞ்சின் ஆழத்தைக் கிளறுகிற கனிவு, உருகி வழிகிற மனசின் ஈரம் கண்ணில் கசிந்தது.

"என்ன...?"

"ஏ கழுதே... நீ எப்பேர்ப்பட்ட மனுசி."

"இப்ப அதுக்கென்ன வந்துச்சு?"

"இல்லே வழி தெரியாம தெகைச்சுக் கிடந்த என்னை சாட்டை முள்ளாலே ஒரு குத்து குத்தி உசுப்பிவிட்டே.

கோபப்பட்ட எனக்கு மந்திரி மாதிரி நின்னு ஒரு வழியும் காட்டிட்டியே..."

"சரி சரி... ரொம்ப அணர்த்தாதீக. நடக்குற காரியத்தைப் போய்ப்பாருங்க"

வாத்தியார் ராமூர்த்தியோடு மூன்று நாள் ராசபாளையத்துக்கு பேயாய்—நாயாய்—அலைந்து சங்கடப் பட்டு கரண்டு வாங்குவதற்குள் போதும் போதும் என்றாகி விட்டது.

'ச்சே!' என்று சலிப்பாகி விட்டது.

பாடுண்டு காடுண்டு என்று சம்சாரியை உழைக்க விடாமல், இப்படி ஊர்வழி சுற்ற வைத்து, ஒவ்வொருத்தனிடம் 'தொண்ணாந்து' நிற்க வைத்து கெஞ்சிக் கூத்தாட வைத்து, இழுத்தடித்தால்...

சம்சாரித்தனமே புண்ணாகிப் போகுமே.

நிஜந்தான்.

புண்ணாகி சீழ் வைத்து புழுவைத்து நாற்றம் குடலைப் புரட்டுகிறது. அந்த வீச்சம் தாங்காமல் சின்னஞ் சிறிசு களெல்லாம் பதறியடித்துக் கொண்டு மெட்ராஸ் பக்கம் ஓட்டம் எடுத்து விட்டதுகள்.

பலசரக்குக் கடைக்கு, அரிசிக் கடைக்கு என்று பொட்டலம் மடிக்க போய் விட்டதுகள். மம்பட்டி பிடித்து வேலை செய்ய ஆளில்லாமல் போய் விட்டது, ஊருக்குள்.

# 12

எருமை மாடு ரெண்டு மூன்று நாளாகவே 'தறிய முறிய' விழுகிறது. விடாத கனைப்பு. லேசுமாசான கனைப்புமில்லை.

அடிவயிற்றிலிருந்து இடிமுழக்கமாய் எழுந்து உருண்டு வருகிற பாறைச் சத்தமாய் நீள்கிற கனைப்பு. காமக் கனைப்பு.

ஒரு நேரம் கூட படுக்க மாட்டேன் என்கிறது. கட்டை அறுத்துக் கொண்டு ஓடுகிற மதர்ப்போடு திமிறித் திமிறி அலைகிறது. நிலை கொள்ளாமல் அலை பாய்கிறது.

வந்து பார்த்த ஜம்புலிங்கம், சட்டென்று உணர்ந்து கொண்டான்.

'மொடையடிக்கு... பயிராவவிடணும்.'

நாளைத் தள்ளிப் போட முடியாது. ஆவுடையாபுரம் போகணும். அங்குதான் ஒரு எருமை மந்தை இருக்கிறது. அதில் இரண்டு எருமைக் கிடாய் நிற்கின்றன. சுற்று பட்டியிலுள்ள பத்து ஊர்களிலும் இருக்கிற எருமையெல்லாம் பயிராகிவிட இங்குதான் வரும்.

நாற்றங்கால் கதிராகாது. நாற்றங்காலில் முளைத்து எழுந்ததை அடுத்த நிலத்தில் பயிராக நடுகிற போதுதான், கதிர்தள்ளும். கர்ப்பமாகிறது. எருமை சம்பந்தமான ஒரு கெட்டவார்த்தையைக் கூட விவசாய அனுபவத்தில் புதிய வார்த்தையாக படைத்து, 'பயிராக விடவேண்டும்' என்ற அர்த்தம் பொதிந்த வார்த்தையாக்கி... நாகரிகம் காத்து...

கிராமத்து ஜனங்களிடம் தான் உழைப்போடு சேர்ந்து மொழியும் வளர்கிறது.

மறுநாளே...

மாட்டைப் பத்திக் கொண்டு புறப்பட்டான், ஜம்பு லிங்கம். வீட்டைச் சூழ வருகிற அவமானத்தை அறியவில்லை, அவன்.

சோளத்தை நனையப்போட்டு, மண்டை வெல்லம் போட்டு ஆட்டி, குழிப்பணியாரம் சுட்டுக் கொண்டிருந்தாள், லட்சுமி. பொன்னையாவும், ராமையாவும் அம்மாவைச்

சுற்றிச் சுற்றி வந்தனர், சுடச்சுட எடுத்து பிய்த்துப் பிய்த்துத் தின்கிற அதுகள் முகத்தில் சந்தோஷக் கும்மாளம்.

'எம்மா... நல்லாருக்கும்மா...'

'ஆமம்மா... இனிச்சுக்கிடக்கு.'

'தின்னுங்கடா... கண்ணுகளா. திங்கத்தானே பாடு படுதோம்..? மிச்சம் வைச்சு என்னத்தை அள்ளிக்கிட்டுப் போகப்போறோம்?'

சின்னதுகளின் குதூகலக் கூச்சல் அவளுக்குள் ஊடுருவி என்னவோ செய்தது. நெஞ்சின் சகல மூலைகளிலும் ஒரு நெகிழ்ச்சி. வயிற்றில் வளர்ந்ததுகளின் முகமலர்ச்சியில் உயிர் வளர்க்கிற தாய்மைப் பரவசம்.

குழியில் மாவைக் கரண்டியால் ஊற்றுகிறாள். இரும்புக் குச்சி ஒன்றினால் குத்திக் குத்திப் புரட்டுகிறாள். வெந்து முடித்த பணியாரம் கோதுமை நிறமாய் மாறியவுடன், குத்திக் குத்தி எடுக்கிறாள்.

சுடச்சுட எடுக்கிறார்கள், சிறுவர்கள். பிஞ்சுக்கை சூடு தாங்கவில்லை. ஆசை ஆசையாய் குதித்துக் கொண்டே பணியாரத்தை ரெண்டு உள்ளங்கையிலும் மாற்றி மாற்றிப் பந்தாடிக் கொண்டே சூடாற்றிக் கொண்டு பிய்த்துத் தின்கின்றனர்.

கரண்டியால் மாவைக் குழியில் ஊற்றுகிற போது அறுபடாத மடிப்பு மடிப்பாய் படிவதைப் பார்த்து பொன்னையா வியப்போடு ரசிக்கிறான். சொல்லிச் சொல்லி மகிழ்கிறான். மென்று கொண்டே பேசுகிறபோது பேச்சில் வருகிற மழலைத் தொனியை லட்சுமி உணர்கிறாள். உள்ளுக்குள் கசிந்து பரவித் ததும்புகிற பாச உணர்வுகள்.

ராமையா அம்மாவின் தோளைச் சுரண்டினான்.

"எம்மா... எம்ம...!"

"என்ன செல்லம்...?"

"சோளத் தோசை நல்லாருக்கும் லேம்மா?"

"ம்."

"சுட்டுத்தாம்மா..."

"நல்லாத்திம்பீயா?"

"ம். நாலு தோசை தின்னுபூடுவேன்ம்மா..."

"மூத்தவனே, நீ?"

"ஏழு தோசை திம்பேன்."

"திங்குறதுலே போட்டி போடுதீகளே... புஞ்சையிலே பாடுபடுறதுலே இதே மாதிரி போட்டி போடுவீகளா?"

"ம். போடுவம்."

"எப்படி?"

"அண்ணன் ஒரு புஞ்சை. நா ஒரு புஞ்சை, நல்லா உழைச்சு நெறையா விளைய வைச்சுருவம்."

"பாப்பமே..."

"அப்ப... சோளத் தோசை"

"கண்ணுகளா... சோளத்தை ஆட்டி புளிக்கவைச்சிருக் கேண்டா... ராத்திரிக்கு சுட்டுத்தாரேண்டா"

"அய்ய்."

"அய்ய்ய்."

ரெண்டும் சந்தோஷப் பரபரப்பில் கை தட்டிக் கை தட்டிக் குதித்தன. அதுகள் முகத்தில் பூவனம். அன்றைக்கு மதியம்தான்.

கிராமத்தையே கதிகலங்கடிக்கிற அந்த அதிரடி நிகழ்ச்சி சம்பவித்தது.

இரண்டு ஜீப் நிறைய ஆபீஸர்கள். தடபுடலாக வந்திறங்கிய கூட்டுறவு சங்க குழாய்ச் சட்டைகள். அத்தோடு ... துப்பாக்கியோடு ரெண்டு சிவப்புக் குல்லாய்கள். வினோதமான கத்தி மடிப்புகளோடு காக்கிச் சட்டையும்,

டவுசருமாய், பூட்ஸ்களும் துப்பாக்கியுமாய் வேற்றுக் கிரகக் கிங்கரர்களாய் போலீஸ்காரர்கள்.

ஊர் ஜனம் முழுவதும் பருந்தைக் கண்ட கோழிக் குஞ்சுகளாய் பதறியடித்துக் கொண்டு வீட்டைப் பூட்டி விட்டுக் காட்டில் போய்ப் பதுங்கிக் கொண்டனர்.

'ஊருக்குக் கேடுகாலம் வந்துருச்சு. நாச காலம் வந்துருச்சு' என்ற புலம்பல்களோடு ஓடி ஒளிந்த ஜனங்கள். ஊரில் சூறாவளியாய் சுழன்ற கிலிப்பரப்பில்... லட்சுமி திகைத்துப் போயிருந்தாள். இவள் எங்கே ஓட முடியும்?

அதிலும் ஒரு தைர்யம்! 'ஆம்பளை இல்லாத வீட்லே வந்து என்ன செய்யப் போறாக?'

அதையும் மீறி ஏதாச்சும் 'காச் மூச்'சென்று கத்தினாலும்... அதையும் சமாளிக்க ஒரு தைர்யம்.

இவர்கள் வருகையை ஒரு வாரமாகவே எதிர் பார்த்த ஜம்புலிங்கம், கம்மல் மூக்குத்தியை அடகு வைத்து ஐநூறு ரூபாய் ரெடி பண்ணியிருக்கிறான்.

அதைக் கொடுத்து ரசீது போட்டு விடவேண்டியதுதான். பொன்னையாவும், ராமையாவும் அரண்டு போய் ஈரத் துணியாய் அம்மா காலில் அப்பிக் கொண்டனர்.

'எம்மா... எம்மா...' பயத்தில் திணறினர். அச்சத்தில் தவிக்கிற படபடப்போடு ஹீனக்குரலில் முணு முணுத்தனர். தொடைச் சேலையைப் பற்றிப் பிடித்திருந்த அதுகள் கைகளில் நடுக்கம். வியர்வைக் கசகசப்பு.

சோளத் தோசைச் சந்தோஷம் போன இடம் தெரிய வில்லை. பிள்ளைகளின் நடுக்கம் காரணமில்லாமல் அவளுள்ளும் பயத்தை ஏற்படுத்தியது. பிள்ளைகளின் முதுகுகளில் கையால் வருடினாள். ஆறுதலாய்ச் சொன்னாள். 'பயப்படாதீகடா.. கண்ணுகளா...'

"ஏம்மா நம்ம வீட்லே சப்தி பண்ணுவாகளாம்மா?"

"அதெல்லாமில்லேடா..."

"அன்னிக்கு அந்தக் கொழாய்ச் சட்டைக்காரர் வந்து சொன்னாரே.."

"அது சும்மா.."

"இல்லேம்மா... அவங்க சும்மா சொல்லமாட்டாகம்மா.. நெசமாவே சப்தி பண்ணுவாகம்மா..."

"அப்படியெல்லாம் ஒன்னும் நடக்காதுடா. தெம்பா இருங்க"

ஆபிஸர்மார்கள் ஒரு படையைப் போல வந்தனர். முற்றுகையிட்டனர். டவாலி போட்ட ப்யூன். பின்னால் துப்பாக்கிகளோடு சிவப்புக் குல்லாய்கள்.

"எங்கம்மா... உங்க வீட்டுக்காரரு?"

"எருமைமாட்டை பயிராவ விட ஆவுடையாபுரம் போயிருக்காக..."

"இன்னிக்கு எங்க கணக்கை முடிச்சாகணும். இல் லேன்ன சப்திதான்"

'அவுக இல்லேல்லே?'

"ஜீப் சத்தம் கேட்டவுடனே ஆம்பளைக ஓடி ஒளிஞ் சிருவாக. நாங்க வெறும் வீட்டைப் பாத்துட்டுப் பாத்துட்டு சும்மா போகவா? சர்க்கார்னா உங்களுக்கு அம்புட்டு லேசாய்ப் போச்சா?"

இன்னொரு ஆபிஸர் குமுறுகிறார்.

"இன்னிக்கு கணக்கு முடிக்கலேன்னா சப்திதான். மாடு வண்டியைப் பிடியுங்க."

பொன்னையாவும், ராமையாவும் பதற்றத்தில் நனைந்த கோழிக்குஞ்சாக நடுங்கினர். வாயை கோணித்துக் கொண்டு 'பேயெ'ன்று அழத்தொடங்கி விட்டனர்.

லட்சுமிக்கு வியர்த்துக் கொண்டு வந்தது. பேச நா எழவில்லை. படபடப்பாக வந்தது. நெஞ்சுக்குள் முட்டிக் கொண்டு வந்த அழுகை...

ஆபிஸர்மார் ஆள் ஆளுக்குக் கத்த... கூச்சலிட, டவாலிக்காரன் மாட்டை நெருங்க... தலைக்கு மேல் வெள்ளம் போய் விட்ட அவலம், லட்சுமிக்கு.

ஐநூறு ரூபாயை எடுத்துத்தந்தாள். மறுத்துவிட்டனர்.

“இருக்கிற கடனில் மூன்றில் ஒரு பகுதியை ஆயிரத்தி நானூறு ரூபாயைக் கட்டினால்தான் உண்டு. இல்லையென்றால்... ஜப்திதான்” என்று தடாலடியாகக் கூறி விட்டனர்.

மாடுகளை பத்திக் கொண்டு ஆலமரத்தில் கட்டி விட்டனர். வண்டியையும் முகக்காலில் நாலு பேர் பிடித்துத் தூக்கி உருட்டி ஆலமரத்திற்குக் கொண்டு போய்விட்டனர். சிறிசுகள் இரண்டும் கதறிக் கதறியழ... பார்க்க நேரமில்லாமல், லட்சுமி பொன்னையா நாடாரைப் பார்க்க ‘வேகு, வேகு’ என்று ஓடினாள்.

அவர் தலையிட்டு பொறுப்பேற்று, ஆயிரத்து நானூறுக்கு ரசீது போட்ட பிறகுதான் வீட்டைச்சுற்றி நின்ற பீடைகள் போய்ச் சேர்ந்தன.

மாடுகளும் வண்டியும் வீடு வந்து சேர்ந்துவிட்டாலும் தலைமுறை முழுக்க வந்து அப்பிக் கொண்ட அவமானத்தை எப்படிக் கழுவ?

லட்சுமி நிலைகுலைந்து கட்டறுந்து போய் அழுது கொண்டேயிருந்தாள். பொன்னையாவும் ராமையாவும் முற்றத்தில் நின்று நாதியற்ற பிள்ளைகளைப் போல அழுது கொண்டேயிருந்தனர்.

அந்தச் சிறுசுகளின் பிஞ்சுமனசுக்குள் இந்த அவமானச் சம்பவம் நெருப்பாய்ச் சுட்டு உணர்வுகளைக் கருக்கி நிறம் மாற்றி விட்டது.

ஜம்புலிங்கம் வீடு வந்த போது, உடைந்து நொறுங்கிப் போன சிலைத் துணுக்குகளாய் வீடு கிடந்தது.

# 13

இன்றைக்கு மதியக்கரண்டு. காலையிலிருந்து ஜம்பு லிங்கத்துக்கு கொத்திப்பிடுங்குகிற தலைவலி. தாங்கவே முடிய வில்லை. மகாலட்சுமி ஏதோ பத்து அரைத்துப் போட்டாள். நெற்றி முன் மண்டையெல்லாம் பச்சைப் பசேர் என்று அந்தப் பத்து.

ஏதோ சாமியை உதட்டுக்குள் முணங்கிக் கொண்டே குளிர்ந்த மனசோடு தடவிவிட்டாள். அந்நேரத்தில் குளிர்ச்சி யாக இருந்தது. அந்தக் குளிர்ச்சி மண்டை நரம்பெல்லாம் உள் பரவலாகப் பரவி, ஜிலீர் என்ற உணர்ச்சி. அந்த உணர்ச்சியில் தலை வலியே போய்விட்ட மாதிரி—

எல்லாம் சில கணங்கள்தான். அரைத்துப்போட்ட அந்தப் பத்து ஈரம் உலர உலர—முன் மண்டையெல்லாம் விறுவிறுவென்று இழுத்துப் பிடித்தது. நெற்றித்தோலே சுருங்கிப் போன மாதிரி ஓர் உணர்வு.

தலைவலி மறுபடியும் குத்தலெடுக்க ஆரம்பித்து விட்டது.

"ஏய் கழுதை... என்னாலே முடியலே. இன்னிக்கு கம்புக்கு தண்ணி பாய்ச்சியாகணும்."

"அதுக்கு என்ன செய்ய? நா போகட்டா?"

"நீ போய்ட்டா... கஞ்சியாரு காய்ச்ச?"

"பிறகு?"

"மோட்டாருத்தண்ணிதானே? சுட்ச்சைதட்டுனா,வந்து பாயப்போவுது. பொன்னையாவைப் போகச் சொல்லேன்!"

"பாய்ச்சிருவானா?"

"பாத்திக்கு பாத்தி வாய்மடையை விலகி வைக்கிறது பெரிய காரியமா...?"

அவள் தெருவில் பாய்ந்தாள். தலைப்பிள்ளையை கூப்பிட ஓடினாள். நடையில் கடைக்குட்டி ஓடிவிளையாடிக் கொண்டிருந்தது. பெண் பிள்ளை. அம்மாவின் பெயர். ராசம்மா.

விளையாடிக் கொண்டிருந்த மகளுடன் மனசு ஓடி விளையாட மண்டையடி மறந்து போயிருந்தது.

எதையோ பறிகொடுத்த கண்ணகி மாதிரி ஆவேசமாய் வீட்டுக்குள் நுழைந்தாள். தலையில் மடேர் மடேரென்று அடித்துக் கொண்டாள். மண்டை ரோமங்கள் கதிகலங்கிப் போய் நாலா பக்கமும் அலைந்தது.

"இதுவும் என் கிரககாரமா? ஏ வவுத்துலே வந்தா... இப்படிப்பட்ட புள்ளை பொறக்கும்? அடக் குருட்டுப்பய தெய்வமே..."

ஜம்புலிங்கத்துக்கு மண்டைக்குள் ஊசியை சொருகிய மாதிரி சுரீரிடுகிற உபாதை.

"என்ன கழுதே... இந்தக் கூப்பாடு?"

"உங்க புள்ளை தண்ணி பாய்ச்ச மாட்டானாம்."

"ஏனாம்?"

"புஞ்சைப் பக்கமே போகமாட்டானாம்... சம்சாரித் தொழிலோட சங்காத்தமே வேண்டாமாம்!"

"முளைக்கலே... மூணு எலை விடலை. அதுக்குள்ளே... அம்புட்டுப் பேசுறானா? வரட்டும்..."

பொன்னையாவின் மீதுள்ள கோபம் இன்னும் தீரவில்லை. வந்து தண்ணீர் பாய்ச்சிக் கொண்டு ஜம்புலிங்கம். சாயங்கால வெயில் சுள்ளென்று கண்ணில் காந்துகிறது. புஜமெல்லாம் எரிகிறது.

வாய்மடை விலக குனிந்தால்... நெற்றிக்குள் 'வெடுக் வெடுக்' கென்று கொத்திப் பிடுங்குகிறது. கோழிக்குஞ்சு புண்ணைக் கொத்திக் கிளறுகிற மாதிரியான வேதனை...

வைகாசி மாச மேகம்... வீசியெறிந்த குதிரைவாலிக் கதிர்களாக வானத்தில். இன்னும் மழை பெய்யவில்லை. பெய்யும் என்கிற நம்பிக்கையும் வரவில்லை.

கம்பம் பயிர் முழங்கால் உயரத்தில். நல்ல தண்ணீர். நல்ல மண். அதனால் கிளை வெடித்து அகல அகலமாய் எழுகிற வீர்யமான பயிர். சாம்பல் பூத்த பசுமையில் தோகை.

பதினாறு வயசுப்பயல் பொன்னையா. மீசை அரும்பத் தொடங்கிவிட்டது. அப்பனுக்குப் பிள்ளையாக இருக்கிற பயல், வேலைக்கு மகனாக இருக்க மனசில்லையே...

சோம்பேறிப்பயல், ஆடுகுட்டிகளை பற்றிக்கொண்டு அதுகள் வாலில் பேன் பார்த்துக் கொண்டு அலைகிறான்.

சம்சாரி மகன் சம்சாரியாக இவன் மலர வேண்டாமா? எங்க அய்யா சாதித்திருக்க முடியாததை, நான் சம்சாரித் தனத்தில் சாதித்திருக்கிறேன். என் மகன் என்னால் முடியாத தூரத்துக்கு உயர்த்திக் கொண்டு போக வேண்டாமா? தொழிலுக்குப் புதிய அந்தஸ்து பெற்றுத்தர வேண்டாமா?

இப்படிச்சுத்தமாகமுகத்தைத்திருப்புகிறானே...சம்சாரித் தனமே ஆகாது என்கிறானே அந்தக் 'கழுதை'யும் நானும் 'மண்ணேமாதா'ன்னு மடியில் விழுந்து வேர்வையைக் கொட்டுகிறோம். எங்க வயிற்றில் அரும்பிப் பூத்த ஒரு பிள்ளை... மண்ணை வெறுக்கிறது. சம்சாரித்தனமே வேண்டாம் என்கிறது.

என்னடா இது... கொடுமை! பெற்ற பிள்ளை கூட சீந்தாத தாய் மாதிரி சம்சாரித்தனம் நாதியற்றுப் போகிறதே... மதிப்பற்றுப் போய்விட்டதே... ஏன்? என்ன காரணம்? சம்சாரித்தனமே வக்கற்றுப் போய்விட்டதா... நம்பி வந்து

வியர்வை சிந்துகிறவர்களைக் காப்பாற்றுகிற சக்தியற்றுப் போய்விட்டதா? சம்சாரிகளைக் கடனாளிகளாக்கி, அவமானப்படுத்தி கந்தர்வகோளமாக்குகிற அக்ரமத்திலிருந்து கடைத்தேற்றுகிற வலிமையை இழந்துவிட்டதா? சம்சாரித் தனம், வக்கற்றவர்களின் புகலிடமாகிவிட்டதா?

அடுத்த பாத்திக்கு நீரைவிட்டார். வாய்க்கால்ச் சருகு களை அள்ளி ஊர்கிற நீரின் நெறுநெறுப்புச் சத்தம். பாய்ந்து முடிந்த பாத்திக்குள் சாம்பல்நிற நாரை. வாலாட்டிக்குருவி நீரில் மிதக்கிற புழு பூச்சிகளைக் கொத்தி விழுங்குகிற பறவையினம். மைனாவின் கிச்சட்டிச் சத்தம். பாத்தி நீரில் உடம்பை நனைத்து சிலுப்பிக் கொள்கிற சிட்டுக்குருவி.

ஜம்புலிங்கத்துக்குள் அலை அலையாய் நினைவுகள். மண்ணோடு தழுவி, மயங்கி, வியர்வைப் பெருக்கோடு கண்ட சுகங்கள், போதைகள், ஏறுகால்ப் பெருமைகள்...

இப்போது...

மண்ணோடு மல்லுகட்டிய பிழைப்பாக ஆகிப் போய்... சலிப்பும் தோல்வியுமே மிச்சமாகிப் போன நிகழ்கால நிலவரம்.

எப்படியாயிற்று... இப்படி?

நிலவரி தவிர வேறு எந்தத் தொடர்பும் சர்க்காரோடு கிடையாது முன்பு. அப்புறம் மாதா மாதம் கரண்டுப் பில் கட்டினான்.

நகரத்து மில் முதலாளிகளுக்கு என்ன நெருக்கடியோ — என்ன பேராசையோ— சம்சாரிகளிடம் தலாபோட்டு விட ஆசைப்பட்டார்கள்.

சம்சாரியோ சமுத்திரமோ என்று பழமொழி. சமுத்திரத் தில் தலா போட்டுவிட்டால் நிரந்தரமாய் இறைத்துக் கொண்டேயிருக்கலாம் என்று நகரத்துச் சீமான்கள் நாக்கில் எச்சில் ஒழுகக் கணக்குப் போட்டார்கள்.

அந்தக் கணக்கில் வந்து சேர்ந்தது பசுமைப் புரட்சி. 'உற்பத்தியைப் பெருக்க முற்போக்கு விவசாயம்' என்ற கவர்ச்சியான கோஷம்.

நவீன ஒட்டு ரக விதைகள். வரலட்சுமி, எம். சி. 5 என்று பருத்தி விதைகள். ஐ. ஆர். 8, ஐ. ஆர். 20 என்று நெல் விதைகள். ஒட்டுச் சோளம், ஒட்டுக் கம்பு என்று எல்லா வற்றிலும் ஒட்டு வீர்ய விதைகள்.

வீட்டில் விதைப் பண்டம் வைத்திருந்து, அதை எடுத்து விதைப்பது பிற்போக்கு என்றாகிவிட்டது. நூற்றுக் கணக்கில் பணம் கொடுத்து விதை வாங்கியாக வேண்டிய நிர்ப்பந்தம். விதையோடு சேர்ந்து வந்த நவநவமான நோய்க்கிருமிகள், பார்த்திராத புதிய புதிய நோய்கள், நாசங்கள்.

அதற்குப் புதிய புதிய பூச்சி கொல்லி மருந்துகள் பி.ஹெச். 810 தூசி மருந்து முதல், நூறுமில்லி நூற்றி இருபது ரூபாய் பைத்ராய்டு வரை புதிய புதிய மருந்துகள்.

தழைச் சத்து, சாம்பல் சத்து, மணிச்சத்து கலவையுள்ள ரசாயன உரங்கள் போட்டாக வேண்டிய அவசியம், அவசரம். வீட்டுக்குப்பை, வீட்டு விதை, கண்மாய் மண், மனித உழைப்பு இவற்றை மட்டும் போட்டு... அரைச்சல்லி செலவில்லாமல் வெள்ளாமை விளைச்சல் கண்ட பழைய காலம்... மறந்துபோன கனவாக காணாமலேயே போய்த் தொலைந்தது. கடந்த காலம் இறந்த காலமாகவே செத்துப் போயிற்று.

இப்போது... மகசூலின் ஒவ்வொரு அசைவிலும் சம்சாரியின் அடிமடியைப் பிடித்து இழுக்கிற கொடிய செலவினங்கள்.

மூலதனம் போட்டு விளைச்சல் காண்கிற வியாபார மாகிப் போன விவசாயம். வியாபாரம் என்று வந்து விட்டால் சந்தைப் போரில் சம்சாரி தப்பிக்க முடியுமா?

உரக்கடை மருந்துக்கடை முதலாளிகள் பெருத்து வளர வளர, சம்சாரிகள் பெரும் கடனாளியாக சிறுமைப்பட...

விளைந்த விளைச்சலைக் கொள்ளையடித்து அள்ளிச் செல்கிற சூறாவளியாய்... மார்க்கெட். கடன் வாங்கி மூலதனம் போட்டு சம்சாரி விளைய வைக்கிற சகல விளை பொருளும் சந்தைக்கு வந்தாக வேண்டிய கட்டாயம்.

சந்தை என்பது பயங்கர சூதாட்டக்களம். சகுனிகளும் துரியோதன முதலாளிகளும் ஜெயித்துச் சிரிக்க, தரும சம்சாரிகள் ராஜ்யத்தையும் மானப்பாஞ்சாலியையும் இழக்கிறார்கள்.

கமிஷன் கடைகளில் எழுதுகிற கச்சாத்துச் சிட்டைகள், சம்சாரிகளின் மரணச் சீட்டுக்கள்தான்.

அது என்ன மாயமோ — ஜாலமோ — சம்சாரி களத்துக்குக் கொண்டு வருகிற பொருளெல்லாம் விலை தலைகீழாய்ச் சரியும். வாங்கப் போகிற பொருளெல்லாம் உச்சியில் ஏறிக்கொள்ளும்.

உரலுக்கு ஒரு பக்கம் இடி. மத்தளத்துக்கு இரு பக்கம் இடி. சம்சாரிக்கு திரும்பிய பக்கமெல்லாம் இடிதான். மிதிதான். சர்வ நாசம்தான்.

ஆக.. ஏழைச்சம்சாரி தீராக்கடனாளியாகிப் போனான். சர்க்காரிடம் கையேந்துகிற பிச்சைக்காரன். கிராம அதிகாரியிலிருந்து, கூட்டுறவு சொஸைட்டி கிளார்க் வரை யாரைக் கண்டாலும் தொழுதுப் பின் செல்ல வேண்டிய அவலம்.

போன வருஷம் தன் வீட்டில் வந்து ஜீப்பை நிறுத்திக் கொண்டு கூட்டுறவு சொஸைட்டி பண்ணிய கூத்தும் கொடுமையும் கொஞ்சமா? ஜப்தி. மாடுகளைப் பிடித்து நடுத்தெரு ஆலமரத்தில் கட்டிப்போட்டு ஆடிய ஆட்டம். ரணகளம். ஜென்மத்திற்கு அந்த ஒரு அவமானம் போதுமே!

நவீன வித்துக்கள் வந்ததால்... உற்பத்தி பெருகியிருக்கிறது. அரைக்குறுக்கத்தில் கம்பு போட்டால்... முன்பு

மூன்று மூடை விளைந்தால் பெரிய வெள்ளாமை என்று பெயர். இப்போது சாதாரணமாய் ஏழு மூடை ஒட்டுக்கம்பு வந்துவிடுகிறது.

அப்பவும் கட்டுபடியாகவில்லை. வருஷா வருஷம் கடன்தான் மிஞ்சுகிறது. காரணம் உப்புக்கடை, மருந்துக்கடை, கமிஷன் கடை வியாபாரிகள், பஞ்சு மில் முதலாளிகள்.

இவர்கள் எல்லாரும் தனித்தனியாய் அரசாங்க உதவி யோடு சம்சாரிகளை அடித்து, வேட்டையாடி, கடித்துக் குதறி ரத்தம் குடிக்கின்றனர். சம்சாரியைக் காப்பாற்ற வேண்டிய சர்க்கார், கபடத்தனமாய் நிற்கிறது.

ஜம்புலிங்கத்துக்கு மனசெல்லாம் கசந்து வந்தது. விவசாயம் கட்டுப்படியாகாவிட்டாலும், பாடுபட்ட தசை கூலிக்குக்கூட வருமானம் இல்லாமல் போனாலும், இந்தத் தொழிலை விட்டுவிட மனசில்லை.

விட்டுவிட்டு என்ன செய்ய...? வேறு என்ன தொழில் தெரியும்?

எதிர்காலம் ஏக இருட்டாக இருந்தாலும்... தொலை தூரத்திலே சிறுபுள்ளியாய் தெரியும் நட்சத்திரம் போல... ஒரு சிறிய நம்பிக்கை.

ஒரு வருஷம் இல்லாவிட்டாலும், மறு வருஷம் நன்றாக ஏறி விளைந்து விடாதா? கடன் அடைபட்டுவிடாதா? விவசாயத்துக்கு மதிப்பு வந்து விடாதா?—என்று அடிமனசில் ஒரு கனவு, நம்பிக்கை.

அதுமட்டுமல்ல. ஒன்று போட்டால் பத்தாக திருப்பித் தருகிற மண்மாதாவை எப்படி சும்மா போடுவது? எப்படி மலடாக்குவது? தாலியறுத்த விதவை போல் விட்டு விடுவதா?

மண் மலடானால்... நாடு எதைத் திங்கும்?

தண்ணீர் மேலமுறுசலுக்குப் போயிற்று. பாதையை ஒட்டிய முறுசல். தெற்கிலிருந்து சைக்கிளில் வாத்தியார்

ராமமூர்த்தி வந்தார். சாயங்கால வெயிலில் கண் கூசியது. இடது உள்ளங்கையை கண்ணுக்குமேல் வைத்து, நிழல்காட்டி, அந்த நிழலில் கண்களை விரித்து உற்றுப் பார்த்தார்.

வாத்தியார்தான் பாவம். நல்ல மனிதர். சிரமப்படுகிற குடும்பம். ஊரில் உள்ள சகலரிடமும் அன்பாகவும் மரி யாதைப் பாங்காவும் பழகுகிறவர். குழைந்த வார்த்தைகளை கம்மிய குரலில் பேசுபவர்.

ரொம்பக் குறைந்த சம்பளம். எல்லாம் சேர்ந்து முந்நூறு ரூபாய்க்குள் சம்பளம். வாய்க்கு எட்டினால் கைக்கு எட்டாது. மாதா மாதம் துண்டு பட்ஜெட். சட்டை நன்றாக இருக்கும். உள்ளே பனியனில் ஆயிரம் ஓட்டைகள். அப்படித்தான் வாழ்க்கையும்.

தேதி இருபதாகிவிட்டால்... வீட்டுத்திண்ணையில் வந்து உட்கார்வார்.

"என்ன நாடாரே... எப்படி சவுகரியம்?" என்ற கனிந்த விசாரணையோடு வந்து கேட்பார்.

"என்னத்தை... சவுகரியம்! ஏதோ... இருக்கோம்... உம்ம பேரைச் சொல்லி."

"எம்பேரைச் சொன்னா... உள்ளதும் போயிரும் நாடாரே..."

"ஏ அப்படிச் சொல்லுதீரு? நீரு கடவுளு மாதிரியில்லே? மாதா பிதா குரு தெய்வம்னு நீங்களே சொல்லித்தருவீக?"

"தெய்வம்! பொல்லாத... தெய்வம்! பேருபெத்தபேரு தாகத்துக்கு நீரு லேதுன்னு தெலுங்கிலே ஒரு சொலவடை சொல்லுவாக. அப்படித்தான் பிழைப்பு இருக்கு."

"தமிழ்லேயும் அப்படி ஒரு சொலவடை சொல்லு வாக."

"ஆமா, உண்டு. பாத்தா தாழம்பூவும் கொண்டையுமாம். பிரிச்சா... ஈரும் பேனுமாம்னு ஒரு சொலவடை இருக்கு."

"என்ன வாத்தியாரய்யா, ஒரேயடியா சலிச்சிக் கிடுதீக?"

"வக்கத்தவனுக்கு வாத்தியார் உத்தியோகம்னு சொன்னவன் வாயில்லே சீனியைத்தான் அள்ளிப் போடணும். சம்பளத்துக்குள்ளே குடும்பத்தை நடத்திக் கொண்டு போறது பெரும் பாடாயிருக்கு. வரட்டிழுப்பு வாழ்க்கை."

"வாக்கு கத்தவனுக்கு வாத்தியார் உத்தியோகம்ங்கிற சொலவடையைத்தான், மாத்தி வக்கத்தவனுக்கு வாத்தியார் உத்தியோகம்னு சொல்றதாக... ஒரு சொல் சொல்வாகளே..."

"அதெல்லாம் சும்மா! வாய்ஜாலம். வாத்தியாருங்க வாழ்ற வாழ்க்கையைப் பாத்தாலே தெரியலியா?"

"அப்படியா சொல்றீக..."

"நாடாரே, மனுசன் பொறக்கக் கூடாது, பொறந்தா... காடுகரையுள்ள சம்சாரியா பொறக்கணும். வாத்தியார் உத்யோகம் பாத்து சீப்படக் கூடாது."

"சம்சாரிப் பொழப்பு. மணந்துக்கிட்டா கிடக்கு? நீங்கவேற. நாறிப்போய்க்கிடக்கு.'

'சம்சாரியோ சமுத்திரமோன்னு ஒரு சொல்லு உண்டு.'

'உழுதவன் கணக்குப் பார்த்தா... உழக்குக் கூட மிஞ்சாது. சம்சாரி கணக்குப் பார்த்தா... சாட்டைக் கம்புகூட தேறாதுன்னும் சொலவடை உண்டு வாத்தியாரய்யா.'

வாத்தியாரின் வாடிய முகத்தில் ஒரு சிரிப்பு முகம் காட்டியது. பாராட்டான சிரிப்பு.

"என்ன சிரிப்பு?"

'நாடாரைச்பேசிச்ஜெயிக்கிறதுலேசா? சொலவடைக்கு பதில் சொலவடை போட்டு அடைச்சிட்டீரே, அதை நினைச்சேன்.'

"அதுக்கில்லே வாத்தியாரய்யா. பொழப்பு அப்படித் தானே இருக்கு? பெத்த பிள்ளை கூட இந்தக் கலப்பைத் தொழிலை சீந்தமாட்டேங்குதுகளே..."

"அது வாஸ்தவந்தான். ஆனா வாத்யாரை நம்பி ஊர்லே அஞ்சுபத்து கடன் குடுக்கமாட்டாங்க. காடுகரை வைச்சிருக்கிற சம்சாரியை நம்பி கடன் தருவாக. அந்தளவுக்கு சம்சாரி பாடு தேவலை.."

"நீங்க சொல்றது நெசந்தான். புஞ்சையைத் தூக்கிக் கிட்டு ஓடிட முடியாதுங்கிற தைர்யத்துலே கடன்குடுக்கிறவன் நம்புவான்."

"வாத்தியாரா இருக்கேன். மொத்தச் சம்பளம் நானூற்றுக்குக் கீழே. நாளைக்கொரு விலைவாசியா ஏறிக் கிட்டு போற நிலைமையில்... எப்படி பொழைக்குறது? ஒரே தட்டுப்பாடு. ஆத்திர அவசரத்துக்கு அஞ்சு பத்து கூட கெடைக்கமாட்டேங்குது. மானங்கெட்ட பொழப்பு."

"சரி... இப்ப என்ன வேலையா வந்தீரு?"

"வாத்யாரை மதிச்சுப் பேசுறதுக்கு ஊர்லே நாலைஞ்சு பேருக தான் இருக்கீக. உங்ககிட்ட எதுக்கு வரப்போறேன்? உங்களுக்குத் தெரியாததா?'

"என்ன... எதுவும் செலவுக்கு கைமாத்து தேவைப் படுதா?"

"ம்."

"எம்புட்டு ரூவா?"

"ஒரு நூறு ரூவா வேணும்."

"நம்மகிட்டே அம்புட்டு இருக்காதே... எதோ நாப்பதோ அம்பதோ இருக்கும்."

"சரி குடுங்க ஏதோ உங்களை மாதிரி மனுச மக்க இருக்கப் போயித்தான்... நாங்க உசுரோட இருக்க முடியிது, இல்லேன்னா... நாறிப் போயிருவம்."

இப்படித்தான் அடிக்கடி வருவார். ஒரு பாட்டம் புலம்பியழுவார் சுயபச்சாதாபத்தோடு அங்கலாய்ப்பார். நாட்டு நடப்புகளைப் பேசுவார். கைமாற்று கேட்பார். அல்லது வாங்கிய கைமாற்றைத் திருப்பிக் கொடுப்பார். நல்ல மனிதர். நொம்பலப்பட்ட ஜீவனம்.

"யாரு... வாத்யாரா?"

"ஆமா... நாடாரய்யா என்ன தண்ணி பாச்சுதீரா?"

"ஆமா. எங்க தூரவா போய்ட்டு வாரீரு?"

"போராட்டத்துக்கு."

ஐம்புலிங்கம் திகைத்துப் போனார் அதிர்ச்சியில், 'போராட்டமா?' என்று மிரண்டு போய் எதிரொலித்தார்.

"ஆமா... நாடாரய்யா. எங்க கூட்டணி சார்பா மாநாடு நடந்துச்சு, போன மாசம். எங்க தலைவர் ராமுண்ணி வந் திருந்தாரு. அந்த மாநாட்டுலேதான் முடிவாச்சு... இந்த ஆர்ப்பாட்டப் பேரணி நடத்துறதுன்னு. அதுக்குத்தான் போய்ட்டு வாரேன்..."

பாத்தி பாய்ந்துவிட்டதா என்று பார்த்துவிட்டு அடுத்த பாத்திக்கு வாய்மடையைக் கொத்தினார். கொத்திவிட்டு நிமிர்ந்த ஐம்புலிங்கம் முகத்தில் அதே அதிர்ச்சியின் வெல வெலப்பு.

"என்ன வாத்யாரய்யா, இது பெரிய கூத்தாயிருக்கு? போராட்டமா? வாத்தியார்களா? நம்பமுடியலியே"

"ஏன்?"

"ஒழுக்கத்தை...அடக்கத்தை...கத்துக்குடுக்குறவாத்தியார் களே போராட்டம், ஆர்ப்பாட்டம்னு தெருவுலே எறங்கிட்டா... அப்புறம் தர்ம நாயம் எங்க இருக்கும்? ஒழுக்கம் அமைதிங்கிற தெல்லாம் எப்படி இருக்கும்? வாத்திமார்க போராடுறதைப் பாத்துட்டு, பையங்க எப்படி கட்டுப்பாடா இருப்பாங்க?"

ராமமூர்த்தி சிரித்தார். கசந்த சிரிப்பு. உதட்டில் கருமையாகப் படிந்த சிரிப்பு. பூப்போன்ற இவரிடம் இந்த

எதிர்ப்புத் தீயை எதிர்பார்க்காத அதிர்ச்சியில் அரண்டு போன சிரிப்பு.

"நீங்க சொல்றதுலே ஒரு வார்த்தைகூட பிசகில்லே நாடாரய்யா. ரொம்பச்சரி. ஆனா, எங்களை வக்கத்தவங் களாகவே ஆக்கிவச்சு, ஊருக்குள்ளே கேவலப்படுத்திப் பாக்குற கவர்மெண்ட் யோசிக்க வேண்டிய விஷயம் இது. இனியும் நாங்க வக்கத்தவங்களாகவே வறட்டுப் பெருமையிலே வாழ முடியாது."

நாடாருக்கு பாத்தி பாத்தியாகத் தண்ணிபாய தள்ளிப் போனார். வாத்தியார் நிற்கிற பாதை, சற்றுத் தூரமாகியது. கத்திப் பேச வேண்டியதாயிருந்தது.

"நாங்க போராடலே நாடாரய்யா. சர்க்கார்தான் போராட வைக்குது. தாயைப்போல இருக்க வேண்டிய சர்க்கார், எதிரி மாதிரி துரத்துறப்போ... புள்ளைகளாகிய நாங்க எப்படி புள்ளைகளாகவே இருக்க முடியும்?"

"என்னமோ... வாத்தியாரய்யா... எனக்கு ஒன்னும் புடிபட்டு வரலை. மனசு ஒத்துக்கலே. சரி, நேரமாச்சு. நீங்க வீட்டுக்குப் போங்க."

ஆசிரியர் என்றாலே அமைதியின் சொரூபம். மாணவர் களிடமும், சமூகத்திடமும் அமைதியாய் வாழும் பண் பாட்டை உருவாக்குகிறவர், வளர்க்கிறவர். ஆசிரியர்களே மன அமைதியற்றுப் போனால்... போராட வேண்டியதாகிப் போனால்... நாடு என்ன ஆகும்? சர்க்காரில் எங்கோ கோளாறு இருக்கிறது. வாத்தியார் சொல்வதிலும் நியாயம் இருக்கத்தான் செய்கிறது.

சர்க்கார் சம்சாரிகளையும் இப்படித்தானே பாடாய்ப் படுத்தி நாசம் பண்ணுகிறது. உலகத்துக்கே படியளக்கிற பிரம்மத் தொழில், சம்சாரித்தனம். அதை எப்படி போற்றணும்? பாதுகாக்கணும்?

இல்லையே...

பெரிய பெரிய முதலாளிமார்களும், வியாபாரிகளும், சம்சாரிகளை வேட்டையாடி, கடித்துக் குதறி, ரத்தம் குடிக்க... சர்க்கார் பார்த்துக் கொண்டு இருக்கிறதே! சம்சாரித் தனத்தையே நட்ட தொழிலாக்கி நாசமாக்கிடுச்சே. பிறந்த பிள்ளைகூட சம்சாரித் தனத்தை வெறுக்கிற அளவுக்கு கேவலமான தொழிலாக்கிடுச்சே! சின்னப் பயகூட மம்பட்டியை தொட்டுக்கூட பாக்க மாட்டேங்குறானே...

ஜம்புலிங்கத்துக்குள் பலவாறாய் நினைவுகள். புதிய புதிய வழிகளில் நினைவுகள். நிற்காமல் ஓடுகிற சூறா வளியாய் நினைவுகள். இவரையும் இழுத்துக்கொண்டு ஓடுகிற நினைவுகள்.

ஒருநாள்—வானொலியில் ஏழே கால் செய்தி கேட்டுக் கொண்டிருந்தார். அதிர்ச்சியில் வெலவெலத்துப் போய் விட்டார். தாங்கவே முடியவில்லை. 'நாடு போச்சு... தேசம் போச்சு...' என்று புலம்பத் துவங்கி விட்டார்.

## 14

**ஊ**ருக்குள் ஜம்புலிங்கம் நுழைகிற போது 'கருகரு' வென்று மயங்கிவிட்டது. ஈரத்துண்டை இடுப்பில் கட்டி யிருந்தார். வெள்ளை வேட்டியைத் துவைத்திருந்தார். அதன் இரு முனையையும் இருகையால் பற்றி முதுகுக்குப் பின்னால் விரித்து உலர்த்திக் கொண்டே வந்தார். வெள்ளை வேட்டி காற்றினால் புடைத்து படபடவென்று அடித்துக் கொண்டிருந்தது.

இருட்டு அப்பிக் கொண்டிருந்த அந்தச் சாம்பல் பொழுதில்... ஏதோ பிரம்மாண்டமான வெண் பறவை சிறகை விரித்துக் கொண்டு நகர்ந்து வருவதைப் போலிருந்தது, அவரைப் பார்த்தால்...

ஜம்புலிங்கத்துக்கு வேலை பார்த்த மாதிரியே தெரிய வில்லை, தண்ணீர் பாய்ச்சுகிற வேலை. ரொம்பச் சாதாரண மான வேலை. சின்னப் பிள்ளை கூட செய்துவிடும்.

ஏழு வயசுச் சிறுவனாக இருக்கும் போதே... மண் வெட்டி உயரம் கூட இருக்கமாட்டான் ஜம்பு—தண்ணீர் பாய்ச்சிய ஞாபகம் மனசில்.

பொன்னையா மறுத்ததை நினைக்கும்போதுதான் இவருக்குள் சண்டாளமாய் கோபம் வந்தது.

"இப்படி புள்ளைக சொன்னபடி கேட்காமல் தறுதலையாகிறதே" என்கிற எரிச்சல்... அதைவிட கொடுமை என்னவென்றால்... விவசாயத்தில் பற்றில்லாமல் பிள்ளைகள் திரிவதுதான்.

இந்தக் கொடுமை எங்காவது உண்டா? தாயைப் போல பிள்ளை, நூலைப் போல சேலைங்கிற சொலவடையையே பொய்யாக்கிட்டாங்களே... பாவிப்பயக!

தூக்கி முழுங்கிட்டாங்களே!

விவரம் தெரிந்த நாளிலிருந்து மண்ணோடு கொஞ்சிக் குலவி, மண்ணின் மடியில் உருண்டு, புரண்டு வியர்வை பெருக்கிச் சுகம் கண்ட அப்பனின் அடையாளம் ஒரு பிள்ளையிடமும் இல்லையே...

வந்து வாய்த்த கழுதையும் சம்சாரித்தனத்தில் பற்றுள்ளவள். விவசாய வேலைகளில் இது நாள்வரை சளைத்தவளுமல்ல. சலித்தவளுமல்ல. பெண்ணுக்குப் பெண் ணாக நின்றும் வேலை செய்வாள். ஆணுக்கு ஆணாக வும் சமதையாகப் பாடுபடுவாள். இப்படிப் பாடுபட்டுச் சீரழிகிறோமே என்று ஒரு நாள்கூட குறைபட்டுக் கொண்டது மில்லை.

அப்பேர்ப்பட்ட பாட்டாளி வயிற்றில் உயிர் பெற்று, கருவாகி வளர்ந்த பிள்ளைகள், தாய் குணத்தையும் பெற்று வளரவில்லை. தகப்பன் சுபாவத்திலும் ஊறி வளரவில்லை.

எங்கிருந்துதான் வந்து பிறந்து தொலைந்ததுகளோ... சனியன்கள்! எமன்கள்...

நாட்டாண்மை பொன்னையா நாடார் தங்கமான மனிதர். அவர் பெயர் துலங்கட்டுமே என்ற நல்லெண்ணத்தில் இவனுக்கு அந்தப் பெயரை வைத்தால்... அந்தப் பெயரை நாசமாக்கிடுவான் போலிருக்கிறதே...

ஓடையைக் கடந்து ஊருக்குள் நுழைந்த ஜம்புலிங்கம் மனசில் அரித்தெடுக்கிற நினைவுகள். நெரிஞ்சி முள்ளாக உறுத்துகிற உணர்வுகள்.

தனக்குப் பின்னால் விவசாயத்தை எடுத்துச் செல்ல உழைப்பு வாரிசே இல்லாமல் போன அவலத்தை நினைக்க நினைக்க மனசு கிடந்து பதறுகிறது. எதிர்காலத்தில் இந்தப் புஞ்சையும், உழைப்பில் உருவான பிள்ளை போன்ற கிணறும் என்னாகுமோ என்று இருண்டு வருகிறது.

உயர்த்திப் பிடித்து வேட்டியை ஏந்திக் கொண்டு வந்த கைகள் உளைச்சல் எடுத்தது. வேட்டியை விரித்த நிலையில் முதுகிலும், தோளிலும்போட்டுக் கொண்டார், உலர்ந்திருந்தது. உலர்ந்த பின்னும் ஈர நைப்புடன் துவண்டு, படிந்து கிடந்தது.

தெரு விளக்குகள் ஒன்றிரண்டு எரிந்தன. தெருவுக்குள் நுழைந்தார். தீயை மிதித்த மாதிரி மனசு வெகுண்டது. சுரீ ரென்றது.

தெருமுகப்பில் நாலைந்து பையன்களுடன் சேர்ந்து பொன்னையாவும் பம்பரம் விளையாடிக் கொண்டிருந்தான். சாட்டை சுற்றிய பம்பரத்தின் ஆணியை நாக்கில் எச்சில் படுத்திவிட்டு ஓங்கினான். தரையில் வட்டம். வட்டத்திற்குள் படுத்துக் கிடக்கும் இரண்டு பம்பரங்கள்.

பொன்னையாவின் ஓங்கிக் 'குத்திய' பம்பரக்குத்தில் ஒரு பம்பரம் தெறித்து ஓட, இன்னொரு பம்பரம் ரெண்டாய் உடைந்தது.

சின்னவன் ராமையா அண்ணனின் சாகசத்தில் துள்ளிக் குதித்தான். கைதட்டி கும்மாளித்தான்.

ஐம்புலிங்கத்திற்குள் பற்றிக் கொள்கிற தீ. ஜுவாலை விட்டுச் சீறுகிற தீ நாக்குகள்.

"அப்பனுக்கு மண்டையிடி. அம்மா கெஞ்சுறா. எதையும் காதுலே வாங்காம, புஞ்சையை நெஞ்சில நெனைக்காம... தெருக்காட்டுலே பம்பரமா வெளையாடுரே! படுவா, ராஸ்கோ..."

மட்டியைக் கடித்தார். தெருவில் கிடந்த பருத்தி மார்க் குச்சியை எடுத்தார். இவர் சண்டாளமாய் வருவதை அதுகள் பார்க்கவில்லை.

மகிழ்ச்சியில் ததும்பிக் கொண்டிருந்தன.

நெருங்கினார். ஓங்கிய கை குறையாமல்... பளிச்! சம்மட்டியடிபட்டவுடன் தெறித்தோடும் இரும்புக் கங்காய்த் துடித்தான் பொன்னையா. அவனது காய்ந்த முடியைக் கற்றையாகப் பற்றிக் கொண்டார்.

மனசின் ஆங்காரம் முழுவதும் வலது கையில் இறங்க... பளிச்! பளிச்!

'ஐயய்யோ... அம்மா... ஐயய்யோ அய்யா' என்று துடியாய்த் துடித்தான் பொன்னையா.

விளையாடிய பிள்ளைகள் அதிர்ச்சியில் உறைந்து வெலவெலத்துப் போய்விட்டனர்.

ராமையா பருந்துக்குப் பதறிய கோழிக்குஞ்சாக ஓட்டம் பிடித்தான்.

முடியைப் பற்றியிருந்த கை சற்றுத் தளர்ந்தபோது, உருவிக் கொண்டான்.

பொன்னையா, கதறலும், அழுகையுமாய் ஓடினான். வீட்டைப் பார்த்து.

தெருவிளக்கு வெளிச்சத்தில் ஓடுகிறவனையே பார்த்தார். அவர் கண்களில் இன்னும் தீ.

"படுவா...! போய்ட்டீயா? போ. வீட்டுக்கு வரேன்! வகையா 'சாப்பாடு தாரேன்' என்று கூவினார். மகனை அடித்த அடியில் பருத்தி மார்க்குச்சி ஒடிந்து நார் நாராய்த் தொங்கியது. அதை வெறித்துப் பார்த்தார். மனசுக்குள் ஏதோ ஒரு கசப்பு. குமட்டலான ஒரு உணர்வு.

கையில் வந்து விழுந்த பாம்பை உதறுகிற மாதிரி, ஒரு பதற்றத்தோடு வீசி எறிந்தார். கால் வழுக்கி சாக்கடையில் விழுந்துவிட்ட மாதிரியானதோர் அசூயை. தானே அழுக்காகிப் போன மாதிரி ஒரு குற்ற உணர்வுடன், அடித்த கையை உயர்த்திப் பார்த்தார்.

துடித்துக் கதறிய மகனின் வேதனைக் குரல். வலி பொறுக்காமல் நெருப்பில் விழுந்த பூச்சியாகத் துள்ளிக் குதித்துத் தவித்த மகன்...

இந்தச் சனியன்களைப் பெத்ததும், வளர்த்ததுமே... குத்தம்தான்! தாயைப் போலவுமில்லாம, தகப்பனப் போலவு மில்லாம... அடையாளங்கெட்ட கழுதைக!'

அடித்து விட்ட குரூரத்தைக் குத்திக் காட்டுகிற மனச் சாட்சிக்கு சமாதானம் சொல்கிற மாதிரி வேதனையுடன் முணங்கிக் கொண்டார்.

பெருமூச்சுடன் நகர்கிற போது—நாலு எட்டு வைத்த வுடன் தெருவின் தெற்கு சைடில் இருந்த வீட்டிலிருந்து வானொலியின் குரல்.

"ஆல் இண்டியா ரேடியோ. செய்திகள் வாசிப்பது."

ஏழேகால் செய்தியா?

நின்று கேட்டார். கால் கடுத்தது. இடுப்பில்கூட லேசான உளைச்சல். அதைப் பொருட்படுத்தாமல் செய்தியைக் கேட்டார். ஒரு செய்தி, அவரை உலுக்கியது.

குஜராத்தில் போலீஸார்கள் ஸ்டிரைக்காம்! கைது செய்யப்பட்ட போலீஸார்களை காவலில் வைத்தார்களாம்!

தமிழ்நாட்டிலும் போலீஸார்கள் சார்பில் சங்கத்தின் தலைவர் பிரிட்டோ, தலைமைச் செயலகத்தில் கோரிக்கை மனு கொடுத்தாராம்!

"என்னடாயிது, அக்கிரமமாயிருக்கு' என்று அவரது மனம் திணறியது. அந்தச் செய்தியின் அதிர்ச்சியை அவரால் விழுங்கிக் கொள்ளமுடியவில்லை.

போராடுகிறவர்களை ஒடுக்க வேண்டிய போலீஸார். வருகிற அமளிதுமளியை வசக்கி, கட்டுப்படுத்தி அமைதியைக் காப்பாற்ற வேண்டிய போலீஸார். அவர்களே ஸ்டிரைக்கில் இறங்கிவிட்டால்...? போராட்ட அமளிதுமளியை உண்டாக்கி னால்...?

என்னடாயிது, பெருங் கொடுமை!

நாடு என்னாகும்?

வாத்தியார் ராமமூர்த்தி சொன்னது... மூளையில் உரசியது. அவர் சொன்ன நியாயங்கள்...

அப்படியா... சங்கதி!

வக்கத்தவனுக்கு வாத்தியார் உத்தியோகம், போக்கத்த வனுக்குப் போலீஸ் உத்தியோகம்.

இந்தச் சொலவடையே... அது ரெண்டுக்கும் ரொம்பக் குறைந்த சம்பளம் என்பதால்தான் உண்டானதா?

நிஜம்தான். நேரங்கெட்ட எல்லா நேரத்திலும் வேலை. சம்பளமோ ரொம்பக் கம்மி. படிக்காசும் ரொம்பக் குறைவு. மானம், மரியாதையோடு குடும்பத்தை நடத்த இயலாது. எல்லாருக்கும் பயந்து சாகவேண்டும். கண்ட கண்ட நாய்ப் பயல்களுக்கெல்லாம் சல்யூட் அடிக்க வேண்டும். பொய்முகம் காட்ட வேண்டும்.

சிரித்துக் குழைய வேண்டும். பணிந்து வணங்க வேண்டும். ஒவ்வொரு அதிகாரி வீட்டிலும். அவர்கள் வீட்டு

நாய்களைக் கூடக் குளிப்பாட்டிவிட வேண்டும். அடிமைச் சேவகம். காய்ந்த பிழைப்பு.

போக்கற்றுப் போன ஒருவன்தான் அந்த அடிமைப் பிழைப்பில் நாள் தள்ள முடியும். அப்படி நாட்களைத் தள்ளிக் கொண்டு ஊர்ந்து கொண்டிருந்த அவர்கள்தான் சூடு, சொரணை பெற்றுவிட்டார்களா? தன்மானத்துக்காகப் போராட்டம் பண்ணுகிறார்களா? சம்பளம் உயர்வதன் மூலம் தொழிலின் கௌரவம் உயரும் என்ற தெளிவில்தான் இந்த ஸ்டிரைக்கா?

ஜம்புலிங்கத்துக்கு வயிறு பசித்தது. சாப்பிடணும் என்ற நினைப்பே வரவில்லை. அவர் மனம் முழுவதையும் இந்தப் போராட்ட அதிர்ச்சி ஆக்கிரமித்துக் கொண்டது.

'தலைப்புச் செய்தி' என்று மறுவட்டம் அடிக்கத் துவங்கியவுடன்... வீட்டுக்கு நடந்தார்.

# 15

**ம**காலட்சுமிக்கும் தீராத விசாரம். வயசும் முப்பத் தைந்துக்கும் மேலாகி விட்டது. அவளும் முந்தி மாதிரியில்லை. அடைக்கோழி மாதிரியாகி விட்டாள். கிட்டப்போனால்... ரோமங்களைச் சிலிர்த்துக்கொண்டு 'கர்ர்ர்' ரென்று கதற ஆரம்பித்து விடுகிறாள்.

ஜம்புலிங்கத்துக்கு ஒன்றும் புரியவில்லை. என்னாச்சு இவளுக்கு என்று ஒரு திகைப்பு.

"ராத்திரியில் மட்டும் அவளை ஏதோ பேய் பிடித்துக் கொள்கிறதா" என்று ஒரு நினைப்பு. திகில்.

ராத்திரியில் பிள்ளைகளெல்லாம் உறங்கிய பிறகு... அவர் பக்கத்தில் போய்ப்படுப்பார்.

அவ்வளவுதான்! கழுதை சிடுசிடுக்க ஆரம்பித்துவிடும். பேய் பிடித்த மாதிரி அவள் மனசு வெறி பிடித்து ஆடும். உடம்பே வேற்றுடம்பாகி விறைத்து முறுக்கேறி விடும்.

'என்ன இது?' என்பாள். கேள்வியில் கடுப்பு இருக்கும், அழுத்தமான கண்டிப்பு இருக்கும்.

'ஒண்ணுமில்லே' என்று மழுப்பலான இவரது பதிலில் அசட்டுத்தனம் உட்கார்ந்திருக்கும். லேசாக நகர்ந்து ஒண்டுவார். அவளது தேகஸ்பரிசம் இவர் மனசுக்குத் தேவைப் படும். ஏங்கித் தவிக்கும். அந்த ஸ்பரிசத்தின் கதகதப்புக்குள் முடங்கிக்கொள்ள நெஞ்சுகிடந்து அல்லாடும்.

இவர் அண்டியவுடன் அவள் நகர்ந்து கொள்வாள். அதைப் பார்க்காததுபோல் ஒருக்களித்து வலது கையை அவள் நெஞ்சில் குறுக்காகப் போடுவார்.

சட்டென்று அந்தக்கை தூக்கியெறியப்படும். கையை எகிறியெறிந்ததில் மின்சாரம் போன்ற ஒரு வெறுப்பு இருக்கும். கோபச் சிலிர்ப்பும் இருக்கும்.

"ன்ன...?" என்று இவர் இறுக்கமாய்க் கேட்பார். எரிச்சலான இறுக்கம். 'என்ன... நொன்ன' என்று அந்தக் கோபத்தை அலட்சியமாய்ப் பந்தாடுவாள்.

"தொடப்படாதா?"

"எதுக்குத் தொடணும்?"

"பெண்டாட்டியைத் தொடாம... வேற யாரைத் தொட?"

"யாரையும் போய்த் தொடுறதை யாரு வந்து தடுத்தாக?"

"அதெப்படி? நா என்ன கோயில்மாடா? ஊர் மேய்றதுக்கு?"

"மேயட்டுமே. நாவேண்டாம்னு சொல்லலியே..."

"நீ வேண்டாம்னு சொன்னாலும், எனக்கு நீதான் வேணும்'

"எனக்கு யாரும் வேணாம்."

"ஏ..."

"ஏன்னா...' அது அப்படித்தான்."

"எனக்கு வேணும்."

"ஆம்பளைக்கு அறிவிருக்கணும்.சொரணையிருக்கணும். தோள் உசரத்துக்கு புள்ளைக இருக்கேண்ணு நெனைப் பிருக்கணும்."

"ஏய் கழுதை, நா என்ன கெழடா?"

"இல்லை... இருவது வயசுக் கொமரன்தா?"

"நாப்பத்திரண்டு வயசு... ஒரு வயசா?"

"நாப்பதுக்கு மேலே நாய்க்கொணம். வெக்கமில்லாம அலையும். பொட்ட நாயி பின்னால மோப்பம் பிடிச்சிக்கிட்டு வெறியோட திரியும்'

"ஏய் கழுதை..." அவர் கோபத்தில் இறுகுவார். குரலில் கடுமை ஏறும். குழைவு தொலையும். மெல்லிய மன உணர்ச்சி, செருப்படிபட்ட வேதனை. நியாயமான புருஷ உரிமை அநியாயமாய் மறுக்கப்பட்ட ஆத்திரம்.

அவ்வளவுதான். அந்த ராத்திரி பூராவும் ரணப்படும். கோபமும், அழுகையுமாய்... வசவும் அங்கலாய்ப்புமாய்... ஆக்ரமிப்பும் திமிறலுமாய்..

அந்தக் குளிர் மிகு ராத்திரி... சித்திரை மாத மதியமாக அனல் கொட்டும், அங்கு!

இந்த வெக்கை, வீம்பு, மல்லுக்கட்டு எல்லாம் வீட்டில் தான். கழுதை பயப்படுகிறது. வளர்ந்த மகன்களுக்காக மறைகிறாள். தன் உணர்ச்சிச் சுருளை மடக்கிக் கொள்கிறாள். உள்ஒடுங்கிக் கொள்கிறாள். கூட்டுக்குள் சுருங்கிக் கொள்கிற நத்தையைப்போல.

இப்படி ஒடுங்கிக் கொள்ள முடியுமா? இயலுமா? தேவையா?

"தோளுக்கு மேலே ஒசந்த புள்ளைக இருக்குற வூட்லே... ஆம்பளை அறிவோட இருக்கணும். வயசறிஞ்சு சுருவத்தை ஒடுக்கி இருக்கணும்."

வாய்க்கு வாய் கடுப்போடு சிடுசிடுக்கிற கழுதை. அதென்ன சுருவம்? சுயரூபமா?

ச்சேய்! ஜம்புலிங்கத்துக்கு ஒரே குமுறலாய் இருக்கும். ஊமை குமைச்சலாய் குமையும். அந்தக் கோபம், வேறு விஷயங்களில் டமார், டமாரென்று வெடிக்கும்.

சம்பந்தாசம்பந்தமில்லாமல் ஆத்திரத்தில் அலறல் கேட்கும். "ஏ கழுதை... இதென்ன வீடு குப்பையும் கூளமுமாய் கெடக்கு?"

அவள் அமைதியாய்— பணிவாய்ப் — பதில் சொல்லு வாள்.

"இந்தா தூத்துருதேன்."

அவளுக்குத் தெரியும். எந்த ஏமாற்றம், இங்கே கோப மாய் வெடிக்கிறது என்று புரிந்து சாதுவாய் இருப்பாள்.

பகல் முழுக்க உழவு, மிளகாய்ச் செடிகளை பிடுங்கி படப்பாக்கி வைத்துவிட்டு, கோடைக்கம்பு பயிரிட உழுதார். தண்ணீர் பாய்ந்து கிடந்த இடம் என்பதால் பருவமாக இருந்தது. கனத்த கலப்பை, தரையைப் பிளந்து கொண்டு முன்னேறியது. பொது பொதுவென்று ஈரமண் இருபக்கமும் விலகிச் சரிகிறது.

உழுது முடித்து பட்டம் அடிக்க பொழுது இருட்டி விட்டது. தொழுவில் மாடுகளைக் கட்டிப்போட்டு கூளம் அள்ளிப் போட்டுவிட்டு... முற்றத்து வெளிப் பானைத் தண்ணீரில் குளித்தார்.

செம்பு செம்பாகத் தண்ணீரை அள்ளி, முற்றம் முழுக்க நடந்து கொண்டே மேலே ஊற்றிக் கொண்டார். குளித்த மாதிரியும் ஆயிற்று. முற்றம் தெளித்த மாதிரியும் ஆயிற்று.

வாத்தியார் ராமமூர்த்தி அந்தப் பக்கமாய் வந்தார். நடமாடும் குளிப்பு போடுகிற நாடாரைப் பார்த்துச் சிரித்தார்.

"என்ன நாடாரே, குளிப்பா?"

"யாரது, வாத்யாரா?"

"ஆமா...ம் இதென்ன நடைக் குளிப்பு?"

"ஆடு மேய்ச்சாப்புலேயும் ஆச்சு. அண்ணனுக்கு பொண்ணு பாத்தாப்புலேயும் ஆச்சுன்னு சொல்லுவாகளே அந்த மாதிரித்தான். குளிப்பும், முத்தத் தெளிப்பும் ஒரே காரியத்துலே."

"ஒரு கல்லுலே ரெண்டு மாங்காய்ன்னு சொல்லும்."

"ம்..."

உண்டு முடித்தார். நல்ல நிலா, பட்டுப்போல அடித்தது.

அங்கே இங்கே என்று ஒன்றிரண்டு மேக இணுக்குகள். அதுவும் வெள்ளை மேகங்கள். நிலாவை மூடி மறைக்க வலுவற்ற மேகங்கள்.

"ஏய் கழுதை! நா புஞ்சைக்குப் போறேன்."

"ம்... என்ன வேலை?"

"உழுது கிடக்குறதைப் பாத்தி கட்டிறத்தான்."

"நா வரட்டா?"

"வேண்டாம். நீ வீட்லே இரு."

ஜம்புலிங்கம் காலில் தோல்ச் செருப்பை மாட்டிக் கொண்டு கரண்டு ரூம் சாவியை எடுத்துக் கொண்டு புறப்பட்டுவிட்டார்.

"எதுக்கு... இப்ப?"

"ஏன்."

"விடிஞ்ச பிறகு பாத்திகட்டலாம்லே?"

“ஏன்... இப்ப என்ன?”

“பாடு பட்ட ஒடம்பு. கொஞ்ச நேரமாச்சும் படுக்க லாம்லே?”

“படுத்து படுத்து என்னத்தைக் கண்டோம்? உப்பா குமா, புளியாகுமா? பாத்திகட்டுனா... வேலையும் முடியும் மனசுக்கும் ஆறுதல்’

புண்பட்ட மனசின் பேச்சு, உள் வேதனைக்கு உறை போட்ட பேச்சு. ஏமாற்ற வேதனையால் வெம்பிப் போன மனசின் முணகல். புரிந்து கொண்டாள், மகாலட்சுமி.

“சரி போங்க...” என்றாள்.

ஆணி அறைந்த செருப்பின் சர்க்சர்க்கென்ற சத்தம் கம்பீரமாய்க் கேட்கிறது. ஒரு வீரமகனின் ஆண்மைமிக்க அழுத்தம் அந்தச் சத்தத்தில்; ஒரு ராஜா நடந்து போகிற மாதிரி ஒரு சீரான சர்க்சர்க்.

அதிலேயே கொஞ்சம் மனசு லயித்துப் போயிருந்த மகாலட்சுமி, புருஷனின் வாலிபச் சேட்டையை நினைத்து குறுஞ்சிரிப்பாக சிரித்துக் கொண்டாள். அதில் அவளுக்குள் ஒரு பெருமைதான்.

# 16

**பி**ள்ளைகளுக்கு சோற்றைப் போட்டு, படுக்க வைத்து விட்டுக் குளித்தாள் மகாலட்சுமி. சேலையை மாற்றிக் கொண்டாள். அவளும் உண்டு முடித்தாள்.

அவளும் ஒரு மண்வெட்டியை எடுத்துக்கொண்டு தெற்கு நோக்கி நடந்தாள். ஒன்பது மணிக்கும் மேலிருக்கும்.

‘பாவம்... ஒத்தையிலே இருப்பாரு’ என்று நினைத்துக் கொண்டாள். வண்டிப்பாதை புழுதி மெத்தை போலிருந்தது. வெக்கையில்லாத மிருது. நடக்கச் சுகமாக இருந்தது. உப்பாங்

காற்று மெல்ல வீசுகிறது. மடியில் தின்பண்டம் வைத்திருந்தாள்.

இவள் போய்ச் சேர்வதற்குள் ஒரு முறுசலுக்குப் பாத்தி கட்டி முடித்துவிட்டார், முறுகல் வாய்க்காலை இழுத்துக் கொண்டிருந்தார்.

"நீ எதுக்கு வந்தே?"

"சும்மாதான்"

"சும்மான்னா...?"

"ஏன் நா பாத்தி கட்டக்கூடாதா? கட்டுனது இல்லையா?"

"நமக்குத்தான் வேலைகள்லே ஆம்பளை பொம்பளை வித்தியாசமில்லியே...'

"பெறகென்ன...?"

"காலம் பூராவும் இப்படித்தானா...?"

"அப்படீன்னா...?"

"ஆம்பளைப் புள்ளைக தலையெடுத்துருச்சு. அதுக வந்து மம்பட்டியை வாங்கிக்கிடணும். அப்படியிருந்தா... முக்கிப் பெத்த ஒனக்காச்சும் ஓய்வு ஒழிச்சல் கிடைச்சிருக்கும்."

"நமக்குத்தான் அந்தக் கொடுப்பினை இல்லையே..." அரைக்குறுக்கம் புஞ்சை முழுக்க உழுதுகிடந்தது. நிலவின் பால் வெளிச்சத்தில் ஈரல்கட்டி மாதிரி மண் தெரிந்தது. பாதிப் புஞ்சையில் அச்சு அச்சாய் பாத்திகள். மனித உழைப்பின் கலை வெளிப்பாடு சித்திரமாய்த் தோன்றுகிறது. செதுக்கி வைத்த பாத்திகளுக்கு நடு நடுவே நீளமாய் வாய்க்கால்கள். எல்லாம் ஒரு பின்னல்போல அழகாய் அமைந்து கிடந்தது.

இவளும் போய் அடுத்த முறுசலில் குனிந்தாள். குறுக்கு வரப்புகளை அமைத்தாள். பாத்தியின் உட்பக்கம் உழுவுக் கோடுகளை அழித்தாள். மண்கட்டிகளை அடித்து இழுத்து சமப்படுத்தினாள். வாய்க்காலை இழுத்தாள்.

அவளும் மண்வெட்டியை ஆண்களைப் போலவே லாவகமாக போட்டுப் பயன்படுத்தினாள்.

நிலாவெளிச்சம் ரொம்பச்சுகமாக இருக்கிறது. உப்பங் காற்றின் மெல்லிய தழுவல். மிருதுவான அரவணைப்பு. கூதல் என்பதுமில்லை. இறுக்கமுமில்லை. வானத்தில் பஞ்சு மேகங்கள். ஒளிமங்கிய நட்சத்திரங்கள். பொழியோரம் மகாலட்சுமி நின்றாள்.

"ஏய் கழுதை..."

"ம்"

"நீ இந்த நிரையை இழு. நா பொழியோரத்துலே இழுக்கேன்"

"ஏன் ?"

"அருகு கிடக்கும். அருகுவேர் மம்பட்டியைத் தட்டும்."

"ஏன்... என்னாலே முடியாதா ?"

"நீ பெரீய வேலைக்காரிதான். எனக்குத் தெரியும். கழுதை, நா சொல்றதைச் செய்."

"அதான்... கேக்கேன், ஏன் ?"

"நான்னா... நிரையும் போட்டுருவேன். அருகையும் வெட்டி எடுத்துருவேன்."

"ஏன், நா செய்யமாட்டனா ?"

"இதென்ன.. இப்படி சரி மல்லுக்கு நிக்கே..?"

"இன்னிக்கு அப்படித்தான்..."

"சரி... போ கழுதை! அருகை ஆழமாய் வெட்டி எடுத்துடு."

"ம்... அதைச் சொல்லுங்க செய்றேன்."

கொஞ்ச நேரம் எந்தச் சத்தமுமில்லை. மண்வெட்டிகள் மண்ணோடு மோதி விளையாடுகிற சத்தம் மட்டும்தான்.

ஆட்காட்டிக் குருவியின் வீறிடல், பனங்காடையின் பய பீதியான அலறலும், சிறகடிப்பும்,

தூரத்தில் எங்கோ கிடை கிடக்கிறது. செம்மறிகளின் கதறல் சத்தமும், கிடைக்காவல்காரனின் அதட்டல் சத்தமும்.

நிலா ஓய்வெடுத்துக் கொண்ட மாதிரி ஒரு கனத்த கரிய மேகத்திற்குள் போய் ஒளிந்துகொண்டது. அந்தக் கனத்த மேகத்தின் சுற்று விளிம்பு முழுவதும் வெள்ளிக் கோடுகளாய் மின்னியது, நிலவையே குழைத்து பார்டர் அமைத்த மாதிரி.

வேலை, மளமளவென்று சரிந்தது. இமைதட்டி முழிப்பதற்குள் வேலை முடிந்துவிட்டது. கடைசியாக, தலையணைப் பாத்திகளை வரப்புபோட்டு, மேடுதட்டி சமப்படுத்தி முடித்தபோது, நிலா உச்சி மதியத்திலிருந்து கீழே சரிந்து விட்டது. நிலவின் நிறம் மாறிவிட்டது. பளிச்சென்ற பளபளப்பு மாறி, லேசாய் மஞ்சள் நிறம் அழுக்குபோல படிந்துவிட்டது.

மண்வெட்டியை மாற்றிப் பிடித்து, பொழிக் கல்லில் ரெண்டு போடு போட்டு, ஈரமண்பிடிப்பை உதறிவிட்டு கரண்டு ரூம்மிற்குப் போனார். மண்வெட்டியை ரூமிற்குள் போட்டுவிட்டு, தொட்டித் தண்ணீரில் கால் கையைக் கழுவினார். கழுத்தடி, கட்கம் என்று வியர்வை படிந்திருந்த இடமெல்லாம் தண்ணீரை அள்ளி ஊற்றி அலசினார். துண்டை எடுத்துத் துடைத்துக் கொண்டார்.

அவளும் வந்தாள். கரண்டு ரூமின் விளக்கு வெளிச்சம் வாசல் வடிவத்தில் வெளியே விழுந்தது. பாத்தி கட்டு வதற்காக சேலையின் காலடி நுனியை எடுத்து இடுப்பில் சொருகியிருந்தாள், அதை இன்னும் அவள் எடுத்துவிட வில்லை. அவளது முழங்கால் மூட்டுத்தெரிந்தது அதற்கும்

மேலும் வெயில்படாத பகுதி கண்ணில் பட்டது. அந்த நிறம். அதன் ஜொலிப்பு... இவனுக்குள் எங்கோ உடைப்பு. பெருக் கெடுத்தோடுகிற பிரவாகம். தொண்டைக்குள் வறட்சி. நாத் தழுதழுப்பு.

அவளும் கால்கையைக் கழுவி விட்டு வந்தாள். வாசல் படியில் உட்கார்ந்திருந்த அவருக்குள் இன்னும் மூச்சிரைப்பு. ரூமிற்குள் பத்திரப்படுத்தி வைத்திருந்த தின்பண்டத்தை எடுத்துத் தந்தாள்.

"என்னது?"

"பணியாரம்"

"சோளப்பணியாரமா?"

"ம்"

"அய்ய்!" ஐம்புலிங்கம் சின்னப் பிள்ளைபோல மகிழ்ச்சியை வெளிப்படையாகக் காட்டினார். முகமெல் லாம் விரிகிற சிரிப்பில், மீசையே பெரிசாக நீள்வது போலிருக்கிறது.

ஆசை ஆசையாகப் பிய்த்துத் தின்றார். அவர் தின்பதையே அவர் முகத்தில் வெளிச்சமிடுகிற குதூகல ஒளியை —ஒரு தாய்மைப் பொலிவோடு பார்த்தாள்.

"நீயும் தின்னு" என்றார்.

"வேண்டாம்"

"இந்தா... தின்னு கழுதை..."

"சரி..."

ஒன்றை எடுத்துக் கொண்டவள், அவருக்கு நேராகக் குனிந்தாள். அவரது நெஞ்சுரோமத்திற்குள் ஒட்டியிருந்த புஞ்சைப் புழுதியைத் தட்டிவிட்டாள். முந்தானைச் சேலை

யால் துடைத்தாள். அவளும் வாசல்படிக்குக் கீழே உட்கார்ந்து கொண்டாள்.

நள்ளிரவுக்குமேல் ஆட்காட்டிக் குருவியின் கீச்சிடல். ஒரு சின்னவெளவால் விர்ரென்று பறந்துவிட்டுப் போகிறது.

தின்று கொண்டிருந்த ஐம்புலிங்கம் முகத்தில் குதூகலம், அஸ்தமனமாகிற நிலவைப்போல மெல்லமெல்ல இருண்டது. ஒரு தீவிரம். கண்ணில் ஒரு கவலை. சிந்தனையில் உளைச்சல்.

அதே கவலைப்பட்ட கண்களோடு காலடியில் உட்கார்ந்திருந்த மகாலட்சுமியைப் பார்த்தார்.

"என்ன..."

"ஒன்னுமில்லே"

"கேக்கேன்லே? என்ன நெனைப்பு?"

"ஏங் கழுதை, இந்தக் கேடுகெட்ட புள்ளைகளை எங்கிருந்து பெத்தெடுத்தே?"

அவர் குரலில் இருந்த துயரம், அவளது நெஞ்சை யறுத்தது. குலை பதறியது. மனசு கிடந்து தவித்தது.

"ஏங் கேக்கீக இப்படி?"

"ரெண்டு பயல் கிட்டேயும் நம்ம சாயல் கொஞ்சங் கூட இல்லியே... புஞ்சையை நெஞ்சுலேகூட நெனைக்க மாட்டேங்குதுகளே..."

"நெனைக்காட்டா... போகுது"

"அதென்ன அப்படிச் சொல்லிட்டே? புள்ளைக எதுக்கு? பெத்தவுக பேர் சொல்லத்தானே? இதுக நம் பேரை கெடுத்துரும் போலிருக்கே..."

"எதுக்கு?"

“கீரைப்பாத்தி போட்டுக்கிட்டு தலா எறைச்சாரு எங்க அய்யா. ஒன்னையும் என்னையும் சேரவிடாம தடுத்தாரு. ஒத்தையிலே கெடந்து நாம மல்லுக்கட்டுனோம். ரவ்வும் பகலுமா பாடுபட்டோம். புஞ்சையை பெரிசாக்கி, கெணறு வெட்டி, கமலைபோட்டு அதையும் பம்புஷெட்டாக்கி.. சம்சாரின்னு பேருவாங்கிட்டோம்.”

“ஆமா. நம்ம ஒடம்பு அப்படி. பாடுபடப் பயப்படாத மனசு நமக்கு.”

“பயமா? பாடுபடப் பாடுபடப் பிரியமாயிருக்கே நமக்கு? சாமக்காட்லே கூட பாத்தி கட்டிட்டு வேதாளம் மாதிரி காட்லே ஒக்காந்திருக்கமே! இந்த ஆசை நம்ம புள்ளைகளுக்கு ஏன் இல்லே?”

“நம்ம வறுமையை சொல்லிக்காட்டி கேவலப்படுத்துனாரு உங்கய்யா. சேரவிடாம குறுக்கே நின்னாரு. வாய்க்கு வாய் ‘வக்கத்தவளோட புள்ளை’ ன்னு எனக்கும் சூடு போட்டாரு. நமக்கு ஒரு வைராக்யம் வந்துச்சு. நாம பொழுதைப் பாக்காம பாடுபட்டம். உருண்டு புரண்டு கையை ஊனி, காலை ஊனி மேடேறிட்டோம்...”

“ம்ம்”

“நம்ம புள்ளைக வெவரம் தெரிஞ்சு முழிச்சுப்பாக்குறப்ப நாம கடனாளியாயிட்டோம். சொஸைட்டியிலே கடன். வட்டி வாசி. ஜப்தி கெடுபிடி, அது இதுன்னு கேவலப்பட்டோம்.

சீரழிஞ்சு செங்கல் சுமந்தோம். அதைக் கண்டு புள்ளைக... பாவம், அரண்டு போயிருக்கும்.’

“நமக்குப் பின்னாலே.. இந்தப் புஞ்சையை யாரு பாக்குறது? நாம ரத்தமும் வேர்வையும் சிந்தி, வம்பாடுபட்டு வளர்த்த சம்சாரித்தனத்தைக் கொண்டு நடத்திப் போறது யாரு?”

"அதைப் பத்தி... இப்ப என்ன? நாம நம்ம புள்ளை களைப் பத்தித் தானே கவலைப்படணும்?"

"சம்சாரித்தனம்னா... லேசா? அது வெறும் ஜீவனத் தொழில்னு நெனைச்சீயா? ஒலகத்துக்கே படியளக்குற ஜீவத் தொழிலாச்சே! பிரம்மத் தொழிலாச்சே. அது நம்மோட முடிஞ்சு போறதா?'

"ம்ம்..."

"இப்படியே எல்லாரும் சம்சாரித்தனத்தைப் பார்த்து பயந்து பயந்து ஓடிட்டா... காடுகரையை யாரு பாக்குறது? யாரு வெளைய வைக்குறது? ஊரு உலகம் எதை வைச்சுத் திங்கும்? கார், ரயிலை பிச்சித் திங்கவா?"

"ஊரு ஒலகத்தைப்பத்தி நமக்கு என்ன கவலை? புள்ளைகளைப் பத்திச் சொல்லுங்க."

"அதென்ன கழுதை... அப்படிச் சொல்றே? சம்சாரித் தனம் வேற, நம்ம புள்ளைக வேறா? சம்சாரித்தனத்தைக் கண்டு புள்ளைக பயந்தா பாடுபடப் பயப்படுதுகன்னு அர்த்தம். பாடுபடப் பயப்படுற புள்ளைக... எப்படி முன்னேறும்? எந்தத் தொழில்லே போய் கைவைச்சாலும், வெளங்காதே... நாசமாய்ப் போயிருமே..."

"அப்படியெல்லாம் சொல்லாதீக. நம்ம புள்ளைகளை நாம சாபம் தரக்கூடாது..."

"இல்லே கழுதை... இந்தப் புஞ்சையிலேதா நம்ம உசுரு இருக்கு. நம்ம வாழ்க்கை இருக்கு. நம்ம சந்தோஷம் இருக்கு. நம்ம கண் முன்னாலேயே இந்தப் புஞ்சையை பறிகுடுத்துரு வாங்க போலிருக்கே... அதை நெனைக்க நெனைக்கத்தான் மனசு கிடந்து வேகுது..."

"பாப்பம்... விதி எப்படி இருக்கோ அப்படித்தானே நடக்கும். நடக்குறபடி நடக்கட்டும்."

"இல்லே கழுதை. இந்தப் புஞ்சையிலே இன்னொருத் தன் கால் வந்து படுறதுக்கு எம்மனசு சகிக்காது. அதுக் குள்ளே... நாம செத்துட்டா நல்லது."

சொல்லி முடிப்பதற்குள் அழுகை முந்திக்கொண்டு வந்து விட்டது. குமுறிக் குமுறி அழுது விட்டார். அழுகிற அழுகையில் கோணித்துக் கொண்டு போகிற வாயும், வழிகிற கண்ணீரும்...

அவள் ஆடிப் போய்விட்டாள். அவரை இழுத்து தன் மடியில் போட்டுக்கொண்டாள்.

"அய்யோ... இதென்ன பாதரவு? ராசா... நீங்களா இப்படி? ஒரு சம்சாரித்தனத்தையே தூக்கி நிறுத்தி, கட்டி யாண்ட மவராசா.. நீங்களா? அய்யய்யோ இதென்ன கோலக்கூத்து?"

அவளது மடிக்குள் முகம் புதைத்துக் குமுறுகிற அவர். குலுங்குகிற அவரது முதுகு. முதுகு ரோமங்கள். கலங்கிப் போய் விட்ட அவளின் கண்ணீர் நடு முதுகில் துளித்துளியாய் சிதற... அதில் அப்படியே அவள் உதடுகளை வைத்து அழுத்தினாள். வலது கை அவரது தலையைக் கோத... இடது கை அவரது இடுப்பில் வருட.

அவர் முகத்தை இருகைகளாலும் தூக்கினாள்.

"ராசா... ராசா... உங்க வாய்லே இந்த வார்த்தை வரலாமா...?

"இல்லே... கழுதை நம்ம புள்ளைக."

"அதுக கெடக்கு சனியங்க. நீங்கதா ராசா, தெம்பா இருக்கணும். தைர்யமா இருக்கணும்."

சிறு குழந்தையைக் கொஞ்சுவது போல, அவள் கண்களில் முத்தமிட்டாள். மாறி மாறிக் கன்னத்திலும், உதட்டிலும்... நாடியில்.. நெற்றியில்...

அப்படியே அவர் முகத்தை மார்போடு அணைத்துக் கொண்டாள். பிடறி ரோமத்தை அன்புடன் வருடினாள். அப்படியே அழுத்திக் கொண்டாள். அவளிடமும் ஒரு விசும்பல்.

அவரும் அவளது இடுப்பில் கைபோட்டு வளைத்தார். அவளும் வாசல் வெளிச்சத்திலிருந்து விலகி, கரண்ட் ரூமின் நிழலில் சாய்ந்தாள்.

இருவரும் சுதந்திரமாயினர். துன்பமும் ஆறுதலுமாய்— குமைச்சலும் குழைவுமாய் — கவலையும் கனிவுமாய்க் கலந்தனர்.

உழைப்பும், உழைப்பின் அயற்சியும், நிலவின் குளிர்ச்சியும் காட்டுத் தனிமையும் எல்லாம் சேர்ந்து ஒரு பெருவெள்ளமாய் அவர்களை முழுசாகத் தழுவி அணைத்து விழுங்கிக் கொண்டது.

## 17

ஜம்புலிங்க நாடாருக்கு மூச்சுவிட நேரமில்லை. உட்கார்ந்து உஸ்ஸென்று பெருமூச்சுவிட ஓய்வில்லை. விசை முடுக்கிவிட்ட மெஷினாக ஓடித்திரிந்தார்.

ராசம்மா கல்யாண காரியம் அவரைப் பாடாய் படுத்திவிட்டது. அங்கு ஓட, இங்கு ஓட, என்று எந்நேரமும் ஓட்டம்தான். ‘அந்தக் காரியம், இந்தக் காரியம்’ என்று பொழுதுக்கும் அலைச்சல்தான்.

கல்யாணம் என்றால் சும்மாவா? அதுவும் பெண் பிள்ளை கல்யாணம். யார் மனசும் கோணிவிடாமல் காரியம் செய்ய வேண்டும்.

ரெண்டு ஆண்பிள்ளைகள் பெற்றவர். ரெண்டு பேரும் கல்யாணமாகி குடியும், குடித்தனமுமாக உள்ளூரிலேயே இருக்கின்றனர். இருந்து என்ன செய்ய?

ஒரு உப்புக் கல்லுக்கும் பிரயோஜனமில்லை.

'யாருக்கு வந்த விருந்தோ' என்று இந்தப் பக்கம் ஏறெடுத்துப் பார்க்காமல் இருந்தனர். பொன்னையாவும் ராமையாவும் பகையாளிகளைப் போல இவரைப் பார்த்தனர்.

சம்சாரித்தனத்தைக் கட்டிக்கிட்டு மாரடிக்கிறாரே... விடப்படாது என்று பிடிவாதமாக இருக்கிறாரே... சாவடை செத்த சம்சாரித்தனத்தை அறிவுள்ள மனுசன் எவனும் செய்வானா? கைசுட்டா சட்டியை விட்டுறணும். நட்டம் வருதுன்னா தொழிலை விட்டுறணும். அதுதான் புத்திசாலித் தனம். புத்திகெட்ட இந்த கிழடு... எத்தனை நட்டம் வந்தாலும்... நா பிடித்த முயலுக்கு மூன்றே கால் என்று பிடிசாதனை பண்றாரே... சம்சாரித்தனத்தை விடாமல் தொங்குகிறாரே...

இவரும் கெட்டுக் குட்டிச்சுவராகி— நம்மையும் நாச மாக்கிருவாரு. புஞ்சைமேலே கடனை ஏத்திவச்சிருவாரு. குடும்பத்தையே சுடுகாடாக்கிருவாரு.

ஜம்புலிங்கம்மேல் பிள்ளைகளுக்கு வெறுப்பு. கடுமை யான கோபம். 'உமது பாவத்தில் எனக்குப் பங்கில்லை' என்பது போல இருவரும் ஒதுங்கிக் கொள்வார்கள்.

அவர்கள் மனைவிமார்கள் அதற்கும் மேலே. எந் நேரமும் வசவும் திட்டும்தான். சாட்டையாய் நாக்கைச் சுழற்று வார்கள். சுளீர் சுளீரென்று வார்த்தைகளை வீசுவார்கள்.

"நாசமத்துப்போன இந்த வீட்டுக்குள்ளே கழுத்தைக் குடுத்துட்டு நாங்க படுறபாடு... யம்மாடி! நாய்கூடப்படாது.

உள்ளுக்குள் முழுக்க முள்ப்பிடுங்கல். தோளுக்கு தோள் தரவேண்டிய பிள்ளைகள் தொலைவில் நின்று வேடிக்கை பார்க்கின்றனர்.

ஒற்றை மனுசன் என்ன செய்ய முடியும்? சிரமம்தான். ஆனால்... அதற்கெல்லாம் துவள்கிற கட்டையா இது? வைரம் பாய்ந்த கட்டையல்லவா ஐம்புலிங்கம்? மன வைராக்யத்துடன் மல்லுக்கு நின்றார்.

பிள்ளைகள் ஒத்துழைக்காவிட்டால் என்ன! வல்லவனுக்குப் புல்லும் ஆயுதம். நல்லவனுக்கு சகலமும் ஆயுதம் தான். வாத்தியார் ராமமூர்த்தி போன்ற நல்ல மனிதர்கள் எல்லோரும் ஒத்துழைக்க... ராசம்மா கல்யாணத்தை 'ஜாம் ஜாம்' என்று முடித்து வைத்தார்.

ஆயிற்று கல்யாணம் முடிந்து, 'மறு வீடு' போய்வந்து, மாப்பிள்ளை விருந்தும் நடந்தேறி எல்லாம்முடிந்துவிட்டது.

ராசம்மாள் இந்த வீட்டில் நார்ப்பறித்தவள். பாவாடை கட்டிய நாளிலிருந்து பாடு பாடு பாடு... என்று பொழுதுக்கும் பாடுபட்டவள். அய்யாவுடன் சேர்ந்து காட்டிலும் வேலை. அம்மாவுடன் சேர்ந்து வீட்டிலும் வேலை.

ராசம்மா அவளது அம்மா மாதிரி. ஆள் ஒல்லியாக ஈர்க்குச்சி மாதிரித்தான் இருப்பாள். உழைப்பு என்று இறங்கிவிட்டால்... ஏழு ஆள் வேலை பார்ப்பாள். ராட்சஸி மாதிரித்தான்.

அவளுக்கு வாய்த்திருக்கிற மாப்பிள்ளையும் நல்ல சம்சாரி. பம்ப்ஷெட் மோட்டார் ரெண்டு இருக்கிறது. மூன்று மூலையில் தோட்டங்கள். காலத்திலும் கோடையிலும் மாறி மாறி வெள்ளாமைதான். விளைச்சல்தான். ஓய்வேயில்லாத. உழைப்புதான்.

அது ஒன்றுதான் ஜம்புலிங்கத்திற்கு மிகவும் பிடித்தது. வாத்யார் கூடப் பெருமையாகச் சொன்னார்.

"நாடாரே... இருந்து இருந்து... நல்ல புளியங்கொம்பா புடிச்சிட்டீரு. காடு கரைக உள்ள வசதியான சம்சாரிதான். ஒம்ம மருமகன்."

"வாத்யாரய்யா... காடுகரைகளை விட்டுத்தள்ளும். அது இன்னிக்கு இருக்கும். நாளைக்குப் போயிரும். ஆனா... மருமகன் கிட்டேயிருக்குற உழைப்பு இருக்கே, வேர்வை சிந்தணும்ங்கிற ஆசை இருக்கே... அதுதான் பெரிய சொத்து. அசையாத சொத்து."

"பாம்பு பாம்பு கால் அறியும்னு சொல்வாக. அது மாதிரித்தான், உழைப்பாளிக்கு உழைப்பாளி பிடிக்குது.."

ஜம்புலிங்கம் பெருமிதச் சிரிப்புடன் வாத்தியார் ராமமூர்த்தியைப் பார்த்தார்.

"அதுவும் நிஜந்தான். உங்க ஏட்டுப்படிப்பாளி அடிக்கடி சொல்வாகளே... 'கற்றோரை கற்றோர் காமுறுவார்'னு, அப்படின்னு வைச்சிக் கோருமே..."

ராமமூர்த்தி பெரிதாகச் சிரித்தார். ஏதோ ஜோக்கைக் கேட்டவர் போல குலுங்கிக் குலுங்கிச் சிரித்தார். அவர் எதற்குச் சிரிக்கிறார் என்பதைப் புரிந்துகொள்ளாமலும், புரியாத பாவனையில் அசட்டுச் சிரிப்போடு கேட்டார்.

"என்ன... பெரிய சிரிப்பாணி?"

"ஒன்னுமில்லே... கதைக்கு எதிர்க்கதை போடாமே ஒம்மாலே இருக்க முடியாதேன்னு நெனைச்சேன். அதே மாதிரி போட்டுட்டீரே... அதான் சிரிச்சேன்..."

"அப்படியா...?" ஆசுவாசமானார்.

# 18

குடும்பத்தின் கடைசிப் பாரமும் இறங்கி விட்டதே என்று அவரால் சந்தோஷப்பட முடியவில்லை. கல்யாணம் முடிந்து மூன்று மாசமாகிவிட்டது.

இந்த மூன்று மாசமும் ஐம்புலிங்கத்துக்குள் ஒரே திகில், பயம். பொன்னையாவும், ராமையாவும் பூகம்பமாகி எப்போது வந்து வெடிப்பார்களோ... என்று ஒரே திக்திக் மயமாகியிருந்தது.

குடிக்கிற கஞ்சி கூட்டில் போய்ச் சேராது. எப்போது வந்து வம்பு பண்ணுவார்களோ... சண்டை போடுவார்களோ.. என்று ஒரே கிலி.

பயங்கரத்தைச் சந்திப்பதில் எந்த பயங்கரமுமில்லை. வரும் வரும் என்று எதிர்பார்க்கிற பயங்கரம்தான்... ரொம்ப ரொம்பப் பயங்கரம். ஆளைப்போட்டு அச்சுறுத்தும் விதம் விதமான கற்பனைகள்... குரூர யூகங்கள்... கொடூரக்காட்சிகள். எல்லாம் மனசுக்குள் மாயப் பிசாசுகளாய் வடிவமெடுக்கும். அடி வயிற்றில் பகீர் பகீர் என்கிற உணர்வு கத்தியாக அறுக்கும். மனம் கிடந்து படபடக்கும். உதடுகள் உலரும். பார்வை தங்குமிடமற்று அலையும். குறிக்கோளற்று நங்கூரமிடும்.

ஐம்புலிங்க நாடாரும் அப்படித்தான். ரொம்பத் தவித்துப் போனார். கேவலப்பட போகிறோமே என்பதை நினைத்தே உருக்குலைந்தார். பேய் பிடித்தவர் மாதிரி மதர்த்துப் போய்... வாடிப் போய்விட்டார்.

நேற்றுத்தான் கெழடி பார்த்து விட்டுக் கேட்டாள். அவளையும் காலமும், வாழ்க்கையும் கிழித்துப் போட்டு விட்டது. ஆஸ்த்மாவும், இருமலும் அவளது ரத்தத்தையும்

சதையையும் குடித்துவிட்டது. எலும்பும், தோலுமாக ஒட்டிக் கிடந்தாள்.

சுவரை ஒட்டி குத்துக்கால் வைத்து உட்கார்ந்தால் கூட 'நிமிர்ந்து' உட்கார முடியாது. பந்துமாதிரி சுருண்டு கிடப்பாள். கூனக் கிளவி மாதிரி. அப்படித்தான் நேற்று உட்கார்ந்தாள்.

"நானும் பாத்துக்கிட்டிருக்கேன்... கொஞ்ச நாளா எப்படியோ' இருக்கீகளே... என்ன விஷயம்?"

"ஒன்னுமில்லே... நல்லாத்தான் இருக்கேன்."

"நல்லாயிருக்கிறதும், இல்லாததும் மூஞ்சியைப் பாத்தா ... தெரியாது?"

"மூஞ்சியிலே என்ன இருக்கு?"

"எதுக்குப் பயப்படுதீக? இன்னும் எதை நெனைச்சு பயப்படணும்?2

"நீ சுமந்துபெத்த சனியன்ங்க இருக்குல்லே, அதுகளுக்குத் தான்."

பிரச்சனையின் தீவிரம் கற்றையாய் அவளுள் தாக்க... அவள் பார்வையிலும் தடுமாற்றம். இமை ரோமங்கள் படபடத்தன. அந்தி வெயில் அவர் காலடியில் கிடந்தது. அதன் எதிரொளி அவள் கண்ணில்...

மன உணர்வுகளை சமனப்படுத்திக் கொள்ள யத்தனித்தாள். உதடுகளை சப்பிக் கொண்டாள். சமாளித்துக் கொண்டு ஆறுதலாய்ச் சொன்னாள்:

"அதுக்கென்ன...! புள்ளைக நெலம் வேணும்னு கேட்டா... பிரிச்சுக் கொடுத்துர வேண்டியது தான். பாத்யதை உள்ளவுக கேக்காக. அதுக்கான காலமும் வந்துருச்சில்லே?"

ஜம்புலிங்கம் திண்ணையில் இருந்தவாறே அவளை முறைத்துப் பார்த்தார். திக்குத் தெரியாத மனக் கொந்தளிப்பு, அவள் மீது பாய்ந்தது.

“அறிவு கெட்ட கெழடி, நீயும் புத்திகெட்டுப்போய் பேசுதீயே, ஏன்? காலம் என்ன காலம் வந்துருச்சு? அழிவு காலமா? கேடுகாலமா?”

அவளும் உரிமையோடு சீறினாள்.

“தூ! கெழட்டு மனுசா, நாக்குலே இப்புடியா பாம்பு வரணும்? வீட்டுக்குப் பெரிய மனுசன். நல்ல வார்த்தை பேசவேண்டாம்? அழிவு காலமாம்! யாருக்கு அழிவு காலம்? ஒம்ம புள்ளைகளுக்கா? அதுகளுக்கு கேடு காலம் வந்தா... நமக்கு ரொம்பச் சந்தோஷமோ?”

கெழடியைப் பார்த்த அவரது கண்கள் வெறுப் புணர்ச்சியில் மேலும் இடுங்கின. நரைத்த புருவம் நெரிய, நடு நெற்றியில் நிறையச் சுருக்கங்கள்.

“மூதி! கூறுகெட்ட மூதி! நா என்ன நெனைச்சுப் பேசிக்கிட்டிருக்கேன், நீ என்னத்தைப் பேசிக்கிட்டிருக்கே?”

“தெரியுது, தெரியுது... நாம நெலத்தை உசுரா நெனைக் கோம். நம்ம புள்ளைக வெறும் மண்ணா நெனைக்குது. காலம் செய்யுற கூத்துக்கு... புள்ளைக என்ன பண்ணும்?”

“அப்படி நெனைச்சுட்டு சும்மாயிருக்க முடியுமா? அவுக மனம் போலவே நாமும் நடக்கவா? நெலத்தைப் பிரிச்சுக் குடுத்தா... என்னாகும்? நாலே நாள்லே வித்து. ஊதிருவாக. கண்ணுக்குக் கண்ணா நாம காப்பாத்தி வந்த நெலத்துலே வேற எவனோ வந்து கால் வைச்சு நிப்பான்...’

கடைசி வார்த்தைகளைச் சொல்கிறபோது அவர் நாக்கு குழறியது. தேகமே அதிர்ந்து நடுங்கியது. அதே

போல அவளுக்கும் இமைகள் படபடத்தன. பயத்தில் வெல வெலத்தாள்.

"நெசந்தான்... புள்ளை மாதிரி நெனைச்சு, வேர்வை சிந்திப் பாடுபட்டு உருவாக்குன புஞ்சை. கெணறு. ரத்தத்துலே சதையைப் போட்டு கொழைச்சு கெட்டுன பம்ப்ஷெட்டும். எல்லாத்தையும் எவனோ ஒரு பாவிப்பய வந்து லாவிக் கிட்டுப்போகப் போறான்ங்கிறதை நெனைச்சாலே... குடலைப் பிடுங்கிக்கிட்டு வருது."

"கொடுமை. இந்தக் கொடுமைக்கு நா செத்தாலும் சம்மதிக்கமாட்டேன்."

"அதெப்படி....? நிலத்தைப் பிரிச்சுத் தரமாட்டேன்னு எப்படிச் சொல்ல முடியும்? குடும்பத்துலே பொதுக்கடமை எதுவுமில்லே. ராசம்மா காரியமும் நெறைவேறியிருச்சு. இனியும் பாகப்பிரிவினை பிரிச்சுத் தரமாட்டேன்னு சொல்றதுக்கு என்ன முகாந்திரமிருக்கு?"

"அதுதான். எனக்கு இப்ப கலக்கமாயிருக்கு."

"கவலைப்பட்டு ஆகப்போறது ஒன்னுமில்லே. நடக்கிற படி நடந்துட்டுப் போகட்டும்..."

"எப்படி விட்டுட்டு இருக்க என்னாலே முடியும்? நம்ம நெலம் நம்ம பரம்பரைக்குத்தான் இருந்தாகணும். வெவசாயம் இந்த தலைமுறையோட அழிஞ்சிறக்கூடாது. நாசமாயிறக் கூடாது. எம் பேரன் காலத்துலேயாச்சும் தொடரணும். தழைக்கணும்."

"நம்ம ஆசை அப்படி, தெய்வ நெனைப்பு எப்படியோ...?"

"மனுசன் பாத்து நல்லதை நெனைச்சுட்டா.. தெய்வ நெனைப்பைக் கூட மாத்திறலாம்."

புருஷனை ஏறிட்டுப் பார்த்தாள். இந்த வைராக்கியச் சொற்களை உச்சரிக்கிறபோது ஆண் சிங்கம் போல கம்பீரமாகத் தெரிகிறார். வலதுகையால் நெஞ்சுரோமங்களை உருவிவிட்டுக் கொள்கிறார். பாடுபட்டு வைரம் பாய்ந்த உடம்பை, முதுமைகூட அவ்வளவாக அசைத்து விடவில்லை.

அவளுக்குள் துண்டு துண்டாக நினைவுகள். பழைய நினைவுகள். பால்ய காட்சிகள். அறுப்புபிடித்து, நெற்பயிர் கற்றைகளை ‘சறுக் சறுக்’ கென்று அறுத்துச் சென்ற அந்தப் புயல்வேக ஜம்புலிங்கம்...

கிணறு வெட்டியபோது... ராத்திரி நேரத்தில்கூட கடப் பாரையை வைத்துக் கொண்டு செம்போர்ப் பாறையைக் குடைந்து கொண்டிருந்த ஜம்புலிங்கம்...

‘காடு காடு’ என்று ரவ்விலும் பகலிமும் வெறியோடு மண்ணுடன் மல்லுக்கட்டிச் சந்தோஷம் கண்ட ஜம்பு லிங்கம்...

“என்ன கெழடி ஒரே பார்வையா பாக்கே?”

“ம்ள்ச்சூ! ஒன்னுமில்லே...”

“என்ன... சொல்லேன் ?”

“நாம பாடுபட்ட நாளை நெனச்சுக்கிட்டேன்...”

“பாடுபடுறதுலே நம்மளை ‘பீட்’ பண்றதுக்கு இந்த ஜில்லாவுலே யார் இருக்காக?”

“நல்ல விதியிருந்துருந்தா... நம்ம புள்ளைக ‘பீட்’ பண்ணியிருக்கும்.”

“அதுதான் நமக்குக் குடுத்து வைக்கலியே. நம்ம புள்ளைக கிட்டே நம்ம அடையாளமேயில்லியே. தப்பிப் பிறந்த தறுதலைக.”

“இந்தப் பொன்னையாப் பயலைப் பாருங்க. ஆத்துக் காட்டுலே, ஓடைக்காட்டுலே ஆடுகளைப் பத்திக்கிட்டு வேனாக் கொதிக்கிற வெயில்லே வெந்து திரியுறானே... அவனாச்சும் காடுகரைன்னு அக்கறைப்படக்கூடாதா?”

“எப்படிப் படுவான்? பழைய மாதிரியில்லே வெவசாயம். இப்ப... வருஷத்துக்கு பத்தாயிரம் ‘முதல்’ போட்டு வெவசாயம் பண்ணணும். வெளைஞ்சா கடன் அடையும். வெளையாமப் போய்ட்டா.. கடன்தான் மிஞ்சும். ஆடு மேய்ப்புன்னா அப்படியில்லியே... முதல் போட வேண்டியதில்லே. வருஷாவருஷம் வருமானம் இருக்கே...”

“ஊர்க்காடுகள்ளே அலைஞ்சு, வெறகு வெட்டி வித்துப் பொழைக்கிற ராமையாப் பயலாச்சும் சொந்தப் புஞ்சையிலே உரிமையோடு பாடுபடலாம்லே?”

“எப்படிப் பாடுபடுவான்? வெட்டிவிக்கிற வெறகு டன்னுக்கு நானூத்து முப்பது ரூவா விக்குது. வெளைய வைச்சு விக்கிற கரும்பு டன்னுக்கு முந்நூறு ரூவா விக்குது. நிலமை இப்படி இருந்தா... அவனுக்கு சம்சாரித் தனத்துலே எப்படி நாட்டம் வரும்?”

“இம்புட்டு தூரத்துக்கு ஞாயம் புரிஞ்சிருக்கிறப்ப... புள்ளைகளை எதுக்கு திட்டித்தீர்க்கணும்? நட்டம்வர்ற சம்சாரித்தனத்துலே நாட்ட மில்லையேன்னு... எதுக்காக குதிக்கணும்?”

“காரணம் இருக்கு.”

“என்ன காரணம்?”

“பெத்தபுள்ளைக்கு நோய் வந்துட்டா... கொன்னு போடுவமா? காப்பாத்துறதுக்கு வைத்தியம் பார்ப்பமா?”

“வைத்தியம் பாப்பம்.”

"அப்படித்தான் இதுவும். கட்டுபடியாகாத தொழிலாப் போச்சுங்கிறதுக்காக சம்சாரித்தனத்தை விட்டுட்டு எல்லாரும் ஓடிப்போய்ட்டா... நாடு என்னத்தைத் திங்கும்? சம்சாரிகளை நம்பி வாழ்ற ஒலகம் மண்ணையா திங்கும்?"

"நாடு முக்கியமா, நம்ம பொழைப்பு முக்கியமா?"

"ரெண்டுமே முக்கியந்தான். கட்டுபடியாகாத சம்சாரித் தனத்தை விடாமல் செய்யணும். மல்லுக்கட்டணும்... அப்பத் தான்... கட்டுப்படியாகிற தொழிலாக அதை மாத்துறதுக் கான வழி தெரியும்..."

"வழி இருக்கா?"

"இல்லாமலா? சுவர்னு ஒன்னு இருந்தா... வாசல்னு ஒன்னு இல்லாமப் போகாது. பரிகாரம் இல்லாத வெவகாரம் ஒலகத்துலே எதுவுமேயில்லே..."

குத்துக்கால் வைத்து உட்கார்ந்திருந்த அவளுக்குக் கால் எரிச்சல் பற்றி விட்டது. நகர்ந்து உட்கார்ந்தாள். அதற்குள் இருமலும் வந்துவிட்டது. லொக்கு, லொக்கு என்று விடாத இருமல், உடம்பையே ஒரு சுருட்டு சுருட்டி, உலுக்கியெடுக்கிற இருமல்...

கெழடியைப் பார்க்கவே பரிதாபமாக இருக்கிறது. பொழுதுக்கால் மறைந்துவிட்டது. வெயில் காணாமல் போய், மேகத்து வெளிச்சம் மட்டும் மிச்சமாக இருந்தது.

அதற்குள் சுப்பிரமணி வந்துவிட்டான். பள்ளிக்கூடம் விட்டதும் விளையாடப் போனவன் இதோ வந்துவிட்டான்.

## 19

இவனுடன்தான் சாயங்கால வாக்கிங். வாத்தியார் ராமமூர்த்தி வீட்டுக்குப் போய் மாநிலச் செய்தி கேட்பார்.

"என்னடா..."

“போவம் அய்யாப்பா...”

“சரி... உங்க ஐயாம்மைக்கு கொஞ்சம் வெண்ணீ மோந்து கொடு.”

“ஆட்டும்.”

அவன் ஒரு கிளாஷில் வெந்நீர் கொண்டு வந்து தந்தான். வாங்கிக்குடித்தாள். அதற்குள் ஜம்புலிங்கம் துண்டை யெடுத்துத் தோளில் போட்டு புறப்பட்டார்.

அவரது நிழலாக அவன்... காக்கிடவுசர் போட்டிருந் தான். அதுவும் இடுப்பில் நிற்க மறுத்து அடம் பிடிக்கிறது. அவனும் அதை விடாமல் இழுத்து, அர்ணாக் கயிற்றில் கோர்த்துக் கொண்டான்.

இருக்கிற பேரன், பேத்திமார்கள் யாரும் இவருக்குப் பிடிக்காது. அதுகளுக்கும் இவரைக் கண்டாலே... ஆகாது. சுப்பிரமணி ஒருத்தன்தான், இவரது தோஸ்த். கெழடி சாயல். நிறம்தான் வேறு. மற்றபடி மூக்கு, முழி, குணம், எல்லாமே கெழடிதான். மண்மீது வைத்திருக்கிற ஈடுபாட்டிலும் கெழடிதான். விவசாயத்தில் ரொம்ப கருக்கடையானவன்.

... அப்ப மூனாம் கிளாஸ் படித்தான். குப்பை மேட்டில் ஒரு சின்னஞ்சிறு வேப்பங்கன்னு. நாலு துளிருடன் பூமியை அழகு செய்து கொண்டிருந்தது. சுப்பிரமணி எப்படியோ இதைப் பார்த்துவிட்டான். யாரிடமும் எந்த யோசனையும் கேளாமல்... அவனாகவே அதைப் பிடுங்கி... வேர்மீது சூரியன் படாமல் ஈரமண்ணை அப்பி வைத்து... புஞ்சைக்குக் கொண்டு போய்...

கமலைக் குழியில் தண்ணீரை ஊற்றி, குழியைத் தோண்டி ‘கன்றை’ ஊன்றிவிட்டான். காய்ந்த சாணங்களைப் பொறுக்கி, அதை நொறுக்கி உரமாகப்போட்டு... அன்றாடம்

கண்ணும் கருத்துமாய்க் கவனித்து நீருற்றி, அணு அணுவான மாற்றங்களைக் கண்காணித்து...

இப்போது அந்தக் கன்று, ஆள் உயரத்துக்குமேல் வளர்ந்துகொண்டது. கோணல், வளைவு எதுவுமில்லாத தடி. மேல் வட்டக் கோபுரமாய் கிளைகளும் இலைகளும் பார்க்க வெகு லட்சணம். மைனாக்கள், காகங்கள் வந்து உட்காருகின்றன. மைனாக்கள் 'கிச்சட்டி, கிச்சட்டி' என்று கத்துகிற போதெல்லாம்... ஐம்புலிங்கம் காதில் 'சுப்ரமணி சுப்ரமணி' என்பதுபோல ஒலிக்கும்.

உட்கார இடம் தந்த பேரனை வாழ்த்தி பெயரை உச்சரிப்பது போல நினைத்துக் கொள்வார். அவருக்கு அதில் ஏகப் பெருமிதம்.

அவன் வயசுக்கு இந்தக் காரியம் சற்று மீறலான காரியம்தான். பச்சைத் தாவரங்கள் மீது அவனுக்கு இருக்கிற லயிப்பும், ஆர்வமும் ஐம்புலிங்கத்தை ரொம்பக் கர்வம் கொள்ளச் செய்யும்.

தனது சாயல் — தனது நிழல் — தனது வார்ப்பு — தனது குணத் தொடர்ச்சி — எல்லாமே இவன்தான் என்று அவருள் ஓர் எண்ணம். நம்பிக்கை. அன்பு, பாசம்.

தனது உயிரின் உயிராக உள்ள தோட்டத்தையும், விவசாயத்தையும் இவனிடம்தான் ஒப்படைக்கவேண்டும்.

இவன்தான் நிலம் மாதிரி. ஒரு விதை போட்டால், ஆயிரம் விதைகளாக திருப்பித் தருகிற நிலம் மாதிரி. விழுந்த வியர்வைக்கு உரிய பலனைத் தருகிறவன். விடாப் பிடியாக போராடுகிற வைராக்கியமானவன். வறட்சியிலும் விளைச்சலைத் தருகிற மண்ணைப் போன்றவன், இவன்.

சுட்டுவிரலைப் பிடித்துக் கொண்டு ஐயாப்பாவுடன் நடக்கிற சுப்பிரமணி. அவனிடம் அவனது வாத்தியாரைப்பற்றி சொல்லிக் கொண்டு வந்தார்.

அவரது பழைய சம்பளம்... ஊரில் அவர் பட்ட கஷ்டங்கள். குடும்பம் நடத்த முடியாமல் அவர் தவித்த தவிப்பு... கடன் தொல்லைகள்.. அவ்வப்போது நூறு இருநூறு என்று கைமாற்று கொடுத்து உதவிய இவரது நட்பு... அவரது தீரா வறுமை...

"எங்க வாத்தியாரு அம்புட்டு கஷ்டப்பட்டவரா?"

"உங்க வாத்தியாரு மட்டுமில்லே... எல்லா வாத்தியார் களுமே வக்கத்துப்போய் கெடந்தவுகதான்..."

"ஆனா... இப்ப வசதியாயிருக்காகளே, அது எப்படி?"

"உங்கப்பனைப் போல, சித்தப்பனைப்போல... இந்த வாத்தியாருக வறுமையைப் பாத்துப் பயப்படலை. விட்டு விட்டு ஓடிப்போகலை."

"ம்"

"துணிஞ்சு தொடர்ந்து இருந்தாரு. எல்லா வாத்தி யார்களும் 'கூட்டணி' சேர்ந்து போராடுனாக. அடேயப்பா! அவுக நடத்துன மாநாடுக கொஞ்சமா? பேரணி கொஞ் சமா? ஆர்ப்பாட்டம் கொஞ்சமா? மறியல் கொஞ்சமா? கடைசியா மறியல் போராட்டம் நடத்துனப்ப... பிடிச்சு ஜெயில்லே போட்டுட்டாக. நாப்பத்தினாலு நாளு... நாடெல்லாம் தீபாவளி கொண்டாடுறப்பகூட, அவுக ஜெயில்லே இருந்தாக. பதினோரு உயிரைப் பறிகுடுத்தாக. அப்பவும் விடாமப் போராடுனாக. அதனாலேதா சர்க்கார் பணிஞ்சு வந்து மத்திய சர்க்கார் ஊழியர்களுக்கான அதே சம்பளத்தைக் குடுக்க முன் வந்தாக...?"

"ம்"

“இப்ப உங்க வாத்தியாரு மூவாயிரத்தை அடுத்து சம்பளம் வாங்குறாரு. வக்கத்த உத்யோகமாயிருந்த வாத்தியாரு உத்யோகம், கௌரவமான உத்யோகமாயிருச்சு. இப்ப... இந்த வாத்யாரு உத்யோகத்துலே சேர்றதுக்காக... நாப்பதாயிரம் லஞ்சம் கொடுக்கக்கூட ஆளுக தயாராக இருக்காக. இந்த உத்யோகத்துக்கு மவுசும் மரியாதையும் வந்துதுக்கே அவுக நடத்துன போராட்டம்தான் காரணம்.”

நிஜம்தான். இப்போது வாத்தியார் ராமமூர்த்தி பாடு, வசதியாகிவிட்டது. சொந்தமாக ஒரு இடம் வாங்கி வீட்டைக் கட்டிவிட்டார். பிள்ளைகளையும் நல்ல படிப்பு படிக்க வைக்கிறார். மகளுக்கு நகைபோட்டு ஒரு பேங்க் உத்யோகஸ்தருக்கு திருமணம் செய்து வைத்துவிட்டார்.

ஆனால் நல்ல மனிதர். வசதி வந்தாலும் பழசை மறக்காத மனிதர். நட்பை மதிக்கிறவர். இன்றும் அதே மாதிரி ‘நாடாரே, நாடாரே’ என்று பிரியமாக இருப்பார். சிக்கலான சமயங்களில் ஆயிரம், ரெண்டாயிரம் கொடுத்து உதவுவார்.

வாத்தியார் வீட்டில் செய்தி கேட்டுவிட்டு, கொஞ்ச நேரம் பேசிக் கொண்டிருந்துவிட்டு... வீடு திரும்புகிறபோது, நன்றாக இருட்டிவிட்டது.

வீடு வந்து பார்த்தால்... ஒரே சண்டைக்காடு. பொன்னையாவும், ராமையாவும் சேர்ந்துகொண்டுகாட்டுக் கூச்சலாகப் போடுகின்றனர். போதாக்குறைக்கு, மருமகள்மார்கள் வேறு...

யாருக்கும் பதில் சொல்ல முடியாமல் கெழடி, இருமிக் கொண்டிருந்தாள்.

வீடே... ரணகளப்பட்டுக் கொண்டிருந்தது.

ஜம்புலிங்கத்தின் நெஞ்சுக்குள் பகீர் என்றது. அடி வயிற்றில் ஏதோ புரட்டிக் கொண்டு வந்தது.

# 20

ஜம்புலிங்க நாடார் ரொம்பத் 'தவங்கி' விட்டார். கெழடி செத்த நாளிலிருந்தே ரொம்ப மௌனமாகிவிட்டார். ஒற்றையாளாகிப் போன அவலம், அவரை ஏகமாய் வதக்கி விட்டது.

ஊரில் பாதிக்கு மேல் இவரது உறவுக்காரர்கள்தான். மகன்கள், மகன்வழிப் பேரன்கள், பேத்திகள், மகள், மகள் வழிச் சொந்தங்கள் என்று ஊர் பூராவும் உறவுதான். இருந்தும் மனத்தளவில் ...அவர் 'தனீ'தான்.

கெழடி செத்த பிறகுதான் அவளுடைய அருமையே தெரிகிறது. கதிர் அறுப்பில் போட்டி போட்டு மனசுக்குள் இடம் பிடித்தவள், ஆயுள் முழுக்க ஆத்ம சிநேகிதியாக இருந்து வாழ்ந்துவிட்டுப் போயிருக்கிறாள். அவள் எப்பேர்ப்பட்ட துணைவியாக—ஆதரவாக இருந்திருக்கிறாள்.

இப்போது... அவருக்குள் வருகிற மனக்கொதிப்புகளை உள் வருத்தங்களை... கொட்டியழக்கூட ஒரு இதயமில்லையே என்கிற வெறுமைதான்... அவளது இல்லாமையை சுள்ளென்று உணர்த்துகிறது.

அவ்வப்போது... பேச்சுத் துணைக்கு சுப்பிரமணிதான். அவனை விட்டால்... அவருக்கு நாதியில்லை. சோறு தண்ணீர் கிடைக்கிறது. அதுவும் மரியாதையுடனா கிடைக்கிறது? மானங் கெட்ட சோறு.

எல்லாரும் சாப்பிட்டு முடித்த பிறகு நேரங்கெட்ட நேரத்தில் மருமகள் சோறு போடுவாள். நாய்க்குப் போடுகிற மாதிரி.

நாய்க்குச் சோறு போடுகிற போதுகூட முகத்தில் ஒரு மென்மை இருக்கும். ஈரம் இருக்கும். அதுவும் இருக்காது, இவருக்குச் சோறு போடுகிறபோது.

முகம் வெறுப்பில் இறுகிக்கிடக்கும். கண்களில் ஒரு எரிச்சல். ஒரு சாபம். ‘சனியனே, இன்னுமா எங்க கழுத்தை அறுக்கணும்? செத்துத்தொலைய வேண்டியது தானே’ என்று விஷமுள்ளாய் குத்துகிற ஒரு பார்வை.

அந்த நிமிஷத்திலேயே உயிரை மாய்த்துக்கொள்வோமா என்றிருக்கும். அப்படியோர் அவமான அவஸ்தை.

கெழடி இன்னும் கொஞ்சநாள் உயிரோடு இருந் திருப்பாள். அவளைக் கொன்றது... மகன்கள்தான்.

நிலம் பறிபோய்விட்டது என்ற விஷயம்தான் அவளை உள்ளுக்குள் நொறுக்கிவிட்டது. இதயமே உடைந்ததுபோல... புலம்ப ஆரம்பித்து விட்டாள்.

“போச்சு... போச்சு... மானம் போச்சு...” என்று வாய்க்கு வாய் புலம்பினாள். அந்தப் புலம்பலும்... வேதனையும் தான் அவளை வெகுசீக்கிரமாய்ச் சுருட்டிவிட்டது.

அன்றைக்கு...

பொன்னையாவும், ராமையாவும் நிலத்தைப் பிரித்துத் தரும்படி கூச்சல் போட்டனர்.

ஜம்புலிங்கம் திணறிப் போனார்.

கனவும், நனவும் முரண்பட்டுக் கொள்கிறபோது— லட்சியமும், யதார்த்தமும் ஒட்டாதபோது வருகிற சிக்கலில் ஜம்புலிங்கம் மாட்டிக் கொண்டார்.

நிலத்தை எப்பாடுபட்டேனும் பாதுகாத்து, பேரனிடம் ஒப்படைக்க வேண்டும். இது கனவு.

குடும்பத்தின் பொதுக் கடமை எல்லாம் முடிந்து போன பிறகு... வளர்ந்த பிள்ளைகளுக்கு நிலத்தைப் பிரித்துக் கொடுக்காமல் தவிர்க்க ஊர் நியாயம் இடம் தராது. இது நனவு.

என்ன செய்றது?

ஞாயம் பேசி கனவுகளைக் உடைத்துக் கொள்ள மனம் இல்லை. வேறு வழி, அடாவடித்தனம் பண்ணுவதைத் தவிர வேறு வழி இல்லை.

"நிலத்தைப் பிரிச்சுத்தர முடியாது" என்று தடாலடியாய் மறுத்தார். விதண்டாவாதம் பேசினார்.

மகன்களும், மருமகள்களும் பிலுபிலுவென்று சண்டைக்கு வந்தனர். வார்த்தைகளை அள்ளி வீசினர்.

கடைசியில்... கொஞ்சம் இறங்கி வந்தார்.

பாகஸ்தம் பிரிச்சுத் தாரேன், ஆனா... நெலத்தை விக்கக்கூடாது என்று கண்டிஷன் போட்டார்.

அதற்கும் மறுத்து விட்டனர்.

விற்கத்தான் போவதாகச் சொன்னார்கள். விற்றுப் பணமாக்குவதற்காகத் தான்... பாகப்பிரிவினையே கோருவதாகக் கூறினார்கள்.

"அப்படின்னா... பாகஸ்தம் கிடையாது" என்று கூறி விட்டார். 'என் உயிரே போனாலும் சரி, நிலத்தை விக்கவிட மாட்டேன்' என்றார்.

ஆக... விவகாரம் முற்றியது. ஊர்ப்பஞ்சாயத்து ஆயிற்று. பெரியவர் பொன்னையா நாடார், வாத்தியார் ராமமூர்த்தி இருவரும் பஞ்சாயத்துப் பண்ணினர். இரண்டு பிரிவினரையும் தனித்தனியே சந்தித்துப் பல தடவைகள் பேசினர். ரெண்டு

பிரிவினரையும் ஒரு கோட்டுக்குள் கொண்டு வருவதற்குள் 'ஆத்தாடி, அம்மாடி' என்றாகிவிட்டது.

கடைசியில், ஒரு முடிவுக்கு வந்தனர்.

புஞ்சையை இருபதாயிரம் ரூபாய்க்கு யாருக்காவது ஒத்தி வைப்பது. பத்து வருஷத்துக்கு ஒத்தி பணம் தருகிறவர் வட்டிக்குப் புஞ்சையை வெள்ளாமை செய்வது.

ஐயாயிரம் ரூபாயை ஜம்புலிங்கம் பேரில் வங்கியில் போட்டு விடுவது. மீதி பதினைந்தாயிரத்தை அண்ணன். தம்பிகள் இருவரும் பாகம் பிரித்துக் கொள்வது.

வந்தவரைக்கும் மிச்சம் என்று அண்ணன் தம்பிகள் ஒப்புக் கொண்டனர். ஜம்புலிங்கத்தை ஒப்புக்கொள்ள வைப்பதுதான் பெரும்பாடாக இருந்தது.

கடைசியாக... வாத்தியார் ஒருயோசனை சொன்னார்.

ஐயாயிரத்தை வங்கியில் போடுவது... வாரிசாக சுப்பிரமணியை மட்டும் குறிப்பிடுவது. பத்து வருஷத்தில் ஐயாயிரம் இருபதாயிரமாகிவிடும். பையனும் இளவட்டமாகி விடுவான்.

தாத்தா பணத்திலேயே நிலத்தை மீட்டு, பேரன் விவசாயத்தைத் தொடரலாம்.

இந்த யோசனைதான், ஜம்புலிங்க நாடாரின் கனவுக்கும் லட்சியத்திற்கும் கொஞ்சத்துக்குக் கொஞ்சமாவது ஒட்டி வந்தது.

பெரியவர் பொன்னையா நாடாரும் ரொம்ப வற்புறுத்தவே, சரியென்று தலையாட்டினார் ஜம்புலிங்கம்.

எல்லாம் அப்படியே நடந்தது.

ஐயாயிரத்தை வங்கியில் போட்டு, சுப்பிரமணி மட்டுமே வாரிசு என்று குறிப்பிட்டு, அந்தப் பத்திரத்தையும் வாத்தியார் ராமமூர்த்தியிடம் ஒப்படைத்தார்.

பத்திரத்தை அவரிடம் ஒப்படைக்கிறபோது ஜம்பு லிங்கத்தின் கை நடுங்கியது. கண்கள் கலங்கின. உடம் பெல்லாம் ஒரு படபடப்பு.

"வாத்யாரே... இதுதான் என்னோட உயிரு. நிலத்தை மீட்கணும், ஏம்பேரன் இதுலே இறங்கி உழுகணும். இதுக்கு நீருதான் உத்தரவாதம்."

"நானாச்சு நாடாரே, பாடு படறதுலேயும், சம்சாரித் தனத்து மேலேயும் ஒமக்கு இருக்கிற பாசமும், வெறியும் எனக்குத் தெரியும். ஒம்ம மாதிரியான நல்லவங்க ஆசை... நடந்தே தீரும், கவலைப்படாதீரும்"

"ஆமா... இனி என்னோட உயிரு ஒம்ம கையிலே தான்... என்னோட லட்சியம், ஆசை... எல்லாமே இனி நீருதாம்."

"சரி நாடாரே..."

முடிந்தது. ஒரு சகாப்தம் முடிந்து போன மாதிரி இவரது விவசாயம் முடிந்து போனது. இப்போதெல்லாம் புஞ்சை இருக்கிற திசையில் நடக்கவே மாட்டார்.

பேரனுண்டு,திண்ணையுண்டுஎன்றுஒடுங்கிப்போனார். அவர் ஆயுள் முழுக்க, காதலோடு செய்த பழைய ஏர்க் கலப்பை ஒன்றுதான் மிச்சம்.

காலையில் கண் விழித்தவுடன் கலப்பையைப் போய்ப் பார்ப்பார். காளை மாட்டைத் தடவி விடுவதைப்போல, பாசத்துடன் வருடுவார். அவருள், வாழ்ந்த நாட்கள் ஓடும்.

படுக்கும்போதும் கலப்பையை தடவிப் பார்த்துவிட்டுத் தான் போய்ப் படுப்பார். அவரைப் பொறுத்தவரை கலப்பை வெறும் மரமல்ல...

அவர் வாழ்ந்து முடித்த வாழ்க்கை. ஆயுள் முழுக்க உழைத்த உழைப்பு. பாசத்தோடு செய்த விவசாயம்.

சம்சாரித்தனத்தின் அடையாளம். புனிதச் சின்னம். உலகத்தின் காவல் தெய்வம்.

அந்தப் புனித மிச்சத்தையும் காப்பாற்ற முடியாமல் போனபோது தான் உடைந்துபோய்விட்டார். பொன்னையா கிடாயைக் கட்டிப்போட அந்தக் கலப்பையைப் பயன் படுத்திய போதுதான்... நொறுங்கிப் போனார்.

# 21

ஜம்புலிங்க நாடார் இறந்து போனார் என்ற செய்தி கேட்டு... கரி மூட்டத்திலிருந்து ராமையா முன்னால் ஓட, சுப்பிரமணி பின்னால் ஓடினான்.

இருவர் மனசிலும் வெவ்வேறு நினைவுகள்.

“கடுமையான வறட்சிக் காலத்துலே கண்ணை மூடிட்டாரே... ஊர் ஜனத்துல பாதிக்குமேலே பஞ்சம் பிழைக்க வேற எடங்களுக்குப் போயிருச்சுக. அண்ணன்கூட ஆடுகளைப் பத்திக்கிட்டு, ‘மேகாட்டு’க்குப் போய்ட்டாரு. எந்த ஊர்ல இருக்காரோ... எப்படித்தான் தாக்கல் சொல்லி யனுப்புறது? ஈமச்சடங்குச் செலவுக்குக்கூட ரூவாயில்லியே... அரிசி வாங்கக் கூட வக்கில்லே. எப்படித்தான் இந்தக் ‘காரியத்தை’ செஞ்சு முடிக்கப்போறோமோ...”

அவனுக்குள் இந்த மாதிரியான முடிச்சுக்கள். சிக்கல்கள். வெக்கையான புறவாழ்வின் அனல்வீச்சு. லௌகீக வாழ்க்கையின் கொடிய அச்சுறுத்தல்கள்...

பின்னாலேயே தொக் தொக்கென்னு ஓடிவந்து கொண்டிருந்த சுப்பிரமணி ஓரிடத்தில் சித்தப்பாவைக் கடந்தான். 'நா முன்னாலேயே போறேன் சித்தப்பா' என்று கூறி விட்டு... அம்பாகப் பாய்ந்தான்.

அவனுக்குள் ஒரு குற்ற உணர்வு. ஐயாப்பா சாகிற போது பக்கத்தில் இருக்காமல் போய்விட்டோமே என்கிற வருத்தம்.

"ஐயாப்பா... என்ன சொல்ல நினைத்திருப்பாரோ...? பேரனைக் காணோம்னு தேடியிருப்பாரு. பார்வையாலேயே துழாவியிருப்பாரு... ஏமாத்தத்தோட கண்ணை மூடியிருப் பாரோ..."

நினைக்க நினைக்க அவனுக்குள் குமுறிக்கொண்டு வந்தது. விசும்பி விசும்பி அழுதுகொண்டே ஓடினான். 'ஐயாப்பா...ஐயாப்பா' என்று புலம்பிக்கொண்டே ஓடினான்.

அவனைச் சுற்றிலும் காடுகள் தாலியறுத்த விதவை போல சோகமுற்று வெறுமையாக் கிடந்தன. வறட்சியில் வளர்கிற பனைமரங்கள்கூட பட்டுக்கிடக்கிறது. மழையில்லாக் கொடுமை. காடு பூராவும் தீயாய்ப் பற்றியெரிகிறது.

அவனிடம் ஐயாப்பா... போட்ட கதைகள் கொஞ் சமா? அறிவுரைகள் கொஞ்சமா? விடுகதைகள் போடுவார். அதற்கு அவர் 'அழிப்பான்கதை' என்று பேர் சொல்லுவார். இவனால் அழிக்கவே முடியாது.

சொல்வார், சொல்லிவிட்டுச் சிரிப்பார்.

"இந்த அழிப்பான் கதையெல்லாம் உங்களுக்கு யாரு சொன்னது. ஐயாப்பா?"

"சிலது பெரியாளுக சொன்னது. சிலது நானே உருவாக்குனது."

அவர் பெரிய மேதையாக அவனுக்குத் தோன்றுவார்.

சம்சாரித்தனத்தின் மேன்மையைச் சொல்வார். பருத்திக் காட்டில் வெடித்துச் சிரிக்கிற சட்டைத்துணிகதை சொல்வார். கிராமத்துக் கண்மாய் வயற்காட்டில் நடக்கிற பெரிய பெரிய பணக்கார விருந்துகளைச் சொல்வார். தான்ய வகைகளிலிருந்து வருகிற ஹார்லிக்ஸ் போன்ற டானிக் மர்மங்களைச் சொல்வார்.

நாகரிக உலகம் முழுவதுமே சம்சாரித்தனத்தை நம்பித் தான் நடக்கிற நிஜத்தை விலாவாரியாக விளக்குவார்.

சம்சாரித்தனத்திற்கு சர்க்கார் தந்திருக்கிற சாபங்களை யும் சொல்வார்.

விளை பொருளுக்கு விலையில்லாமல் போகிற கொடுமை. விதை, பூச்சிமருந்து. இவற்றில் நடக்கிற கொள்ளை. விவசாயத்தை ஒரு தொழிலாகவே மதிக்காத சர்க்காரின் அவலம்.

சம்சாரிகளை நாசம் பண்ணி முதலாளிகள் நடத்துகிற கொள்ளை. சர்க்காரும் அதற்கு சப்போர்ட்டாக இருந்து நடத்துகிற கூத்து...

ஐயாப்பா எதைத்தான் சொல்லாமல் விட்டார். சுப்ர மணிக்குக் கேட்கக்கேட்க ஆச்சர்யமாக இருந்தது. ஆலமர விதையிலிருந்து பிரபஞ்சம் வரைக்கும் சகலமும் அவருக்கு அத்துப்படி. சகலத்தைப் பற்றியும் பேச அவரால் முடிந்தது ஆச்சர்யமாக இருக்கும்.

குஜராத்தில் போலீஸ்காரர்கள் நடத்திய போராட்டம்... தமிழ்நாட்டில் நடந்த போராட்டங்கள்... நயினார்தாஸ் விட்டுச் சென்ற போலீஸ் போராட்டத்தைபிரிட்டோ எடுத்து நடத்தியது.

வாத்தியார்கள் போராட்டம். கல்லூரி ஆசிரியர்கள் போராட்டம்.

ரயில்வே தொழிலாளர்கள் போராட்டம்...

அப்போது சுப்பிரமணி கேட்பான்.

"சம்சாரிகள் மட்டும் போராடவேயில்லியா?"

"போராடுனாக, இன்னும் போராடணும். விடாமப் போராடணும். சம்சாரித் தொழிலுக்கு ஒரு கௌரவம் வர்றவரைக்கும் போராடணும். வேற வேற உத்யோகத்துக்குப் போனவுக கூட சம்சாரித்தனம் செய்யப் பிரியப்பட்டு வர்ற அளவுக்கு கௌரவம் வரணும். கட்டுபடியாகிற தொழிலாக சம்சாரித்தனம் மாறுற வரைக்கும் போராடணும். போராடிச் செயிச்சிருக்கிற மக்களைப் பாத்து, சம்சாரிகளும் ஒத்துமையா போராட்டம் நடத்தணும். நாட்டையே மாத்தி செழிப்பாக்குற வரைக்கும் போராடணும். அப்படிப் போராடுற துணிச்சலோட சம்சாரித்தனமும் செய்யணும். இப்படி எத்தனை எத்தனையோ..."

இவனது மன உலகத்தையும், அறிவு உலகத்தையும் விஸ்தரிக்கிற மாதிரி என்ன என்னவோ... செய்திகள். சம்சாரிக்குரிய வைராக்யத்தோடு சொல்வார்...

அந்த ஐயாப்பா... செத்துப் போய்விட்டார். ஒரு உலகமே தனது சன்னல்களைச் சாத்திக் கொண்ட மாதிரி யிருக்கிறது சுப்பிரமணிக்கு.

மறுநாள் மதியமாகி விட்டது.

இன்னும் தூக்கவில்லை. வீட்டைச் சுற்றிலும் பெரியாள்கள்... கூரை நிழல்களில் உட்கார்ந்திருந்தனர். காரியங்கள் நடந்து கொண்டிருந்தன. எல்லாருக்கும் தாக்கல் போயாகி விட்டது. பொன்னையா தலைப்பிள்ளை. அவன் கூட தாக்கல் அறிந்து காலையில்தான் வந்து சேர்ந்தான்.

ஜனங்கள் முகத்தில் ஒரு துக்கம். ஜம்புலிங்கம் இறந்ததைப் பற்றிய துக்கமல்ல... இப்படியோர் வறட்சிக்

காலத்திலே மண்டையைப் போட்டு விட்டாரே என்கிற துக்கம்...

நீர்மாலைக்குப் போய்விட்டு வந்தார்கள். ஈரத்துணி, பூணூல், அருகம்புல் மோதிரம், கையில் குடம், இந்தக் கோலத்துடன் ராமையா,. சுப்பிரமணி மற்றும் பேரர்கள்... நாவிதன் சங்கை ஊதிக் கொண்டு போனான்.

இவர்கள் போவதற்குள் பிரேதம் குளித்து ரெடியாகி விடும். போனவுடன் தூக்கிவிடுவார்கள்.

தெருவுக்குள் நுழைந்தால்...வீடு முழுக்கப் பெண்கள் கூட்டம். கூட்டத்திற்கு நடுவில்...

ஐம்புலிங்க நாடாரின் ஏர்க் கலப்பையைப் போட்டு கோடாலியால் உடைத்துக் கொண்டிருந்தான் ஒருவன், விறகுக்காக.

சுப்பிரமணியின் பார்வையில் பட்டது. உயிரே உறைந்து போகிறமாதிரி 'வீல்'லென்று கத்திக் கொண்டு ஓடி வந்தான்.

"ஐயய்யோ... கலப்பையை உடைக்காதீக... உடைக்கா தீக... ஐயய்யோ உடைக்காதீக..." ஒரே ஓட்டமாக ஓடி வந்து கலப்பையின் மேல் வந்து படுத்துக்கொண்டான். மொத்தக் கூட்டமே திகைத்தது.

"கலப்பையை உடைக்காதீக... உடைக்கக் கூடாது. உடைக்க விடமாட்டேன்..."

மொத்தக் கிராமத்தின் திகைப்பு, சில கணங்கள் தான். 'ஏலேய்... வெறகுக்கு ஒன்னும் இல்லேடா... வேணும்லே? தீச்சட்டிக்குக் கூட வெறகு இல்லே' ஒரு பெரியவர் அவனைச் சத்தம் போட்டார். மற்றவர்களுக்கெல்லாம் சிறுவனின் காரியம், அதிகப்பிரசங்கித்தனமாகப்பட்டது. வயசுக்கு மீறின காரியம் என்றுபட்டது. எரிச்சலில் முணு முணுத்தது.

"ஆமா... பெரியகலப்பை. வெவசாயம் இல்லே. கலப்பை எதுக்கு இனி? வெறகுக்காச்சும் ஆகட்டுமே."

"ஆமா...முளைச்சு மூணு எலை விடலை. அதுக்குள்ளே இம்புட்டு அதிகப்பிரசங்கித்தனமா?"

"அதுதானே? பொன்னையாவுக்கு இல்லாத அக்கறையும் கரிசனமும் இந்தப் பொடிப்பயலுக்கு எதுக்கு? எல்லாம்... ஐம்புலிங்க நாடாரு குடுத்த செல்லம்."

"பொன்னையாவும் புள்ளையை வளர்க்கத் தெரியாம வளர்த்துட்டான்...' இதெல்லாம் பொன்னையா காதில் விழுந்தது. கிடாயை கலப்பையில் கட்டியதற்காக ஐம்புலிங்கம் போட்ட சண்டையும், பேசிய வார்த்தைகளும் ஞாபகத்திற்குள் நெருப்பாக உராய்ந்தன.

அதே வாரிசாக... இந்தச் சின்னப்பயல்!

கோபத்தில் வேகமாக முன்னேறி... ஒற்றைக் கையால் அவனை அலாக்காய்த் தூக்கினான்.

"ஏலேய்... பேசாம நாய் போல கெட. பெரியாள்களெல்லாம் இருக்காக. அவுக பாத்துக்கிடுவாக" ரௌத்ர நெருப்பாய் கனன்ற அய்யா முகத்தைப் பார்த்த சுப்பிரமணி அரண்டு போனான். பொன்னையா அடி உதட்டைக் கடித்து, கண்கள் தெறித்துப் போக, கோபமாய் முழித்தான் அய்யனார் முழி.

அரண்டு போய்விட்டான், சுப்பிரமணி.

கோடாலி ஓங்கி விழுகிற சத்தம். ஐயாப்பாவை கிடத்திப் போட்டு நெஞ்சில் மிதித்து மண்டையில் கோடாலியைப் போடுகிற மாதிரியோர் பிரமை...

அவனுள் துடிக்கிற வேதனை...

"ஐயாப்பாவின் கனவு... இலட்சியம்... அதன் புனித அடையாளம் இந்தக் கலப்பை."

சிறுவனின் நெஞ்சு தடக் தடக்கென்றது.

'கோடாலியை ஓங்கி ஓங்கிப் போட. கலப்பையும் ஏர்ப் பிடியும் சிறாய் சிறாயாகச் சிதறியது.

சுப்பிரமணியின் மனத்துடிப்பை, தவிப்பை பொருட் படுத்தாமல்... வறட்சியின் கொடிய பிடியில் சிக்கிய கிராமம் தன் போக்கில் காரியத்தை நடத்தியது. காரியத்தின் காலடியில் சிறாய் சிறாயாக ஒரு முதியவரின் கனவு, ஒரு சிறுவனின் லட்சியம்.

தூரத்தில் போய் ஒரு மரச்சிறாய் தெறித்து விழுந்தது. சுப்பிரமணி அரவமில்லாமல் நகர்ந்து பூனை போலப் பம்மினான்.

அந்த விறகுத்துண்டை எடுத்துக் கொண்டு வீட்டுக்குள் ஓடினான். பள்ளிக்கூடத்து பைக்கட்டுக்குள் அதை அவசர மாய்த் திணித்தான்.

மறுபடியும் கூட்டத்திற்குள் வந்து நின்று கொண்டான். அவன் மனசில் ஓர் ஆறுதல்.

ஐயாப்பாவின் கனவும் நினைவும் அவனுடனேயே இருக்கும் இனி! யாரும் பறித்துவிட முடியாது இனி! மரச்சிறாயின் வழியில் இவன் நடப்பதை யாரும் தடுத்துவிட முடியாது... இனி!

●●●

## பிற்சேர்க்கைகள்

(எழுத்தாளருடன் நேர்காணல்)

# என் கிராமமே எனக்கு எல்லாம்

ஐந்தாம் வகுப்புடன் தனது பள்ளிப் படிப்பை முடித்துக் கொண்டவர் அவர். ஆனால் அவருடைய கதைகள் இன்று பல்கலைக்கழக அளவில் விரும்பிப் படிக்கப்படுகின்றன. இத்தகைய முரண்பாடுதான் **மேலாண்மை பொன்னுச்சாமி** யின் எழுத்துக்களின் பலமாக அமைந்து அவரைப் பின் தொடர்ந்து வருகிறது. அவருடைய கிராமம் அமைந்திருக்கும் மாவட்டத்தில் பல்கலைக் கழகம் எதுவும் கிடையாது.

பொன்னுச்சாமி புகழ்பெற்ற எழுத்தாளர். தனது மாவட்டத்தின் பின்தங்கிய நிலையை அறிந்துவைத்துள்ள வல்லுநர் என்ற சிறப்பும் அவருக்கு உண்டு. இராமநாதபுர மாவட்டம் மூன்றாகப் பிரிக்கப்படாமல் ஒன்றிணைந்து இருந்த காலத்தில் மேலாண்மறைநாடு என்ற ஓர் ஒதுக்குப் புறமான கிராமத்தில் பொன்னுச்சாமி பிறந்தார். தனது மாவட்டம் இதுவரை ஏன் முன்னேறாமல் அப்படியே இருக்கிறது என்பதை இவர் எடைபோடுகிறார். கடந்த 21 ஆண்டுகளாக அவர் எழுதிவரும் ஒவ்வொரு சிறுகதையும் இராமநாதபுர மாவட்டத்தைப் பற்றியதாகவோ, இராமநாதபுர மாவட்டத்தில் நடக்கும் நிகழ்ச்சியாகவோதான் இருக்கும்.

கல்கியில் பரிசு பெற்ற எழுத்தாளரான பின்னரும், முற்போக்கு எழுத்தாளர் சங்கத்தின் குறிப்பிடத்தக்க எழுத்தாளரான பின்னரும் நகரவாசியாக இடம்பெயராமல் ஒதுக்குப்புறமான தனது குக்கிராமத்திலேயே பொன்னுச்சாமி வாழ்ந்து வருகிறார். அங்கிருந்து இடம்பெயர்வது தன்னுடைய எழுத்துக்கு ஊறுவிளைவிக்கக்கூடும் என்பது அவருடைய கருத்து.

அவரைச் சந்திப்பதாக ஏற்பாடு செய்திருந்த நேரத்திற்கு ஐந்து மணி நேரம் கழித்துத்தான், நள்ளிரவு கழிந்து ஒன்றரை மணிக்குத்தான், அந்த கிராமத்தை என்னால் சென்றடைய முடிந்தது. அவ்வளவு அல்லல்பட்டுத் தேடிக் கண்டுபிடிக்க வேண்டிய ஒதுக்குப்புறமான ஒரு குக்கிராமம் மேலாண்மறை நாடு. அந்த அகாலத்தில் சந்தித்து நேர்காண அவரை எழுப்பிய சந்தடியில் ஊரே விழித்துக்கொண்டது என்பதையும் நான் குறிப்பிடவேண்டும். அந்த அகாலத்திலும் அவருடன் நேர்காணல் நிகழ்ந்தது அவரை நெகிழச்செய்தது. இராமநாதபுர மாவட்டத்தின் வறுமையைப் பற்றி நன்கறிந்த வல்லுநர் என்று நான் அவரைக் குறிப்பிட்டபோது அவர் மேலும் நெகிழ்ச்சியடைந்தார்.

தனது மாவட்டத்தைக் குறித்து அவர் வெளியிடும் கருத்துக்கள் சிந்திக்க வைப்பவை.

1910ஆம் ஆண்டு உருவான இராமநாதபுர மாவட்டம் தற்போது மூன்றாகப் பிரிக்கப்பட்டிருக்கிறது. பிரிக்கப்படாத மாவட்ட எல்லை என்று கொண்டால் இந்த மாவட்டத்திற்கு இரண்டு அமைச்சர்கள் இருக்கிறார்கள். இன்று வரையிலும் இந்த மாவட்டத்தில் ஒரு மருத்துவக் கல்லூரிகூட இல்லை; அரசு பொறியியல் கல்லூரியும் இல்லை. பின்தங்கிய நிலைக்குப் பெயர் பெற்ற இந்த மாவட்டத்திற்கு ஒரு

பல்கலைக் கழகம் வேண்டும் என்ற கோரிக்கை இதுவரை எழுந்ததில்லை. சமீப காலத்தில்தான் அரசியல் கட்சிகள் தங்கள் தேர்தல் அறிக்கைகளில் இந்தக் கோரிக்கையைச் சேர்த்துள்ளன. அடிப்படைக் கல்வியைப் பெறுவதற்கே இன்னும் இரண்டு தலைமுறைகள் ஆகும்.

'கோரிக்கைகள் வைப்பதும் மனுக்கள் அனுப்புவதும் கூட இம்மாவட்ட மக்களுக்கு எளிதான காரியமாக இருந்த தில்லை. 83 ஆண்டுக் காலமாக இந்த மாவட்டத்தின் தலைநகர் வெளியே வேறொரு மாவட்டத் தலைநகரமான மதுரையாகத் தான் இருந்தது. 1985—ஆம் ஆண்டே இராமநாதபுர மாவட்டம் வேறாகப் பிரிக்கப்பட்டு விட்டாலும் இம்மாவட்டத்திற்கான நீதிமன்றங்கள் மதுரை நகரில்தான் அமைந்திருந்தன.

நிர்வாகம்எப்போதுமேமக்களிடமிருந்துமிகத்தொலைவி லேயே இருந்திருக்கிறது. அதிகாரிகள் எட்டத்திலேயே இருந்து வந்தனர்: அந்தந்தப் பகுதிகளின் பிரச்சனைகளை அறிந்து கொள்ளாமலேயே ஒதுங்கிய நிலையில் அவர்கள் இருந்தார்கள். தற்போது நீதிமன்றங்கள், மாவட்ட ஆட்சியர் அலுவலகம், பிற நிர்வாக அலுவலகங்கள் அனைத்தும் மாவட்ட எல்லைக் குள்ளேயே நிறுவப்பட்டு விட்ட போதிலும் அடிப்படைப் பிரச்சனைகளைத் தீர்த்து வைப்பதில் அவை அனைத்தும் ஒதுங்கியே இருக்கின்றன. அவற்றின் கட்டமைப்பு அப்படி.

வருமானத்தைக் கணக்கில் கொண்டால் இம்மாவட்டம் மிகவும் பின்தங்கிய நிலையில் இருக்கிறது. தமிழகத்தின் பிற மாவட்டங்களுடன் ஒப்பிடும்போது இதன் வருமானம் ஏறத்தாழ இருபது விழுக்காடு குறைவுதான்.

இது ஜமீன்தார்கள் வாழ்ந்த இடம். ஜாதி அடிப்படை யில் நாட்டாண்மை நடந்து கொண்டிருந்த பகுதி. இங்கு நிலவும் பிற்போக்கு நிலைமைக்கு ஜாதி வேறுபாடு கணிசமான

பங்கேற்றிருக்கிறது. வருவாய் அமைந்த வேலைகளுக்கான ஏற்பாடுகள் செய்யும் வாய்ப்புகள் இருந்தும் அப்போதைய பிரிட்டிஷ் அரசாங்கம் அதற்கான முயற்சிகள் எடுத்துத் தீர்வு எதுவும் காணவில்லை. உயிர் பிழைத்திருக்க நிறையப் பேர் அடாத வழிமுறைகளில் ஈடுபட்டனர். இன்றைக்கும் இந்த மாவட்டத்தில் வன்முறை என்பது சர்வசாதாரணம்; அதுவும் ஜாதி அடிப்படையில்.

'நிலச் சீர்திருத்தம் என்பது இங்கே அர்த்தமற்றது. வெறும் வாய்ப்பந்தல் விவகாரம்தான். எல்லோரும் நினைத்துக் கொண்டிருப்பதற்கு மாறாக,இந்த மாவட்டம் வேளாண்மைக்கு ஏற்ற வளம் கொண்டதுதான். ஆனால் இதை மனதில் கொண்டு யாராவது திட்டம் தீட்டியிருக்கிறார்களா ? 80 விழுக்காட்டிற்கு மேலாக இராமநாதபுர மாவட்டத்து நில உடைமையாளர்கள் தலா இரண்டு ஏக்கர் பரப்பளவுக்குக் குறைவாகத்தான் நிலம் வைத்திருக்கிறார்கள். இவை பெரும்பாலான காரணங்களால் பயன்படுத்தப்படுவதில்லை; குறிப்பாக வேளாண்மைக்கு.

'வேலையும் அதன் தன்மையும் அந்தந்தப் பகுதியின் இயல்பை வெளிப்படுத்துகின்றன. சிமென்ட் ஆலை அமைந்தால் அதன் விளைபொருள் சிமென்ட் மட்டும் அல்ல; குறிப்பிட்ட தன்மையான வேலைவாய்ப்பும் விளைபொருள்தான். ஆனால் அதற்கெல்லாம் அடிப்படையாக இட அமைப்பு பொருந்தியிருக்க வேண்டும். வேலை வாய்ப்புகளின் அடிப்படையில், கிடைக்கப்பெறும் மூலப்பொருள்களின் அடிப்படையில், அத்தகைய பூகோள ரீதியான திட்டங்கள் போடப்படுவதில்லை. நிரந்தரமான, நடைமுறைக்கேற்றதான வேலை வாய்ப்புகளை உருவாக்குபவையாக அந்தத் திட்டங்கள் அமைய வேண்டும்.

‘பொருளாதார ரீதியில் ஆண்டு முழுவதும் வேலை வாய்ப்புப் பெறுவோர் இங்கே 40 விழுக்காட்டுக்கும் குறைவாகவே இருக்கிறார்கள். ஆண்டின் பெரும்பாலான மாதங்களில் மக்களில் பெரும்பகுதியினர் ஏனோதானோ வேலைகளைச் செய்து தங்கள் வயிறுகளைக் கழுவிக் கொள் கிறார்கள். ஒரு வகையில் இங்கு வேளாண்மை பலனளிக் காததற்குக் காரணம் நீர்நிலைகளை நன்கு உருவாக்கிக் கொள்ளாததுதான் ஆகும். அடுத்ததாக. தொழில் முன்னேற்றம் சார்ந்த ஆலைகள் இங்கு இல்லை. வேலைவாய்ப்புக்களைப் பெருக்க வேண்டும் என்ற பிரக்ஞையே இல்லை. தமிழ்நாட்டின் சராசரி உற்பத்தித் திறனைக் கணக்கிடும்போது இங்கு ஒரு தொழிலாளியின் உற்பத்தித் திறன் 20 விழுக்காட்டுக்கும் குறைவாகவே இருக்கிறது.

‘பொருளாதார அடிப்படையில் பின்தங்கியோரையே இந்த மாவட்டம் அதிகம் கொண்டிருக்கிறது. மொத்த மக்கள் தொகையில் 20 விழுக்காட்டினர் தாழ்த்தப்பட்ட வகுப்பினரும் பழங்குடியினருமே. அவர்கள் மட்டும் அன்றி. பிற்படுத்தப்பட்ட வகுப்பினரும் பெரும்பகுதியாக இருக்கிறார்கள். வேலை யில்லாத் திண்டாட்டம் அவர்கள் எல்லோரையும் சமமாக்கி விட்டாலும், அதன் மற்றொரு விளைவாகச் சுரண்டும் மனப் பான்மையை வளர்த்துவிட்டிருக்கிறது.’

லேவாதேவிக்காரர், மிளகாய் வற்றல் விவசாயி, தொடர்ந்து சீரழிக்கும் வறட்சியும் அதன் பின்விளைவான புலப்பெயர்ச்சியும், வேலையில்லாத திண்டாட்டம் ஆகியன அனைத்தும் மேலாண்மை பொன்னுச்சாமியின் கதைப் பொருள்களாகியிருக்கின்றன. கீழ்மட்டத்திலிருந்து மேல் மட்டம் வரையிலுமான அவருடைய உன்னிப்பான பார்வை, குறிப்பாகத் தன்னுடைய கிராமத்தின் பின்னணியில், அவரு

டைய ஆராய்ச்சித்தன்மையான அணுகுமுறையை வெளிப் படுத்தி நம்மை வியக்க வைக்கிறது. எடுத்துக்காட்டாக ஒன்று—

'புதியரகமிளகாய்விதைகளைவிவசாயிகள்பயன்படுத்து கிறார்கள். அந்த விதைகள் எங்கிருந்து வருகின்றன என்பது எனக்குத் தெரியாது. ஆனால் விவசாயியின் பொருளாதாரத் தைத் திசைதிருப்பியிருக்கின்றன என்பது மட்டும் தெரியும். இந்த விதைகள் தற்காலிகமாக நிறைய விளைச்சலைத் தரலாம். ஆனால் அதற்காக அவர்கள் அதிகப்படியான உரங்களையும் வேறு பல இடுபொருள்களையும் பயன்படுத்த நேர்கிறது. அவர்கள் இதன் மூலமாக நிலத்தை நச்சுப்படுத்துகிறார்கள் என்பதையும் கூறவேண்டும். கொஞ்ச காலத்திற்குப் பிறகு விளைச்சலின் அளவு இறங்குமுகம் காண்கிறது. அந்த வகை விதைகளைப் பயன்படுத்துவோருக்கு உற்பத்திச் செலவு இப்போது அதிகமாகி விட்டது.'

இப்படிச் செல்கிறது அவருடைய பார்வை.

மேலாண்மை பொன்னுச்சாமியின் ஆறு சிறுகதைத் தொகுப்புகளும் ஒரு நாவலும் இதுவரை வெளிவந்தி ருக்கின்றன. இவை அனைத்தும் நல்லது நடக்கும் என்ற நல்லெண்ண நோக்கை வலியுறுத்துகின்றன. இதற்குச் சான்றாக இவருடைய ஒரு சிறுகதைத் தொகுப்பின் தலைப்பு 'மானுடம் வெல்லும்' என்று அமைந்திருப்பதைக் கூறலாம்.

"இங்குள்ள மக்களுக்குப் போராடும் உணர்வு இருக்கிறது. அவர்கள் தாங்களாகவே இந்த மாவட்டத்தின் சூழலை மாற்றிக் காட்டுவார்கள். ஆனாலும் நாம் ஒதுங்கி நின்று வேடிக்கை பார்த்துக் கொண்டிருக்க முடியாது. நாமும் அதற்காக உழைத்தாக வேண்டும்."

அவருடைய நம்பிக்கையைக் கவனித்தீர்களா? ஆனால் அதுவரைக்கும் அவர் தனது மாவட்டத்தின் சூழலை மட்டும்தான் எழுதிக்கொண்டிருப்பாரா?

அவர் ஒரு பிரகடனம் கொடுத்திருக்கிறார். அது சிந்திக்க வைக்கும் தன்மையது..

'என் எழுத்துக்கு நான் உண்மையாக இருக்க வேண்டும். நான் எனது கிராமத்து நடைமுறைகளுக்கு நேர்மையாக நடந்துகொள்வதனால் உத்தரப் பிரதேசத்திலுள்ள ஒரு கிராமத்துக்கும் நான் நேர்மையானவனாகவே இருந்து எழுத்துக்களைப் படைப்பதாக இருக்கும்.'

"டைம்ஸ் ஆஃப் இண்டியா"
*19—7—1993* இதழின் அனைத்துப் பதிப்புகளிலும்
வெளியான நேர்காணலை தமிழாக்கம்: **இளம்பாரதி**
நேர்காணலை நிகழ்த்தியவர்: **பி. சாய்நாத்**

## நூலாசிரியர் பெற்ற பரிசுகளும் விருதுகளும்

- ஜனரஞ்ஜனி இதழின் சிறுகதைப் போட்டியில் முதல் பரிசு.
- கல்கி சிறுகதைப் போட்டியில் முதல் பரிசு.
- மீண்டும் கல்கி சிறுகதைப் போட்டியில் முதல் பரிசு.
- 'வாசுகி' இதழின் சிறுகதைப் போட்டியில் முதல் பரிசு.
- 'தமிழ் அரசி' இதழின் சிறுகதைப் போட்டியில் முதல் பரிசு.
- 'இதயம் பேசுகிறது' சிறுகதைப் போட்டியில் முதல் பரிசு.
- கல்கி பொன்விழா நாவல் போட்டியில் முதல் பரிசு.
- ஆனந்த விகடன் பவழ விழா ஆண்டில் முத்திரைப் பரிசு பெற்ற சிறுகதைகள் – 6
- முத்திரைப் பரிசு பெற்ற குட்டிச் சிறுகதைகள் – 7
- ஆனந்த விகடன் பவள விழா ஆண்டில் ஓவியத்திற்கான சிறுகதைப் போட்டியில் முதல் பரிசு.

- விகடனில் முத்திரைப் பரிசுகள் பெற்ற மொத்தச் சிறுகதைகளையும் வாசகர்கள் தேர்வுக்கும், ஆய்வுக்கும் விட்டபோது முதலிடம் பெற்றது, இவரது 'பூமனசுகள்.'
- விகடன் இதழின் 'தண்ணீரைத் தேடி' எனும் பொதுத் தலைப்பில் நடந்த சிறுகதைப் போட்டியில் முதல் பரிசு 25,000 பெற்ற சிறுகதை, 'பூமனச்சுனை.'
- இலக்கியச் சிந்தனையின் மாதாந்திரப் பரிசுகள் – 8 ஆண்டின் முதல் பரிசு – 1

## விருதுகள்

- கோவையில் நடந்த அகில இந்திய மாநாட்டில் இந்திய ஜனநாயக வாலிபர் சங்கம் அளித்த 'இலக்கியச் சாதனை' விருது.
- 'பூச்சுமை' சிறுகதைத் தொகுப்புக்கு 'லில்லி தேவசிகாமணி விருது.'
- 'பூக்காத மாலை' தொகுப்புக்கு அனந்தாச்சாரி விருது.
- 'உயிர்க் காற்று' தொகுப்புக்கு பாரத ஸ்டேட் வங்கி விருது.
- 'மனப்பூ' தொகுப்புக்கு தமிழக அரசின் விருது.
- 'ஒரு மாலை பூத்துவரும்' தொகுப்புக்கு மீண்டும் தமிழக அரசின் விருது.
- 'மானாவாரிப்பூ' தொகுப்புக்கு அமரர் சி.பா. ஆதித்தனார் விருது.

- 'அன்புவாசம்' தொகுப்புக்கு பாரத ஸ்டேட் வங்கி விருது, திருப்பூர் தமிழ்ச் சங்க விருது.
- 'ஊர் மண்' நாவலுக்கு பாரத ஸ்டேட் வங்கி விருது.
- அருட்திரு அமுதன் அடிகளாரின் இலக்கிய விருது.
- வடஅமெரிக்க தமிழ்ச் சங்கப் பேரவையின் 'மாட்சிமைப் பரிசு' எனும் இலக்கிய விருது.
- சென்னை கம்பன் கழக விருது.
- இவரது படைப்புகளை ஆய்வு செய்து எம்.ஃபில். பட்டம் பெற்றோர் – 18
- ஆய்வில் – 16
- பிஎச்.டி. பட்டம் பெற்றோர் – 4
- ஆய்வில் – 5
- இப்போதும் கிராமத்திலேயே இருப்பு.

## குறிப்புக்காக

திருவரசு புத்தக நிலையம்